Regd. No. M. 2569 நாயக மலர்

1240

ஹிபாஜத்துல் இஸ்லாம்

மலர் 9

இதழ் 5

செந்தமிழ் மாத சஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, ஸபர் மீ 1938ஞூ மே மீ

18 MAY 1938
MADRAS

1. அல்குர்ஆன் ... 81
2. அல்ஹதீது ... 83
3. மௌமூர்நபிவிழா ... 85
4. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கிருந்த விசேஷ மகத்துவங்கள் ... 88
5. நமது டெபுடேஷன் ... 96
6. உண்மை மத உரைக்கல் ... 100
7. நமது தொழுகை ... 104
8. முற்காலத்துப் பெரியார்கள் ... 106
9. சீன முஸ்லிம்களது வீரம் ... 109
10. செய்தித் திரள் ... 111
11. இந்திய முஸ்லிம்களின் தேசிய முறை ... 114
12. ஓர் அரிய சம்பாஷணை ... 116
13. நமது சுகாதார நிலை ... 119

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. C. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பிணங்கு, சிங்கப்பூர், மலாயா, பர்மா முதலிய வெளிநாடுகளுக்கு	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAY 1938
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 9	ஹிஜ்ரி 1357 ஸபர் மீ 1938ஆம் மே மீ	இதழ் 5

அல்குர்ஆன்

மேலும், உங்களுக்கு—(அதாவது உங்களில், அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விரும்புகிறவர்களுக்கு—அல்லாஹ்வின் ரஸூலில் அழகிய முன்மாதிரி இருக்கிறது. (திரு குர்ஆன்.)

சோதரீர், எல்லாம் வல்ல இறைவன் மனிதராகிய நமக்கு நேர்வழியினைக் காண்பிப்பான்வேண்டி தனது கருணையால் அளித்துள்ள திருமறையாம் புருக்கானுல் ஹமீத் என்னும் குர்ஆன் மஜீதில் மேற்கண்ட ஆயத்தின் மூலமாக, "நமது நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களில் நமக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது" என்பதாகக் கூறியுள்ளான். இவ்வழகிய முன்மாதிரி யாது? இதனை நாம் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற விஷயத்தைக் கவனிப்போம்: நம்மைப் படைத்த ஏகநாயன் ஹக்கு சுப்ஹானஹுவதஆலா மற்றெல்லா சிருஷ்டிகளையும் விட நம்மைச் சிறந்தவர்களாகப் படைத்து, நமக்கு நன்மை தீமைகளை ஏற்படுத்தி அவைகளுக்குள்ள பயனை சம்பூரணமாக அளிப்பதற்கென ஒரு தினத்தையும் குறிப்பிட்டுள்ளான். இத்தினத்தில் நாம் நன்மைப் பயனையும், அவனது திருப்தியையும் அடையவேண்டுமாயின் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நாம் முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும். அதாவது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை நாம் பின்பற்றவேண்டும்; அவர்கள் கூறியுள்ள ஹிதோபதேசங்களின்படி நடந்து கொள்வதுடன், அவர்களது வாழ்க்கை முறையை முன்மாதிரியாக வைத்துக் கொள்ள வேண்டும். இதனைக் குறித்துத்தான் இத்திருமறையின் மற்றொரு ஆயத்தில் "நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கிறவர்களாக இருப்பீர்களாயின், என்னை நீங்கள் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான்; இன்னும் உங்களது பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான் என்று நீர் கூறுவீராக" என்பதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை இறைவன் நமக்கு முன்மாதிரியாக ஏற்படுத்தி இருப்பதானது அவர்களது சொல்,

செயல், குணம் ஆகியவைகளை நாம் பின்பற்றி நடக்கவேண்டும் என்பதற்காகவேயாகும்.

தவிர, மனிதர்கள் பால் அவன் கொண்டுள்ள கருணையின் காரணமாக அவன் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை பயக்குவதற்காக திருகுர்ஆனை வழிகாட்டியாக அளித்துள்ளான். எனவே, திரு குர்ஆனுக்கு "ஹுதன்" (வழிகாட்டி) என்றும் மற்றொரு சிறப்புப் பெயருண்டு. இதே விதக் கருத்தில் இந்தப் பதம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் உபயோகிக்கப்படுகிறது. ஆகவே, 'ஹுதன்' என்ற பதத்திற்கு திருகுர்ஆன் என்றும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் என்றும் வியாக்யானம் செய்யப்படுகிறது. உண்மையிலேயே, இறைவன் திருகுர்ஆனை நமக்கு வழிகாட்டியாக அருளியதுபோல, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களையும் வழிகாட்டியாக அனுப்பியுள்ளான். இதற்குக் காரணம் என்னவெனில், உலகில் மக்கள் தங்களது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காகவோ அல்லது ஒரு வித்தையைக் கற்றுக் கொள்வதற்காகவோ அல்லது ஒரு தொழிலில் நிபுணத்துவத்தையுண்டாக்கிக் கொள்வதற்காகவோ இரண்டு விதசாதனத்தை முக்கியமாக உபயோகித்துக் கொள்கின்றனர். உதாரணமாக மோட்டார் தொழிலை ஒருவர் கற்றுக் கொள்வதாக வைத்துக்கொள்வோம். அவர் புத்தகத்தின் மூலமாக மோட்டார் தொழிலைப்பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்வது மட்டிலும் போதாது. மோட்டார் தொழிற்சாலையில் சேர்ந்து பிரத்தியக்ஷமாக அத்தொழிலைக் கொஞ்ச காலத்திற்குச் செய்து பயிற்சி பெறவேண்டும். இல்லையேல், அத்தொழிலில் சரியான நிபுணத்துவத்தை அடைய முடிவதில்லை. இதுபோல இறைவன், நாம் இம்மை மறுமைப் பேறுகளை சம்பூரணமாக அடைவதற்காக திருகுர்ஆனை நமக்கருளி, அதில் நாம் நடக்கவேண்டிய வழி முறைகளைக் கூறியுள்ளான். என்றாலும், இவைகளை நாம் அனுஷ்டிக்கும்போது ஏற்படுகிற பல சிக்கல்களை நாம் தவிர்த்துக் கொள்வதற்காக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது இவ்வுலகத்தைய ஜீவியத்தை நமக்கு முன்மாதிரியாக ஏற்படுத்தியுள்ளான். தவிரவும், இவ்விரு விதத்திலும் நாம் அறிவைப் பெருக்கிக்கொள்ள நம்மிலேயே நமக்கு இரு வித சாதனங்களை ஏற்படுத்தி யுள்ளான். ஒன்று நேத்திரம், மற்றொன்று செவி. நேத்திரத்தால் நாம் பார்த்து அறிவு பெற்றுக் கொள்கிறோம். செவியால் நாம் கேட்டு அறிவு பெற்றுக்கொள்கிறோம். ஆகவே, திருகுர்ஆனை செவியால் கேட்டு அறிவைப் பெற்றுக்கொள்வதற்காகவும், நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களது இவ்வுலகத்தைய புற ஜீவிய வாழ்க்கையை நாம் கண்ணால் பார்த்து நமது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், இவைகள் நமக்கு அவனால் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் தான் இறைவன் "உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரில் அழகிய முன்மாதிரி இருக்கிறது" என்று கூறியுள்ளான். ஆகவே, திருகுர்ஆனின் இக்கட்டளைக்கேற்ப நாம் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கையை நமக்கு முன்மாதிரியாகக் கொண்டு நம்முடைய இவ்வுலகத்தைய பேறுகளை அடையக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இக்காலத்தில் தோன்றியுள்ள சிலர் இக்கட்டளையை உணராமல் தங்கள் மனம் போனபடி நடந்து வருகின்றனர். இதனால் அன்னோர் விபரீதமான பலன்களையே அடைய நேரிடும். முற்காலத்தில் நமது பெரியார்களான ஸஹாபிகள், தாபியீன்கள் முதலியவர்கள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறையைத் தங்களுக்கு முன்மாதிரியாகக் கொணடிருந்ததால் அவர்களை உலகம் அப்பொழுதும் போற்றிற்று, இதுபொழுதும் போற்றுகிறது. அவர்கள் எண்ணிக்கையில் மிகச் சொற்பமானவர்களாக இருந்தாலும் அவர்கள் சென்ற விடத்திலெல்லாம் செல்வாக்குப்பெற்று கௌரவிக்கப்பட்டனர்; உலகத்தைய புற அதிகாரங்களெல்லாம் அவர்களுக்கு மிகச் சுலபமாகக்கிடைத்தன. ஆனால், இக்காலத்திலோ முஸ்லிம்கள் உலக ஜனத்தொகையில் 5-ல் 2 பங்குக்கு அதிகமாக இருந்தும் உலகமக்களால் அவமதிக்கப்படுபவர்களாகவும், செல்வாக்கு மதிப்பு கௌரவம் ஆகியவை களில்லாதவர்களாகவும் இருந்து வருகின்றனர். இதற்குக் காரணமென்னவெனில், முஸ்லிம்களாகிய நாம் நமக்குரிய முன்மாதிரியான நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது இவ்வுலகத்தைய புற ஜீவியத்தைப் பின்பற்றாததேயாகும். நாம் கௌரவத்தை இழந்து விட்டோம் என்பதையும், பிறர் நம்மை மதிப்பதில்லை என்பதையும் நம்மவர் உணர்ந்து கொண்டதுடன் நாமிழந்த கௌரவத்தை மறுபடியும் அடைய வேண்டும் என்ற பெரு முயற்சியையும் செய்து வருகின்றனர். இவ்வித நிலைமையேனும் நம்மில் இருப்பதற்கு நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த

வேண்டும். ஆனால், இழந்து விட்ட கௌரவத்தை அடைய முயலும் நமது சகோதரர்கள் சரியான முறையில் செல்லாமல் மேனாட்டிலுள்ள நாஸ்திகர்களையும் பிற மதத்தார்களையும் தங்களுக்கு முன்மாதிரியாகக் கொள்வதால் உலகில் மென்மேலும் கேவலத்தையும் இழிவையும் சம்பாதித்துக் கொள்கின்றனர். ஆகவே, நாம் நமது வழிகாட்டியான வள்ளல் ஹபீப் முஹம்மது (ஸல்.) அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு நடக்கவேண்டும் என்பதை நமது மக்கள் உணரவேண்டும். எல்லாம் வல்ல இறைவன் நமக்கு உதவிபுரிந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முன்மாதிரியாகக் கொள்ள அருள் புரிவானாக—ஆமீன்.

அல்ஹதீது

"தக்வா (அல்லாஹ்வை பயந்து நடப்பது) ஒன்றைக் கொண்டல்லாமல் அறபிக்கு அஜமியின்மீதோ, அஜமிக்கு அறபியின்மீதோ, வெள்ளையருக்கு கருப்பர்மீதோ, கருப்பருக்கு வெள்ளையர்மீதோ விசேஷப் பெருமை இல்லை" என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள்.

இவ்வுலகில் நிகழ்ந்துவருகிற சகலவிதமான போராட்டங்களுக்கும் புறத்தில் பல வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் அந்தரங்கத்தில் உயர்வு, தாழ்வு என்று நம்மவர் பாகுபாடு செய்து நடந்துகொள்வதுதான் முக்கிய காரணமாக இருந்து வருகிறது. தனது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், தனக்கு அவமரியாதை வந்துவிடக் கூடாது என்பதற்காகவுமே பெரும்பாலும் உலகில் சண்டை சச்சரவுகள் நிகழுகின்றன. மனிதர் அனைவருக்கும் ஒரேவிதமான அங்கங்களும், உணர்ச்சிகளுமிருக்கின்றன. இந்தியருக்கு ஒரு வித அங்கமும், ஐரோப்பியருக்கு வேறு வித அங்கங்களுமில்லை. ஐரோப்பியர் வெள்ளையராக இருக்கின்றனர் என்பதற்காக அன்னோருக்கு விசேஷமான கௌரவமில்லை. ஆகவே, வர்ணபேதம், தேசபேதம், குலபேதம் முதலிய பேதங்களை ஒழித்து எல்லா மனிதர்களும் சமம்; ஆனால், மனிதர் அனைவரையும் சிருஷ்டித்துப் போஷித்துக் காப்பவனாகிய அல்லாஹு தஆலாவின் கட்டளை களுக்குக் கீழ்ப் படிந்து அவன் ஏவியதைச் செய்து, விலக்கியவைகளை விட்டு விலகிக்கொள்பவர்கள் தான் கௌரவமானவர்கள்; இத்தன்மை எவரிடமிருக்கிறதோ அவருக்குத்தான் மனித வர்க்கத்தில் மிகக் கௌரவம் என்ற விஷயம் இந்த ஹதீதின்மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த ஹதீதில் கூறப்பட்டுள்ளபடி இன்று உலகம் நடக்கவாரம்பிக்குமானால் உலகில் நடைபெறும் சகல வித போராட்டங்களும் கிளர்ச்சிகளும் தானாக அடங்கிவிடும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள், இந்த ஹதீதில் கூறி இருப்பதற்கேற்ப தங்களது பந்துவென்றும், தங்கள் நாட்டார் என்றும்,ஏழை என்றும், பணக்காரர் என்றும் பாராமல் எல்லோரையும் சமமாக மதித்து நடந்ததால் தான் உலகிலுள்ள எல்லா வகைப் பிரிவினரும் நாயகம் (ஸல்.) அவர்களைப் போற்றிக்கொண்டாடுகின்றனர். 'தக்வா' அதாவது இறைவன் ஏவிய கட்டளைக்குக் கீழ்ப்படிவதுதான் நாயகம் (ஸல்.) அவர்களது பிறவியின் லக்ஷியமாக இருந்தது. நாயகம் (ஸல்.) அவர்களது நடத்தைகள், கிரியைகள் யாவும் இறைவனது கட்டளையின்படியே இருந்துவந்ததால் நாயகம் (ஸல்.) அவர்களை யாவரும் "உலக உத்தமர்" என்று போற்றுகின்றனர். ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் என்ற பெயரை வாங்கிய முஸ்லிம்களாகிய நாம், இந்த ஹதீதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களை மதித்து ஜாதி, தேச, குல பேதங்களை நீக்கி மனித வர்க்கத்திலுள்ள யாவருக்கும் சமத்துவ உரிமைகளை அளித்து, அவர்களிடம் நேசமாக வாழ வேண்டியது அவசியமாகும். ஆனால், ஒரு காரியத்தை மட்டிலும் விட்டுவிடலாகாது. அதா

வது, சமாதானமாக வாழவேண்டும், நேசமாக வாழவேண்டும் என்பதற்காக நாம் "தக்வா" வைக் கை தவற விடலாகாது. தக்வா ஒன்றின் மூலமாகத்தான் சமாதானமாக வாழ முடியும். ஆதலால், பிற மதத்தார் விருப்பத்தை மதித்து தொழாமலும், பிற மதத்தார் பூஜிக்கும் தெய்வங்களை கௌரவித்தும் சிலர் இக்காலத்தில் நடக்கத் துணிகின்றனர். சில பிற மதவாதிகள் முஸ்லிம்கள் தொழுவதைக்கூடத் தடை செய்கின்றனர். மற்றவரிடம் நேசமாக இருக்க வேண்டும் என்பதற்காக இத்தியாதி காரியங்களைச் செய்வதும், இஸ்லாம் மத சம்மந்தமான காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுவதும் கோழைத்தனம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிற மதவாதிகளுடன் இஷ்டமாக இருக்க வேண்டும் என்பதற்காக இறைவனது கட்டளைகளை நிறைவேற்ருமல் தள்ளிவைக்கவில்லை. நாயகம் (ஸல்.) அவர்களது 'தக்வா' உறுதியுள்ளதாக இருந்தது. இறைவனது கட்டளைக்குக் கீழ்ப்படியும் விஷயத்தில் எத்தகைய எதிர்ப்புகளையும் நாயகம் (ஸல்.) அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆகவே, முஸ்லிம்களாகிய நாம் எத்தகை எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் தக்வாவைக் கடைப்பிடித்து ஒழுகுவதுடன் தக்வாவுள்ளவர் எத்தேசத்தவராயினும், எவ்வர்ணத்தாராயினும் அவரைக் கௌரவப்படுத்துவது அவசியமாகும்.

முற்காலத்திலுள்ள முஸ்லிம்கள், தங்கள் குலத்தார் பணக்காரர் என்ற விஷயங்களைக் கவனிக்காமல் தக்வா உள்ள எவரையும் கண்ணியப்படுத்தி வந்ததால் முஸ்லிம்களிடம் இஸ்லாமியசகோதரத்துவ உணர்ச்சி மேலோங்கி இருந்தது. முஸ்லிம்கள் அந்நியோன்யமாக வாழ்ந்தனர். அவர்களை எதிர்க்க மற்றவர்களுக்கு தைரியம்கூட உண்டாகவில்லை. இக்காலத்தில் தக்வா இல்லாததால் இஸ்லாமிய சகோதரத்துவ உணர்ச்சி குன்றி முஸ்லிம்கள் பல கூட்டமாகப்பிரிந்து தங்கள் பலத்தையும்கூட இழந்துவிட்டனர். ஆகவே, தக்வா (தெய்வ பக்தி) நம்மவரில் இன்னும் அதிகமாக உண்டாகும்படிச் செய்ய நம்மவர் ஒவ்வொருவரும் முயலுவது அவசியமாகும்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலும், அவர்களுக்குப் பிறகு "குலபாயே ராஷிதீன்"கள் காலத்திலும் முஸ்லிம் அல்லாதார் இருக்கத்தான் செய்தார்கள். அவர்களுடன் நாயகம் (ஸல்.) அவர்களும் "குலபாயே ராஷிதீன்"களும் அன்பாகவே நடந்து கொண்டார்கள். முஸ்லிம் அல்லாதாருடன் உடன்படிக்கைகள் செய்துகொள்ள வேண்டிய நிலைமையு மேற்பட்டது. நாயகம் (ஸல்.) அவர்கள் மக்கமா நகரைக் கைப்பற்றும் வரை குறைஷியரின் படையெடுப்புக் குன்றவில்லை. அறபியரிலுள்ள அநேக கோத்திரங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவாமலே இருந்து வந்தனர். இவர்களுடன் நாயகம் (ஸல்.) அவர்கள் உடன்படிக்கை செய்திருந்தார்கள். இவர்களுடன் வலியச் சென்று உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியது ராணுவ வசதிகளுக்கு அவசியமாகவு மிருந்தது. அப்படி இருந்தும் மார்க்கக் கட்டளைகளை நிறைவேற்றுவதை நாயகம் (ஸல்.) அவர்கள் விட்டுக் கொடுக்கவில்லை. திரு மக்காவை ஜெயித்த பிறகு நாயகம் (ஸல்.) அவர்களிடம் உடன்படிக்கை செய்து கொள்ள ஏனைய கோத்திரங்கள் தாங்களாகவே முன் வந்தன. இச்சமயத்திலும்கூட மார்க்கக் கட்டளைகளை நாயகம் (ஸல்.) அவர்கள் விட்டுக் கொடுக்கவில்லை. நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பிறகு "குலபாயே ராஷிதீன்"களும் முஸ்லிம் அல்லாதாருடன் மாக வாழ்ந்தனர். முஸ்லிம் அல்லாதாரைப் பார்க்கினும் முஸ்லிம்கள்தான் சிறந்தவர்கள் என்பதாக அக்காலத்தில் சிரியா, பாலஸ்தீனிலிருந்த யூத கிறிஸ்துவர்கள் கருதினர்கள். தங்களது ஜாதியைச்சேர்ந்த கிறிஸ்துவ அரசனை ஹிர்க்கலுக்குவிரோதமாக முஸ்லிம்கள் யுத்தஞ்செய்து கொண்டிருந்த சமயத்திலும் கூட அந்த கிறிஸ்துவர்களுக்கு முஸ்லிம்கள் பால் அபிமானம் குறையவில்லை. யூதர்கள், முஸ்லிம்கள் தாம் ஜெயித்து தங்கள் தேசத்தை ஆள வேண்டும் என விரும்பினர்கள். இவ்விபரம் சரித்திரப் புத்தகங்களில் நிறைந்திருக்கின்றன. ஆனல், அந்நியருடன் சிநேகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தங்களது மார்க்கக் கடமைகளில் எதையும் முஸ்லிம்கள் விட்டுக் கொடுக்கவில்லை. அவ்வாறு விட்டுக்கொடுக்க வேண்டும் என்று மற்றவர்கள் எதிர்பார்க்கவுமில்லை. இதற்குக் காரணம் அக்காலத்திலுள்ள முஸ்லிம்கள் தக்வாவுள்ளவர்களாக இருந்தார்கள்; இறைவனது கட்டளைக்குக் கீழ்ப்படிவது தான் இவ்வுலகில் நாம் பிறந்ததன் லக்ஷியம் என மதித்து நடந்து வந்தனர். ஆதலால், அவர்களுக்குச் சென்றவிடமெல்லாம் செல்வாக்கும் மதிப்பு மேற்பட்டன. இக்காலத்திலுள்ள நம்மவரில் தக்வா என்னும் பயபக்தி மிகக்குறைவு.

யௌமுந்நபீ விழா

திரு நபி (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் ஜனித்த பெருநாள் அண்மையில் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அத் திருநபி (ஸல்.) அவர்கள் பிறந்த புண்ணிய தினத்தைக் கொண்டாடுவதற்காக உலக முஸ்லிம்கள் ஆவலோடு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். இவ்விழாவில் முஸ்லிம்கள் மட்டுமில்லாமல் முஸ்லிம் அல்லாதாரும் சம்பந்தப்படுகின்றனர். இவ்விழா முஸ்லிம் சமூகத்திற்கு மட்டுமில்லாமல் மனித வர்க்கத்திற்கே பொதுவான ஒரு விழாவாக மாறி வருவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவ்விழாவிற்கு இத்துணை ஆதரவு உலகில் ஏற்பட்டு வருவதற்குக் காரணமென்ன? முஸ்லிம் முஸ்லிம் அல்லாதார் என்ற பாகுபாடின்றி மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஆண் பெண் அனைவருக்கும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பால் ஏற்பட்டுள்ள அபிமானத்திற்குக் காரணமென்ன? என்ற விஷயங்களைப்பற்றி நாம் சிறிது கவனிப்போம். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இஸ்லாம் மதத்தின் திருநபி என்பதை உத்தேசித்து அப்பெருமானர் (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தை முஸ்லிம்கள் கொண்டாடுகிறார்கள். ஆயினும், முஸ்லிம் அல்லாதார் இக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்குக் காரணம் யாது? முஸ்லிம்கள் அதிகாரத்திலிருப்பதைக் கவனித்தோ, அல்லது முஸ்லிம்களது செல்வாக்கிற்குப் பயந்தோ இக்கொண்டாட்டங்களில் அவர்கள் கலந்துகொள்வதில்லை. "அல்இன்ஸான் அபீதுல்இஹ்ஸான்" அதாவது மனிதன் உபகாரத்திற்கு அடிமைப்பட்டவன் என்ற பழமொழிக்கேற்ப மனித வர்க்கத்திற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆற்றியுள்ள தொண்டுகளும், புரிந்துள்ள உபகாரங்களுமே இதற்கு முக்கிய காரணமாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகிற்கு வருவதற்குமுன் உலகமிருந்த நிலைமையையும், நாயகம் (ஸல்) அவர்களது பிரசாரத்திற்குப் பிறகு உலகம் மாறி இருக்கும் பாங்கையும் நடுநிலைமையுள்ள எவர் சிந்தித்துப் பார்த்தாலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வாயார, மனதார வாழ்த்தாமலும் போற்றாமலுமிருக்க முடியாது. இஸ்லாத்தின் திருநபி (ஸல்) அவர்கள் விக்கிரக ஆராதனையை மட்டும் விலக்கவில்லை, மனித வர்க்கத்தைச் சீர்குலைத்துவந்த அநேக அனுச்சார பழக்க வழக்கங்களையும் கூட ஒழித்தார்கள். மனித வர்க்கத்திற்கு சமபங்காளிகளாகவுள்ள ஸ்திரீ ஜாதியினருக்கு உயிர் இருப்பதாகக்கூட அறபியரில் அநேகர் நினைத்திருக்கவில்லை. ஆடு மாடு, ஒட்டகை முதலிய பிராணிகளையும் பூமிகளையும் பங்கு போட்டுக் கொள்வதுபோல ஸ்திரீகளையும் கூடப் பங்கு போட்டுக்கொள்ளும் வழக்கம் அன்னேரிலிருந்தது. பங்கு போட்டுக் கொள்வது மட்டுமில்லை, தன்னைப் பெற்ற தாயல்லாமல் மாற்றாந் தாயாக இருக்கிற ஸ்திரீயை அதாவது தன் தகப்பனாரின் மறு மனையாட்டியைப் பெண்டாளும் வழக்கம் கூடச் சிலரிடமிருந்தது.

ஒரு ஸ்திரீயை விவாகம் செய்துகொள்ள வேண்டும் என்ற நோக்கம் ஒருவருக்கு உண்டாகிவிட்டால் அந்த ஸ்திரீயின் மீது தனது மேல் அங்கியை அவர் போட்டுவிட்டால் அப்புறம் அவளை வேறு யாரும் விவாகம் செய்யலாகாது. சுருங்கக் கூறுமிடத்து, மிருக ஜாதிகள் பால் காட்டும் ஜீவ காருண்ணியங்கூட ஸ்திரீ ஜாதியினருக்கு அறபியர் காண்பிப்பதில்லை. இவ்வித நிலைமை அறபி நாட்டில் மட்டுமில்லாமல் அறபியல்லாத ஏனைய நாடுகளிலுங்கூட இருந்தது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்தான் அறபி தேசத்தில் இவ்வித கொடும் பாதகங்களை எல்லாம் நிறுத்தி, ஸ்திரீகளது கற்பைக் காப்பது ஆடவர்களது கடமை என்ற உணர்ச்சியை உண்டாக்கினார்கள். இவ்விதமாக மனித வர்க்கத்தில் சரிபாதிப் பேர்களாகவுள்ள ஸ்திரீ ஜாதியினருக்கு ஆடவர்களால் இழைக்கப்பட்டுவந்த கொடுமைகளை எல்லாம் அகற்றி அவர்கள் ஆடவர்களுக்கு வாரிசுதாரர்களாகவும், அவர்களது வாழ்க்கைக்குத் துணைவிகளாகவும் இருக்கும் அந்தஸ்திற்கு உயர்த்தினார்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சிஷ்யர்கள் இக்கொள்கையை அறபி தேசத்திற்கு வெளியிலும் பரவச்செய்து ஏனைய வகுப்பினரிலுமுள்ள ஸ்திரீகளுக்கும் உயர்வு நிலையை உண்டுபண்ணினார்கள். இஸ்லாமிய சாம்ராஜ்யங்கள் பரவிய தேசங்களிலெல்லாம் ஸ்திரீகளுக்கு அநேக விமோசனங்களேற்பட்டன. ஆகவே, ஸ்திரீ ஜாதியினர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அல்லாதாராக இருந்தாலும் சரி, உலகில் தங்களுக்கிருந்த கேவலமான நிலைமையிலிருந்து தங்களை உயர்த்தி, மனித வர்க்கத்திற்குரிய காரியங்களனைத்திலும் தங்களுக்கு வேண்டிய பங்கை அளித்த எம்பெருமானார் முஹம்மது (ஸல்.) அவர்களுக்கு என்றென்றைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஆடவர்களில் பலமுள்ளவர்கள் பல மற்றவர்களைப் பலவந்தமாகப் பிடித்து அடிமையாக்கி விற்பனை செய்து வந்தனர். பணமுள்ளவர்கள் பணமில்லாதவர்களைத் தங்கள் இஷ்டம்போல் செய்துவந்தனர். பணமும் பலமுமுள்ளவர் செய்யும் குற்றமுள்ள காரியங்களை எவரும் கண்டிக்க முடியாது. பணமில்லாதவர்கள் நல்ல காரியத்தைச் செய்தாலும்கூட செல்வாக்குள்ளவர்கள் அதனைத் தடுத்து தண்டனைக்குட்படுத்தி விடுவர். கல்வி, அறிவு என்பதே அறபியரிடம் இல்லாமலிருந்தது. அதிகமாகக் கொலை செய்தவருக்கும், அதிகமாக ஸ்திரீகளின் கற்பை அழித்தவருக்கும் தான் அறபியர் மதிப்புக் கொடுத்து வந்தனர். கொலை, களவு, கொள்ளை, வழிப்பறி முதலியவைகளில் திறமையுள்ளவர்களுக்கு கௌரவமும் மதிப்பும் கொடுக்கப்பட்டுவந்தது. இதுபோல இன்னும் அநேக விதமான கெட்ட காரியங்களெல்லாம் நடைபெற்று வந்தன. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது பிரசாரத்தின் மகிமையால் இஸ்லாமிய நாடுகளில் இவை அடியுடன் ஒழிந்தன. இதர நாடுகளும் கூட இவைகள் மனிதவர்க்கத்திற்கு ஏற்காக அநாகரீகமான காரியங்களென்ற விஷயத்தை உணர்ந்து, முஸ்லிம் அல்லாதாரும் தங்களிடமிருந்த இத்தீய குணங்களையும் பழக்க வழக்கங்களையும் ஒவ்வொன்ருக விட்டுவிட ஆரம்பித்தனர். மனிதவர்க்கத்தில் அறிவும் திறமையுமுள்ள எவரும் உயர் நிலைமையை அடையத்தக்க வசதிகள் அளிக்கப்பட்டன. ஒருகாலத்தில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் பிரிதொரு காலத்தில் அரசர்களாகவும் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டனர். மனிதன் தனது சமர்த்தினல் எத்தகைய உயர் நிலையையும் அடையமுடியும் என்பதை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்தான் முதல் முதலாக உலகிற்கு உணர்த்தினர்கள். பிறவியினல் உயர்வு தாழ்வில்லை;

எல்லோரும் சமம் என்ற உணர்ச்சியைப் போதித்தது மன்றி அவ் வுணர்ச்சியைக் கிரியாம்சையில் நடப்பித்தும் வைத்தார் கள். ஆகவே, மனிதவர்க்கத்தை அலைக் கழித்துக்கொண்டிருந்த அநேக கெட்ட பழக்கங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவே அகற்றப்பட்டன. ஆதலால், மனித வர்க்கம் முழுவதும் நபி கள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இவை முஸ்லிம் முஸ்லிம் அல்லாதார் என்ற பாகுபாடின்றி எல்லா மனிதருக்கும் பொதுவாகவுள்ள நிலைமையாகும். ஆனால் முஸ்லிம்கள் இன்னும் அதிகமா கவே கடமைப்பட்டிருக்கின்றனர். முஸ் லிம்களது முக்கிய முதன்மையான நோக் கம் நித்திய உலகமாகிய மறு உலகில் பேரின்பப் பேறுகளை அடைவதாகும். அதனை அடைவதற்கான கொள்கை களையும், ஒழுக்க முறைகளையும் காண் பித்துக் கொடுத்து, முஸ்லிம்களைத் தேற்றுவிப்பவர் நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்தான். ஆதலால், முஸ் லிம்கள் இவ்விஷயத்தில் தங்கள் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் நாய கம் (ஸல்.) அவர்களுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டியவர்களாக இருக் கிறார்கள். எனவே, மனித வர்க்கமும் சிறப்பாக முஸ்லிம் சமூகமும் தங்களுக்கு உபகாரியாக வந்து, இனி இல்லா வண் ணம் பேரூழியம் செய்து தங்களது நிலையை உயர்த்திய நாயகம் (ஸல்.) அவர்கள் பிறந்த நாளில் கூட்டமாகக் கூடி, அவர்கள் தங்களுக்குச் செய்துள்ள அரும் பெரும் சேவைகளை நினைத்து நன்றி செலுத்துவதும், அறியாத மக்க ளுக்கு இவைகளை அறிவிப்பதும் மிகவும் அவசியமும் பொருத்தமுமான காரிய மாகும். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகத்தில் ஜீவித்துக்கொண்டிருந்த காலத்திற்கூட இப்பிரசாரத்திற்காக மனித வர்க்கத்தாரிடத்தில் எத்தகைய கைமாறுதலையும் பிரதிபலனையும் எதிர் பார்க்கவில்லை. ஆனால், தங்களது பிரசா ரத்தை உலகமெங்கும் பரவச் செய்து, தங்கள் பிரசாரத்தின் மகிமையை மக்கள் உணரும்படி செய்யவேண்டும் என்பதா கக் கட்டளையிட்டுள்ளார்கள். ஆகவே, முஸ்லிம்களாகிய நாம் நமது நபிகள் நாய கம் (ஸல்.) அவர்களுக்காக நமது உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்ப ணம்செய்யக் கடமைப்பட்டிருக்கிற நிலை மையில், குறைந்த பக்ஷம் நாயகம் (ஸல்.) அவர்களது இவ்வொரு கட்டளையையே னும் வருஷத்தில் ஒருநாளிலாகினும் நிறைவேற்றக்கூடாதா என்பதை ஒவ் வொருவரும் சிந்தித்துப் பார்த்து, அண் மையில் வருகிற "மீலாதுந்நபீ" விழா வில் தக்க பங்கெடுத்துக்கொள்வது மிக வும் அவசியமாகும். அவ்வாறு செய்யாம லிருப்பது நன்றிகெட்ட செய்கையுமாகும் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்பு கிறோம். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகர்க்கு" என்று கூறப்பட் டுள்ளபடி, இம்மை மறுமை ஆகிய இரண் டிலும் உயர்வடையக்கூடிய வழிகளை இனி யில்லாவண்ணம் நமக்கு காண்பித் துக்கொடுத்த நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தங்களது நன்றியறித லைச் செலுத்திக்கொள்வதற்குக் கிடைக் கும் அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் இவ்விழாவில் கலந்துகொண்டு இறைவனது அருளையும் கருணையையும் அடையும்படியாக எல்லா சகோதரர்களை யும் கேட்டுக்கொள்கிறோம்.

தவிரவும், பற்பல மதத்தாரும் சேர்ந்து வாழ்கின்ற இந்த நாட்டில் நமக்குள் ளேற்படுகிற தொந்திரைகளுக்கும் கஷ் டங்களுக்கும் முக்கிய காரணம் நம்மைப் பிரமதத்தார் சரியாக உணர்ந்து கொள் ளாததேயாகும். ஆதலால் மீலாதுந் நபீ மகா நாடுகளில் பல மதஸ்தரும் கலந்து கொள்ளும் படிக்கான ஏற்பாடு செய்து, நபிகள் திலகம் (ஸல்.) அவர்களி னுடையவும், இஸ்லாத்தினுடையவும் அரும் பெரும் போதனைகளையும் சேவை களையும் அவர்கள் உணர்ந்து கொள்ளு மாறு செய்யவேண்டியது மிகமிக அவசிய மென்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கிருந்த விசேஷ மகத்துவங்கள்

இவ்வுலகில் சத்திய சன்மார்க்கத்தைப் போதிப்பதற்காக இறைவன் வேதங்களையும் நபிமார்களையும் அனுப்பினன். அல்லாஹுதஆலாவினல் அருளப்பட்ட வேதம், அவனது சன்மார்க்கத்தைப் போதிக்கும் நபி என்ற விஷயத்தில் முஸ்லிம்கள் எல்லாவேதங்களையும், எல்லா நபிமார்களையும் சமமாகவே மதித்துக் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிருர்கள். இவ் வேதங்களிற் சிலவற்றை அங்கீகரித்து சில வற்றை மறுக்கவோ, ஒரே வேதத்தின் சில பாகங்களை அங்கீகரித்துப் பாக்கியுள்ளவைகளை மறுக்கவோ, நபிமார்களில் சிலரை ஒப்புக் கொண்டு சிலரை ஒப்புக்கொள்ளாமலிருக்கவோ, இவர்களுக்கிடையில் உயர்வு தாழ்வுகளைக் கற்பிக்கவோ முஸ்லிம்களுக்கு உரிமை கிடையாது. அவ்வாறு செய்தால் அவர் உண்மை முஸ்லிமாகவும் இருக்க முடியாது. ஆனல், வேதங்களுக்கும் நபிமார்களுக்கு மிடையில் சில விசேஷித்த தன்மை களிருக்கின்றன. அத்தன்மைகளைப் பொதுஜனங்களுக்கு அறிவிப்பது அவசியமாகும். விசேஷித்த தன்மைகளை அறிவிப்பதால் நபிமார்களுக்கிடையில் பாரபக்ஷம் காண்பிப்பதான குற்றமேற்பட மாட்டாது. வாசகநேயர்களும் இவ்விசேஷித்த தன்மைகளை ஆதாரமாகக்கொண்டு நபிமார்களுக் கிடையில் பாரபக்ஷம் காண்பிக்கவோ, ஒருவரை ஏற்றியும் ஒருவரைத் தாழ்த்தியும் பாகுபாடு செய்யவோ கூடாது என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

1. "எனக்கு ஐந்து காரியங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவைகள் எனக்கு முன்னிருந்த எந்த நபிக்கும் அளிக்கப்படவில்லை. என்னைப் பார்த்தவுடன் ஜனங்கள் பயப்படும்படியான கம்பீரத்தோற்றம் எனக்களிக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இத்தன்மையின் மூலமாக வெற்றியும் உதவியும் அளிக்கப் பட்டிருக்கின்றன. 2. எனக்கு இவ்வுலகிலுள்ள எல்லா இடங்களையும் தொழுமிடங்களாக அளிக்கப்பட்டிருக்கின்றது. 3. யுத்தத்தில் பகைவர்கள் விட்டுச் சென்ற பொருள்களை நான் அனுபவித்துக் கொள்ள எனக்கு அனுமதி யளிக்கப்பட்டிருக்கின்றது. எனக்கு முன்னிருந்த எந்த நபிக்கும் இவ்வுரிமை அளிக்கப்படவில்லை. 4. பிறருக்காக சிபாரிசு செய்யும் உரிமை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது, 5. எனக்கு முன்னுள்ள நபிமார்கள் தங்கள் வகுப்பினருக்கு மட்டிலும் நபியாக அனுப்பப்பட்டிருந்தனர். நான் இவ்வுலகமனைத்திற்கும் பொது நபியாக இருக்கிறேன்" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருப்பதாக ஹஜ்ரத் ஜாபிர் (றலி.) அவர்கள் கூறி இருக்கிருர்கள்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு முன் இவ்வுலகில் லக்ஷக்கணக்கான நபிமார்கள் தோன்றினர். அவர்களது எண்ணிக்கைகளை இத்தனையென்று உறுதியாக வரையரை செய்து கூற முடியாது. ஆனல், முற்காலத்தில் இருந்த வேதங்களின் பெயரால் இக்காலத்தில் வெளியிடப்படும் சில கிரந்தங்களிலும், திரு குர்ஆனிலும் வேறு பல நூல்களிலு மிருந்து அநேகம் நபிமார்களது பெயர்களையும், அவர்களது சரித்திர வரலாறுகளையும் நாம் அறிந்து கொள்ள முடியும். இந்த நபிமார்களது சரித்திர விபரங்களைப் பார்க்குமிடத்து, இவர்களெல்லோரையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். சில நபிமார்களுக்குத் துணைவர்களும் உதவிக்காரர்களும் கிடைக்கவில்லை; புறத்தில் பலஹீனர்களாகவே அவர்கள் மதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர்; அவர்களுக்கு உலக சம்பந்தமாக எவ்விதப் பலமும் ஆதரவு மிருக்கவில்லை; இவ்வகையினர் ஒருவகை. இவ்வகையில்தான் நபிமார்களில் பெரும்பாலர் இருந்து வருகின்றனர். மற்ருெரு வகையினருக்கு இவ்வுலகத்திலுள்ள பலம், பணம், படை, செல்வாக்கு முதலிய புற சாதனங்கள் இருந்தன; இவ்விதமானவர்கள் மிகச் சிலரேயாவர். ஹஜ்ரத் மூஸா (அலை), ஹஜ்றத் தாவூத் (அலை), ஹஜ்றத் சுலைமான் (அலை) போன்றவர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.

ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்கள் இஸ்ராயீலின் சந்ததியினரை எகிப்திலிருந்து வெளியேற்றி ஷாம் தேசத்தின் எல்லைப் புறத்திற்கு அழைத்து வந்தார்கள். எகிப்திலுள்ள 'பிர்ஔன்' என்ற அரசனிடம் இஸ்ராயீல் சந்ததியினரது விடுதலைக்காக அதிகப் பிரயாசையெடுத்துக் கொண்டார்கள். இம் முயற்சியில் அநேக கஷ்டங்களையும் அனுபவித்தார்கள். அப்பால் ஷாம் தேசத்தின் எல்லைப்புறத்திற்கு வந்தபின் அத்தேசத்திலுள்ள பல சமூகத்தாரையும் எதிர்த்து யுத்தம் செய்யவேண்டியதாயிற்று. இந்த யுத்தங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் போதே ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்கள் இவ்வுலகைவிட்டுச் செல்லவேண்டியதேற்பட்டது. ஆகவே, தங்களுக்குப் பரிபூரணமான வெற்றி கிடைத்ததையோ, தங்களுக்கு எல்லோரும் அடங்கி ஒடுங்கிப் பணிவதையோ பார்க்கவில்லை.

ஹஜ்றத் தாவூத் (அலை.) அவர்கள் சாமான்ய ஒரு குடும்பத்தில் பிறந்தவராகவே ஆரம்பத்தில் காணப்பட்டார்கள். பட்டாளத்தில் சிப்பாயாகவும் சேர்க்கப்பட்டார்கள். பலமான எதிரியை எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டிய நிலைமையு மேற்பட்டது. யுத்தமும் செய்தார்கள். எதிரியைத் தோற்கடித்தார்கள். அப்புறம் அரசுரிமையை ஓரளவு அடைந்தார்கள். தங்களது அபிமானிகளிற் சிலரது பொறாமையின் காரணமாகச் சிலகாலம் கஷ்ட சங்கடத்தை அனுபவித்து இறுதியாகத் தங்கள் வர்க்கத்தாரில் ஏகசக்கிரவர்த்தியாகவும் ஏற்பட்டார்கள். ஆனால், அவர்கள் தங்கள் வாணாள் முழுவதையும் இறைவனைப் பயந்து அழுதல், ஸ்தோத்தரித்தல் முதலியவைகளிலேயே கழித்திருப்பதாகத்தான் சரித்திரங்களில் விபரம் காணப்படுகிறது. அவர்களது துக்கம் நிறைந்த அழைப்புக்குச் செவிமடுத்து, அவர்களது சன்மார்க்கப் பிரசாரத்திற்குட்பட்டு அவர்களுக்கு மற்றவர்கள் சிஷ்யரானதாக எவ்வித விபரமும் காணப்படவில்லை.

ஹஜ்றத் சுலைமான் (அலை.) அவர்கள் வாரிசு பாத்தியத்தின்மூலமாக அரசுரிமையை அடைந்தார்கள். ஆதலால், அவர்கள் தங்களது ஆரம்ப காலத்திலிருந்தே அதிகாரத்தையும் பலத்தையும் பெற்றார்கள். அவர்களை எதிர்த்த எல்லா அரசர்களும் ஒடுக்கப்பட்டனர். காற்றுக்கும் கூட அதிபதியானார்கள். ஜின்களும் கூடக் கீழ்ப்படிந்தன. இஸ்ராயீலின் சந்ததியினருக்கு இவர்கள் காலத்தில் மிகப் பெரிய செல்வாக்கு ஏற்பட்டது. உலகத்தை ஒரே குடையில் ஆட்சி செய்த சக்கரவர்த்திகளில் ஹஜ்றத் சுலைமான் (அலை.) அவர்களும் ஒருவர் என்பதாக உலகம் போற்றும் வல்லமையை அடைந்தார்கள். இவ்வளவு பலமும், செல்வாக்கும் அதிகாரமும் இருந்துங்கூட அவர்களது பிரசாரத்தின் மூலமாக சன்மார்க்க நெறியை ஜனங்கள் தழுவியதாக சரித்திரங்களில் தகவல் கிடைக்கவில்லை. இம்மட்டுடன் இருந்துவிடாமல் ஹஜ்றத் சுலைமான் (அலை.) அவர்களது அந்தப்புறத்து ஸ்திரீகளில் சிலர் விக்கிரக ஆராதனை புரிந்து வந்தனர் என்றுகூட சில நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. இந்நூல்களிற் கூறப்பட்டுள்ள இத்தகவலை உண்மை என்று நம்பினால் ஹஜ்றத் சுலைமான் (அலை.) அவர்களது சன்மார்க்கப் பிரசாரம் அவர்களது குடும்பத்தினருக்குள்ளிலும்கூட உறம் பெறவில்லை என்று தோன்றுகிறது.

இனி நமது நபிகள் நாயகம்(ஸல்.)அவர்களது சரித்திர வரலாறுகளைக் கவனியுங்கள். கர்ப்பத்தி லிருக்கும்போதே தந்தையை இழந்தார்கள். பிறந்த சிலகாலத்திற்குள் பெற்றெடுத்த தாயையுமிழந்தார்கள். அப்புறம் சின்னாட்களில் அன்புடன் ஆதரித்துப் போஷித்து வந்த பாட்டனாரையுமிழந்தார்கள். இவ்விதமாக அவர்களது ஜீவியத்தின் ஆரம்ப காலம் ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களது நிலைமையைப்போல் வறுமையாகவும், அய்யூபு (அலை.) அவர்களது நிலைமையைப்போல் திக்கற்றதாகவுமிருந்தது. ஆனால், நபித்துவத்தை அடைந்த பிறகு ஆரம்பத்தில் அநேக கஷ்ட சங்கடங்களுக்கும் தொந்தரைகளுக்கும் இலக்காக இருந்தாலும் இறுதியில் ஹிஜாஸ் மாகாணம் முழுவதும் மட்டிலென்ன, அறபி தேசம் முழுவதுமே அடி பணிந்தது. அறபி தேசத்திற்கு வெளியிலுள்ள சில அரசர்களும்கூட இஸ்லாம் மதத்தைத் தழுவினர். நாயகம் (ஸல்.) அவர்களது கட்டளையை மதித்துப் போற்றினர். ஆகவே, ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களது பலம், தாவூது (அலை.) அவர்களது அரசாங்கம், சுலைமான் (அலை.) அவர்களது அதிகாரம் ஆகிய மூவகைகளையும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அடைந்தார்கள். ஆயினுமென்ன, அவர்களுக்குக் கிடைத்த இம்மூவகைப் பாக்கியங்களும் சன்மார்க்கத்தைப் பரவச்செய்வதற்கே உபயோ

கமாயின. இவையெல்லாம் அல்லாஹுதஆலாவின் சன்மார்க்கத்தை ஓங்கச்செய்வதிலேயே ஈடுபடுத்தப்பட்டன. வழி தவறிய மக்கள் நேர் வழியையடைந்தனர். வழியை மறந்த மக்கள் நேர்வழியை நினைவிற்கொண்டனர். சுருங்கக் கூறுமிடத்து, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் எப்பக்கம் சென்றாலும், எத்திசை ஏகினாலும் அங்குள்ள ஜனங்களெல்லோரும் கூட்டங் கூட்டமாக வந்து இஸ்லாம் மதத்தைத் தழுவினர். மாபாதகங்களைச் செய்த வம்பர்களெல்லோரும் தங்கள் பாதகச் செய்கைகளை வாய் விட்டுக் கூறி தங்களது செய்கைகளுக்காக வருத்தந் தெரிவித்துக்கொண்டனர். அத்தேசத்திலுள்ள பெரும் பெரும் யுத்த வீரர்களும், வலிமையுள்ளோரும் கூட நாயகம் (ஸல்.) அவர்களை எதிர்க்க முடியவில்லை. நாயகம் (ஸல்.) அவர்களைக் கொன்று விடவேண்டும் என்ற நோக்கத்தால் நஞ்சில் ஊறிய ஆயுதங்களை எடுத்து வந்துங்கூட நாயகம்(ஸல்.) அவர்களைத்தங்கள் நேத்திரத்தால் கண்ட மாத்திரத்தில் மெய்மறந்து நடுங்கினர். கபீலாக்களின் தலைவர்களாக இருந்து பிரக்கியாதி பெற்ற பலாட்டியர்களும் கூட நாயகம் (ஸல்.) அவர்களது பெயரைக் கேட்டமாத்திரத்தில் அடங்கி ஒடுங்கினர். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஹிஜ்றத்துச் செய்து மதினமாநகருக்கு வந்தபோது அதனைச் சுற்றிலும் யூதவகுப்பினர் பெரும் பெரும் கோட்டைகளையும் அரண்களையும் அமைத்துக்கொண்டு மதினாவிலும் அதனைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களைத் தங்கள் இஷ்டம்போல் ஆட்டிவைத்துக்கொண்டிருந்தனர். தங்களிடமுள்ள ராணுவபலத்தையும் யுத்தக் கருவிகளையும் கண்டு பெருமை கொண்டிருந்தனர். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சன்மார்க்கப் பிரசாரத்திற்குத் தடைசெய்ய முயன்றபோது நாயகம் (ஸல்.) அவர்கள் அவர்களை அடக்குவதற்காக முயன்றனர். அதுபோழ்து அந்த யூதர்கள் நாயகம் (ஸல்.) அவர்களை எதிர்த்துப் பலமாகப் போராடப்பயந்து நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அடி பணிந்தனர். அப்புறம் கைபரில் கோட்டைகளுக்குள் யூதர் வசித்துவந்தனர். அறப்நாட்டிலுள்ள யூதர்களது வாசஸ்தலங்களில் கைபரிலிருந்த அவர்களது கோட்டைகள்தாம் மிகப் பலம் பொருந்தியவை. நாயகம் (ஸல்.) அவர்கள் இவர்களையும் அடக்கி விடவேண்டும் என்ற நோக்கத்துடன் தங்களதுபடைகளை அழைத்துச் சென்றபோது அவர்களெல்லோரும் நடுங்கிப்போனார்கள்.

திருமக்காவில் குறைஷியருக்குத் தலைவராக இருந்த அபூசுப்யான் பத்றுச் சண்டையைத் தவிர்த்து மற்றைய சண்டைகளுக் கெல்லாம் தலைமைவகித்து நாயகம் (ஸல்.)அவர்களை எதிர்த்துப் பலமுறை யுத்தமுஞ்செய்திருக்கிறார். அப்படி இருந்தும் மக்கமாநகரை நாயகம்(ஸல்.) அவர்கள் ஜெயித்துக் கைப்பற்றுவதற்காக மக்கமாநகருக்குள் நாயகம் (ஸல்.) அவர்களது போர் வீரர்கள் அணிவகுத்து அஞ்சல் அஞ்சலாக விதம் விதமான கொடிகளுடன் செல்லும் காக்ஷியை அபூசுப்யான் பார்த்து நடுங்கிக் கொண்டே இருந்தார். இவ்விதமாக அறபி தேசம் முழுவதும் அடிபணிந்தது மட்டுமல்லாமல், நாயகம் (ஸல்.) அவர்களது சன்மார்க்கப் பிரசாரத்தை ஏற்று எல்லோரும் முஸ்லிம்களாயினர். நாயகம் (ஸல்.) அவர்களது கடைசி காலத்தில் 'ஜஸீரத்துல் அறபி'ல் யூதர், கிறிஸ்துவரென்ற பிற மதத்தினர் அடியுடன் இல்லாமற் போனதுடன், ஹிஜாஸ் மாகாணத்தில் இணை வைத்து வணங்குபவர் ஒருவர் கூட இல்லாமல் அந்நாடு மிகவும் தூய்மை பெற்றது.

ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் உண்மையிலேயே கொடுமைக்காரராகவோ, வன்னெஞ்சராகவோ இருந்தார்களா? என்பதைக்குறித்து சரித்திர வரலாறுகளை ஆராய்ந்து பார்க்கும்போது, ஜனங்களிடம் அன்பு, இரக்கம், கருணை, மன்னித்தல் முதலிய சாந்தகுணங்களை யுள்ளவர்களாகவே இருந்தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. நாயகம் (ஸல்.) அவர்களிடம் நெருங்கிப் பழகாதவர்களும், அடிக்கடி தரிசிக்காம லிருந்தவர்களும் தான் பயந்து நடுங்கினர். அப்படி அவர்கள் பயந்து நடுங்கும் போது நாயகம் (ஸல்.) அவர்கள், அவர்களைத் தேற்றுவது வழக்கம். ஒரு முறை ஒரு பதவீ நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சமூகத்திற்கு வந்தார். நாயகம் (ஸல்.) அவர்களது மதிமுகத்தை அவர் கண்டதும் பயந்து நடுங்கினார். அதுபொழுது நாயகம் (ஸல்.) அவர்கள் "பயப்படாதீர்கள், நான் அரசனன்று, நான் ஒரு குறைஷீ ஸ்திரீயின் புதல்வனே யாவன்." என்று கூறினார்கள்.

ஹஜ்றத் முக்ரமா (றலி.) அவர்கள் தமது புதல்வர் மஸூர் என்பவரிடம் "நாயகம் (ஸல்.) அவர்கள் அந்தப்புறத்திலிருக்கிறார்கள்; அவர்

களுக்குச் சப்தம் கொடும்," என்று கூறினர். அதவற்கவர் பயந்து பின் வாங்கினர். அப்பொழுது ஹஜ்றத் முக்ரமா (றலி.) அவர்கள் தமது மைந்தரை நோக்கி "அருமைப் புதல்வ, நாயகம் (ஸல்.) அவர்கள் கொடுமை வாய்ந்தவரல்லர் அஞ்சேல்" என்பதாகக் கூறினர்கள்.

ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இறைவனளித்துள்ள இத்தன்மையின் மூலமாக உலகில் எவரும் அடையாத அவ்வளவு மகோன்னத வெற்றியை நாயகம் (ஸல்.) அவர்கள் அடைந்தார்கள்.

தொழுமிடங்கள்

இஸ்லாம் மதம் உலக மக்க ளனைவருக்கும் பொதுவாக அருளப்பட்டதாகும். இஸ்லாம் மதத்தில் ஆண்டவனைப்பற்றிக் கூறி இருக்கிற லக்ஷணங்களில் "அவன் எங்கும் நிறைந்தவன்" என்பதும் ஒன்றாகும். எனவே, இக்கொள்கைக்கேற்ப இறைவனைத் தொழுவதற்கு இன்ன இடம்தான் வேண்டும் என்று இஸ்லாம் மதம் வரையறை செய்யவில்லை. பூமியின் எந்த இடத்தில் வேண்டுமானாலும் இறைவனை வணங்கிக்கொள்ளலாம் என, இஸ்லாம் மதம் கட்டளை யிட்டிருக்கிறது. இஸ்லாம் மதத்தைத் தவிர்த்து உலகில் இப்பொழுதிருக்கிற ஏனைய எல்லா மதங்களுக்கும் இத்தன்மை கிடைக்கவில்லை. இதர மதங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் மத சம்மந்தமான கடமைகளை நிறைவேற்றுவதற்கு நான்கு பக்கங்களிலும் மதில்களால் சூழப்பட்ட ஒரு இடம் அவர்களுக்கு இருக்க வேண்டும். யூதர்கள் தங்கள் வணக்கஸ்தலங்களுக்கும் பலிபீடத்திற்கும் வெளியில் இறைவனை வணங்கவும் கூடாது; பலியிடவும் முடியாது. கிறிஸ்துவர்கள் தங்கள் மாதா கோவிலுக்கு வெளியில் இறைவனுக்குச் சிரஞ்சாய்த்து வணங்கலாகாது. விக்கிரகாராதனைக்காரர்களும் கூட தங்களது விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்குள்ளிற்றுன் தங்கள் தேவதைகளைச் சந்தோஷப்படுத்துகின்றனர். ஆனல், அகில உலக மதமாகிய இஸ்லாத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள ஆண்டவன் மதில்களால் சூழப்பட்டிருக்கிற இடத்தில் மட்டுமில்லை; அவன் எங்கும் நிறைந்தவன், அவனை எந்த இடத்திலும் வணங்கலாம். பள்ளிவாசல்களுக்குள் வணங்குவதுபோல பள்ளிவாசல்களுக்கு வெளியிலும் தொழலாம். இதனைக் குறித்துத்தான் நாயகம் (ஸல்.) அவர்கள் "இவ்வுலகம் முழுவதும் எனக்கு மஸ்ஜிதாக ஆக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினர்கள். இவ்வாக்யம் சாமான்யமானதாகப் புறத்தில் தோன்றினலும் இதன் உட்கருத்து இஸ்லாம் மதந்தான் இறுதியானதாகவும் பொதுவானதாகவுமுள்ள மதம் என்பதை விளக்கிக்கொண்டிருக்கிறது.

சிஷ்யர்களின் பெருக்கு

உலகில் லக்ஷத்திற்கு அதிகமானவர்கள் நபியாக வந்திருக்கின்றனர். ஆயினும், இவர்கள் காண்பித்த நேர்வழிக்கும் போதனைகளுக்கும் சரியான ஞாபகார்த்தம் இவ்வுலகில் இப்பொழுது இல்லை. சரித்திரப் புத்தகங்களில் இவர்களிற் பெரும்பாலரின் பெயர் நாமம்கூட இல்லை. மிகச் சில நபிமார்களது பெயர்கள்தாம் சரித்திரங்களில் எழுதப்பட்டுள்ளன. இவர்களைப் பின்பற்றியவர்களைப்பற்றிய சரித்திரங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவர்களுக்குச் செவி சாய்த்தவர்களும் மிகச்சிலர்தான் என்பது வெளியாகிறது. ஹஜ்றத் நூஹு (அலை.) அவர்களிலிருந்து ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் வரையிலுமுள்ள பிரபல நபிமார்களது வரலாறுகளை ஒவ்வொன்றாகக் கவனித்துப் பாருங்கள். ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களைத் தவிர்த்து மற்றவர்களைப் பின்பற்றியவர்கள் நூற்றுக்கு அதிகமாக இருப்பதை நீங்கள் பார்க்கமுடியாது. ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களது சன்மார்க்கப் பிரசாரத்தின் எல்லை பல ஆயிரம் பேர்களைக்கொண்ட பனூ இஸ்ராயீல் களில் மட்டிலும் தானிருந்தது. அவர்களும் அடிக்கடி சத்தியமார்க்கத்தை விட்டு மாறுபவர்களாகவே இருந்தனர். சில சமயங்களில் காளை மாட்டை வணங்கினர்; சிலசமயங்களில் அல்லாஹுதஆலாவை நேருக்கு நேராகப் பிரத்தியக்ஷமாகக் காண்பித்துக்கொடுக்க வேண்டும் என்று ஹஜ்றத் மூஸா (அலை.) அவர்களை வற்புறுத்தினர்; சில சமயங்களில் பகைவரை எதிர்த்து யுத்தஞ்செய்ய மறுத்தனர்; சில சமயங்களில் கீரை, பருப்பு முதலியவைகள் வேண்டுமெனக் கூறினர். ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்கள் பல அற்புதங்களைக் காண்பித்துங் கூடச் சில வண்ணார்கள் மட்டிலும் தான் சிஷ்யர்களானார்கள். அதிலும் கூட ஒருவர் அவர்களைப் பகைவர்களிடம் காட்டிக் கொடுப்பவராயினர்.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது நிலைமை அவ்வாறில்லை. மக்காவின் தெருக்களில் தன்னந்தனியே உதவியாளர் எவருமின்றி சன்மார்க்கப் பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் மக்கள் தலை சாய்க்கவில்லை. அப்புறம் 23 வருஷகாலம் செல்வதற்குள் அறபி தேசத்து அப்பாலை வனத்தின்கண் ஒவ்வொருவரும் "லா இலாஹ இல்லல்லாஹு" என்ற கலிமாவை ஓதுபவராக மாறிவிட்டனர். திரு மக்கமா நகருக்கு நாயகம் (ஸல்.) அவர்கள் ஹஜ்ஜுச் செய்ய வந்தபோது ஒரு லக்ஷத்திற்கு அதிகமான சிஷ்யர்கள் நாயகம் (ஸல்.) அவர்களுடன் ஹஜ்ஜுச் செய்ய வந்தார்கள்.

"எனது நுபுவ்வத்தை அங்கீகரித்ததுபோல் வேறு எந்த நபியுடைய நுபுவ்வத்தையும் அங்கீகரிக்கவில்லை. சில நபிமார்களுக்கு ஒரே ஒரு சிஷ்யர் மட்டிலுமே இருந்திருக்கின்றனர்" என்று நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹதீதுகளில் வந்திருக்கின்றது.

மேலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றிய சிஷ்யர்களது எண்ணிக்கை மற்றெல்லா நபிமார்களது சிஷ்யர்களைப் பார்க்கினும் அதிகமாக இருப்பதற்கு மற்றொரு காரணமுமுண்டு. நாயகம் (ஸல்.) அவர்களுக்கு முன் வந்த நபிமார்களனைவரும் குறிப்பிட்ட ஒவ்வொரு வர்க்கத்தினரிடம் மாத்திரமே வந்தனர். அவர்களது பிரசாரம் மனித வர்க்கத்தினர் அனைவருக்கும் பொதுவானதாகவுமிருக்கவில்லை. ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களும் கூட காணாமற்போன ஆட்டுக் குட்டிகளான இஸ்ரவேலரின் சந்ததியினருக்குத்தான் நபியாக வந்தார்கள். ஆனால், நாயகம் (ஸல்.) அவர்களது பிரசாரம் உலகிலுள்ள சகல வகுப்பினருக்கும் பொதுவாகவே இருந்தது. கருப்பர், வெள்ளையர், உரோமர், அபிசினியர், துருக்கியர், தாத்தாரியர், சீனர், இந்தியர், அறபியர், அஜமியர் ஆகிய எல்லா வர்க்கத்தாருக்கும் நாயகம் (ஸல்.) அவர்களது பிரசாரத்தில் சம பங்கிருந்து வந்தது. எனவே, நாயகம் (ஸல்.) அவர்களது இவ்வுலக வாழ்க்கையின் போழ்தே ஸல்மான் பார்ஸீ, ஸுஹைப்றூமி, பிலால் ஹபஷி போன்ற அறபியல்லாதவர்களும் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு சிஷ்யர்களானார்கள். தவிரவும், நாயகம் (ஸல்.) அவர்களது சன்மார்க்க அழைப்புப் பத்திரிகை உலக அரசர்கள் பலருக்கும் அனுப்பப்பட்டது. ஆகவே, நாயகம் (ஸல்.) அவர்களது பிரசாரம் உலகிற்கே பொதுவானதாக இருக்கிறது என்பது இதிலிருந்து விளங்கும்.

இறைவனருளப்பட்ட வேதங்களில் திரு குர்ஆனைத் தவிரவுள்ளவைகள் கொஞ்சங்கூட மாறுதலடையாமல் இன்னமும் இருந்து வருவதாகக் கூற முடியாதாயினும் பெயரளவிலேனும் அவைகள் வேதங்கள் என்று இன்னமும் சொல்லப்பட்டு வருகின்றன. இவைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்து துருவிப்பார்த்த மட்டில் திருகுர்ஆன் ஒன்றைத் தவிர பாக்கியுள்ளவைகள் சம்பூரணமாக இல்லை என்பது திண்ணம். தௌராத் என்று சொல்லப்படுபவைகளில் முற்காலத்து ஜனங்களது வம்ச பரம்பரையைப் பற்றியும், சில சட்டங்களைப் பற்றிய விபரங்களுமே நிறைந்திருக்கின்றன. ஏக தெய்வக் கொள்கை, நபித்துவம் ஆகியவைகளைத் தவிர கொள்கை சம்மந்தமான இதர முக்கிய விஷயங்களைப்பற்றியும், குர்பானியைத் தவிர வுள்ள வணக்கங்களைப் பற்றியும் கூறப்படவில்லை. ஒழுக்கங்களைப் பற்றிய நுட்பங்கள் பிரஸ்தாபிக்கப்படவே இல்லை. இதனைப் பழைய வேதாகமங்களில் தோரா என்றழைக்கப்படுகிறது.

ஜபூர் வேதத்தில் பிரார்த்தனைகளும் வேண்டுதல்களும் தான் நிறைந்திருக்கின்றன. இதற்கு சங்கீதம் எனப் பெயர் கொடுத்து, மாதா கோவில்களில் பிரார்த்தனையின்போழ்து பாடித் துதிக்கின்றனர். இஞ்ஜீல் வேதத்தில் ஹஜ்றத் ஈஸா (அலை.) அவர்களது வரலாறும் நடவடிக்கைகளும், ஒழுக்க சம்பந்தமான சில போதனைகள் மட்டிலுமே கூறப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக பழைய வேதாகமங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பிரித்து பார்க்கும்போது அவைகளில் ஒன்றில்கூட மனித வர்க்கத்திற்குத் தேவையான சகல விஷயங்களும் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

திரு குர்ஆன் இவ்வேதங்களைப்போலில்லை. திரு குர்ஆனில் மனிதருக்கு வேண்டிய சகல விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. தௌராத், ஜபூர், இஞ்ஜீல் முதலிய வேதாகமங்களிற் கூறப்பட்டுள்ள விஷயங்களின் சாராம்சங்களத்தனையும் இதிற் கூறப்பட்டிருக்கின்றன. இதனாற்றான் திரு குர்ஆனுக்கு "ஜவாமிஉல்கலிம்" அதாவது சகல விஷயங்களும் அடங்கிய நூல் என்ற பெயர் வந்தது. தவிரவும் "எனக்கு திரு குர்ஆனிலுள்ள ஏழு பெரிய அத்தியாயங்கள் தௌராத் வேதத்திற்குப்

பதிலாகவும், நூறு ஆயத்துகளுள்ள அத்தியாயங்கள் ஜபூர் வேதத்திற்கு பதிலாகவும், ஹாமீம் என்ற அக்ஷரங்களுள்ள அத்தியாயங்கள் இஞ்ஜீலிற்கு பதிலாகவும் பாக்கியுள்ளவைகள் அதிகமாகவும் கிடைத்திருக்கின்றன" என்பதாக நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் கூறி இருப்பதாக ஒரு ரிவாயத்திலிருந்து தெரிய வருகிறது. ஆகவே, இந்த ஹதீதின்படி திருகுர்ஆன் வேதம் தௌராத், ஜபூர், இஞ்ஜீல் ஆகிய எல்லா வேதங்களையும் பொதிந்ததாகவும், அவைகளுக்குமேல் அதிகமாகவும் இருக்கிறது. பரிபூரணமான மார்க்கத்திற்கு வேண்டிய எல்லா கொள்கைகளும், வணக்க முறைகளும், சமூக வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா சட்ட திட்டங்களும் சுருங்கக் கூறுமிடத்து, ஒரு முஸ்லிமின் ஜீவியத்தில் ஏற்படக்கூடிய எல்லாக் காரியங்களுக்கும் வேண்டிய போதனைகள் நிரம்பி இருக்கின்றன. இதனால்தான் நபிகள் நாயகம்(ஸல்.)அவர்களது சிஷ்யர்கள் "அல்லாஹ்வின் வேதம் எங்களுக்குப் போதுமானது" என்று கூறி இருக்கின்றனர். தவிரவும், திருகுர்ஆனிலுள்ள ஒவ்வொரு ஆயத்திற்கும் அநேக கருத்துக்களிருக்கின்றன. இவ்வாயத்துகளில் துருவி ஆராய்ந்த மட்டிற்கு அநேகம் அரும் பெரும் நுட்பங்கள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. வேதாந்த சாஸ்திரிகள், ஆத்ம ஞானிகள், தத்துவ விற்பன்னர்கள், இலக்கிய வித்துவான்கள், மார்க்க சட்ட நிபுணர்கள் முதலிய பலவகைக் கல்வியாளர்களும் திரு குர்ஆன் அருளப்பட்ட காலந்தொடுத்து இன்றுவரை ஆராய்ச்சி செய்து புதுப்புது விஷயங்களை வெளியிட்டுக்கொண்டே இருக்கின்றனர். அப்படி இருந்தும், திரு குர்ஆனின் பொருள்கள் இதற்குமேல் இல்லை என்று முடிவு கட்டி விட ஒருவராலும் முடியவில்லை. இவ்விதக் கருத்திலும் திரு குர்ஆனுக்கு "ஜவாமிஉல்கலிம்" என்ற பெயரைக் கொடுத்திருக்கின்றனர் சில பெரியார்கள்.

பற்பல நபிமார்களும் போதித்து வந்த ஷரீஅத்தானது ஒரு குறுகிய காலத்திற்கு மட்டிலுமே இருந்தது. ஆதலால், அந்த ஷரீஅத்துகள் எத்தனை காலம் இருக்கவேண்டியிருந்ததோ அத்தனை காலத்திற்கேற்றவாறு அந்த நபிமார்களுக்கு முஃஜிஸாக்கள் அளிக்கப்பட்டிருந்தன. ஹஜ்ரத் மூஸா (அலை.) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த 'அஸா' என்னும் தடி, தாவூத் (அலை.) அவர்களுக்கிருந்த இனிய குரல், யூஸுப் (அலை.) அவர்கள் சொற்பனத்திற்குக் கூறிய தாத்பரியங்கள், ஈஸா (அலை.) அவர்கள் பறவைகளின் உருவங்களின் மீது ஊதுவதுபோன்ற அற்புதங்கள் இப்பொழுது இல்லை. அவைகளெல்லாம் அவ்வப்போது அழிந்து விட்டன. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஷரீஅத்து உலகம் முடியும்வரை இருக்க வேண்டியதாகவும், பரிபூரணமானதாகவும் இருப்பதால் இறைவன் இந்த ஷரீஅத்திற்கு ஆதாரவாக நித்திய அற்புதத்தை அளித்துளான். அது தான் குர்ஆன் ஷரீப். திருகுர்ஆன் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது ஷரீஅத்திற்கு நித்திய அற்புதமாக இருப்பதால் இவ்வேதமும் இறுதிநாள்வரை அழியாமலிருக்கத்தக்கவாறு அதனை அவனே காப்பாற்றிக்கொண்டான். இதர நபிமார்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வேதங்கள் அந்த நபிமார்களது ஷரீஅத்தின் ஜீவியகாலத்திற்கு மட்டிலும் தேவையாக இருந்ததால் அவைகள் பிற்காலத்தில் மாற்றப்பட்டு போயின.

முற்காலத்திலுள்ள வேதங்களில் கூறப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் அக்காலத்திலுள்ள மக்களின் தன்மைக்கும், பிரசாரத்தின் போக்குக்கும் ஏற்றவாறு அருளப்பட்டன வாதலால் அவ்வேதங்களில் எல்லா விவரங்களும் கூறப்படவேண்டிய அவசியமில்லை. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் போதித்த ஷரீஅத்தானது நிரந்தரமானதாக இருப்பதாலும், அதற்கு ஆதாரவாக திருகுர்ஆன் நித்திய முஅஜிஸாவாக இருப்பதாலும் இனிமேல் புதிதாக எவரும் நபியாக வந்து ஷரீஅத்தைப் போதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆதலால், எல்லா விபரங்களும் திருகுர் ஆனில் சம்பூரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இறுதி நபியாக இருக்கிறார்கள். இதனைக் குறித்துத்தான் இறைவன் தனது வேதத்தில் "இன்றையதினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்கு நான் சம்பூரணமாக்கிவிட்டேன். இன்னும் எனது அருட்கொடையை நிறப்பமாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்கு இஸ்லாம் மதத்தை மார்க்கமாக அங்கீகரித்துக்கொண்டேன்" என்பதாகக் கூறி இருக்கிறான். எனவே, இவ்விஷயங்கள் இதற்கு முந்தியுள்ள எந்த நபிமார்களுக்கும் அளிக்கப்படாதவைகள். இவைகளை

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மட்டிலும் தான் அடைந்திருந்தார்கள்.

பிரசாரத்திற்குக் கூலி

சந்திரன் சூரியன் ஆகியவைகள் இப் பிரபஞ்சத்தின் இருளை நீக்கி, அதன் முன்னேற்றத்திற்காக ஒளியையும் பிரகாசத்தையும் வீசுவனவேபோல் கண்ணுக்கு புலப்படாததாகிய ஆத்மீக உலகிற்கு, உலகின் மிகப் பெரிய ஞானசிரியரான ஹஜ்றத் முஹம்மது முஸ்தபா (ஸல்.) அவர்கள் சந்திரன் சூரியனைப்போலிருக்கிறார்கள். இதனைக் குறித்து இறைவன் தனது திருமறையின்கண் "விளக்கு" என்றும், பிரகாசிக்கும்படியான சந்திரன் என்றும் கூறியுள்ளான். இவ் வுலகிலுள்ள சீர்திருத்தக்காரர்கள், வழிகாட்டிகள் யாவரிலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்தான் ஆத்மீக உலகிற்குப் பிரகாசத்தை ஈந்து, மனித இருதயங்களில் உணர்ச்சியையும் பிரகாசத்தையும் கொடுத்தார்கள். நாயகம் (ஸல்.) அவர்களது போதனையானது மனித உலகிற்கு எல்லையில்லாத முன்னேற்றங்களுக் குரிய தலை வாசலைத் திறந்து விட்டிருக்கிறது. நாகயம் (ஸல்.) அவர்களது போதனைகளினால்தான் மனிதன் பரிபூரணத்தன்மையை அடைவதற்குரிய எல்லாக் காரியங்களுக்கும் இனியில்லா வண்ணம் முன்னேற்ற மேற்படுகிறது. இனிமேலும், இவ் வுலகம் அடைகிற முன்னேற்றங்களும் கூட நாயகம் (ஸல்.) அவர்களது அரும்பெரும் போதனைகளின் பயனேயாகும்.

மனிதர்கள் அகத் தூய்மை யடைவதற்கு இரண்டு விஷயங்கள் மூலமாக ஏற்படுகிறது. அல்லாஹு தஆலாவினிட மிருந்து நபிமார்கள் கொண்டு வருகிற வேதங்கள் மூலமாக ஏற்படுவது ஒன்று. இவ்வேதங்களிற் சொல்லப்பட்டதுபோல் நபிமார்கள் நடந்து ஜனங்களுக்கு முன் மாதிரியாகச் செய்து காண்பிப்பது மற்றொன்று. இதுதான் நுபுவ்வத்திலுள்ள இரண்டு அம்சங்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு இவ்விரு அம்சங்களும் பரிபூரணமாக இருக்கின்றன. நாயகம் (ஸல்.) அவர்களது போதனை, மனிதவர்க்கத்தினருக்கு தேவைப்படுகிற எல்லா அவசியங்களுக்கும் எக் காலத்திலும் உதவக்கூடியதாக இருப்பதுபோல நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அவைகளுக்கு முன்மாதிரியாகவும் இருந்து வருகிறார்கள். இதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது போதனைகளும், அவர்கள் காண்பித்துள்ள முன் மாதிரியும் முடிவற்ற முன்னேற்றத்திற்கும் சுபிட்சத்திற்கு முள்ள தலைவாசல்களைத் திறப்பனவாக இருக்கின்றன.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது போதனையானது, மிகமிகத் தாழ்ந்தவர்களாகவும் பிற்போக்காளர்களாவும் இருந்தவர்களை இவ்வுலகின் ஞானசிரியர்களாகவும், முன்னேற்றத்தின் துறைகளைக் கற்பிப்பவர்களாகவும் மாற்றிவிட்டது என்பதை உலக முழுவதும் அறிந்திருக்கிறது. இப்பொழுது நாம் எந்தப் பெரிய மனிதரின் அரும் பெருங் காரியங்களையும் ஒழுக்கங்களையும் பற்றி கூறிக்கொண்டிருக்கிறோமோ அவரது மகத்துவத்தையும் பெருமையையும் பரிசுத்தமுள்ள இருதயம் ஒவ்வொன்றும் ஒப்புக்கொள்வதுமல்லாமல் உண்மையை உரைக்கும் நா அவைகளை விண்ணப்பமும் செய்துகொண்டிருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மிகவும் கஷ்டங்கள் நிறைந்ததும் இருள் சூழ்ந்ததுமான ஒரு காலத்தில் பிறந்தார்கள் என்பது சரித்திரக்காரர்களுக்கு மறைந்த விஷயமன்று. அப்படி இருந்தும் மனிதர்களது இருதயத்தில் நாயகம் (ஸல்.) அவர்கள் உண்டுபண்ணிய மாறுதலுக்கு நிகரானதை உலகச் சரித்திரம் காண்பிக்க முடியாது. இவ்வுலகில் வந்துள்ள சீர்திருத்தக்காரர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் ஓரளவு மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், நாயகம் (ஸல்.) அவர்கள் செய்ததற்கு உதாரணம், அவைகளில் இல்லை. இதனால்தான், இறைவன் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை நபியாக அனுப்பிய மனித வர்க்கத்திற்குப் பேருபகாரம் செய்ததாக திரு குர்ஆனில் கூறி இருக்கிறான்.

ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலகிற்குச் செய்துள்ள பேருபகாரங்களை உணர்ந்தவர்களாகவும், கலிமாவை ஓதுபவர்களாகவும், நாயகம் (ஸல்.) அவர்கள்மீது அன்பு, விசுவாசம் கொள்வதுதான் தங்களது ஈமான் என்றும் தீன் என்றும் நம்பிக்கை கொண்டிருப்பவர்களாகவுமுள்ள மூமின்கள் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் எங்ஙனம் நிறைவேற்றுவார்கள்? நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்குத் தங்களது நன்றிதறிதலை எவ்வாறு செலுத்துவார்கள்? என்பதுதான் இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய முக்கிய

விஷயம். இவ்விஷயத்தைக்குறித்து இவ் வியாசம் எழுதப்படுவதால் முஸ்லிம்கள் இதனை ஊன்றிப் படிப்பார்கள் என்று நம்புகிறோம். இது சம்மந்தமாக திரு குர்ஆன் கூறுவது யாது என்பதை முதலில் கவனிப்போம்:

திரு குர்ஆனில் அநேக நபிமார்களது பிரசார முயற்சிகளைப்பற்றிய விவரங்கள் கூறப் பட்டிருக்கின்றன. அவர்களில் எவரும் மதப் பிரசாரத்திற்கு தமது சமூகத்தாரிடம் எவ் விதக் கூலியையும் கேட்கவில்லை. மக்கள் அல்லா ஹுதஆலாவினது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டு மென்பதைத்தான் எதிர் பார்த்தனர். இந்நிலைமையில் எவ்வித பிரதி பல னையும் எதிர்பார்க்காமல் அபிமானத்தையும் அன்பையும் கருதிக்கூறப்படும் உபதேசத்தைச் செவிமடுத்துக் கேட்காமலிருப்பதும், அலக்ஷி யம் செய்வதும் முட்டாள்தனமும் தனக்கே தீங்கிழைத்துக் கொள்வதுமாகும். இவ்விபாத் தைக் குறித்தும் எல்லா நபிமார்களும் தங்கள் சமூகத்தாருக்கு உபதேசம் புரிந்திருக்கிறார்கள். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ் விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டியதென்ன வென்பதை இறைவன் வேறு விதமாக அறிவித் துள்ளான்.

" பந்துக்களிடத்தில் அன்பு செலுத்துவதை யல்லாமல் வேறு எந்தக் கூலியையும் அந்தப் பிரசாரத்திற்காக நான் உங்களிடத்தில் கேட்க வில்லை என்று (நபியே) நீர் கூறுவீராக".

இந்த ஆயத்தில் சொல்லப்பட்டபடி நபிகள் நாயகம்(ஸல்.) அவர்கள் தங்களது சன்மார்க்கப் பிரசாரத்திற்கு பந்துக்களிடத்தில் அன்பு செலுத்துவதையல்லாமல் வேறு எந்தக் கூலி யையும் எதிர்பார்க்கவோ கேட்கவோ கூடாது என்பதாக இறைவன் கட்டளையிட்டிருக்கிறான் என்பது விளங்குகிறது. பந்துக்களிடத்தில் அன்பு செலுத்துவதுதான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஆற்றிய தொண்டுக்கு நாம் செய்யவேண்டிய கடமை. இதனை நிறைவேற்றி விட்டால் நமது பொறுப்பை நாம் நிறைவேற் றியவர்களாகிவிடுவோம். ஆகவே, பந்துக்கள் என்பதற்குரிய கருத்துக்களைப்பற்றிச் சிறிது விவரிப்போம். ஒவ்வொரு மனிதரும் தங்கள் தங்களது பந்துக்களுடன் அன்பாக இருக்க வேண்டும் என்பது ஒரு கருத்து. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது பந்துக்களிடத்தில் அன்பு கொள்ளவேண்டும் என்பது மற்றொரு கருத்து. இவ்விரு வகைக் கருத்துகளும் ஒன் றுக்கொன்று முரணாக இல்லை. நமது இஸ் லாமிய ஷரீஅத்தின்படி முஸ்லிம்கள் ஒரு வருக்கொருவர் அன்பாகவும் நேசமாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே, சாமான்ய முஸ்லிம்களிடம் அவர்கள் முஸ்லிமாக இருக்கிறார்கள் என்பதற்காக அன்பு செலுத்து வது கடமையாக இருக்கும்போது, நமக்கு ஈமான் இஸ்லாம் ஆகியவைகளைக் கற்பித்துக் கடைத்தேற்றுகிற நபிகள் நாயகம்(ஸல்.) அவர் களது பந்துக்களிடத்தில் நாம் அன்பும் பற்றும் கொள்வது நம்மெல்லோர் மீதும் ஏற்பட் டுள்ள கடமையாகும். இதனால் தான் ஸெய் யிதுனா இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் ஹஜ்றத் அலீ(றலி.) அவர்களது சந்ததியினரைக்குறித்து " றஸூலுல்லாஹ்வின் குடும்பத்தினரே, உங் களை நேசங்கொள்வது பர்லாக இருக்கிறது. இவ் விஷயம் அவனிறக்கிய திருகுர்ஆனின் கட்டளை யாகும்" என்று கூறி இருக்கிறார்கள்.

குறைஷிக் குலத்தினர் யாவரும் நபிகள் நாய கம் (ஸல்.)அவர்களது பந்துக்களே யாவர். என் றாலும், 'அஹ்லபைத்து' அதாவது நபிகள் நாய கம் (ஸல்.) அவர்களது குடும்பத்தினர் என்பது ஹஜ்றத் அலீ (றலி), ஹஜ்றத் பாத்திமா (றலி) இவ்விருவர்களது புதல்வர்களாய இமாம்ஹஸன் (றலி.), ஹுஸைன் (றலி) ஆகியவர்களைக் குறிக் கிறது.

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ்றத் பாத்திமா (றலி), இமாம் ஹஸன் (றலி), இமாம் ஹுஸைன் (றலி.) ஆகிய மூவரையும் அழைத்து அவர்களைத் தங்களது கம்பளியால் சுற்றிக்கொண்டு " நாயனே, இவர்கள் எனது குடும்பத்தினர். இவர்களைவிட்டு அசங்கிதத்தை நீ அகற்றி, இவர்களைச் சுத்தப்படுத்துவாயாக" என்று துஆச் செய்ததாக ஹதீது ஷரீபில் வந் திருக்கிறது. ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் செய்த பிரசாரத்திற்குத் தக்கவாறு நன்றி செலுத்துவதானது அவர்களது குடும் பத்தாராகிய ஸாதாத்துகளின் மீது நாம் அன் பும் அபிமானமும் கொள்வதுதான் என்பது இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது.

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சந்ததி யினரான ஸாதாத்துகளின் மீது நாம் அன்பு கொண்டு அவர்களுக்கு மரியாதை செய்வதும், கனப்படுத்துவதும், மார்க்கநெறிகளில் அவர்கள் காண்பிக்கும் சரியான வழியினைப் பின்பற்று வதும் அவசியமாகும்.

நமது டெபுடேஷன்

நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் தோன்றி இன்றைக்கு எட்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இதற்கிடையே அது செய்துள்ள அரும்பெரும் தொண்டுகள் உங்கள் முன் நின்றுகொண்டிருக்கிறது.

தென்னாட்டிலும் சிலோனிலும் காதியானிக் கொள்கைகளைப் பரத்த பஹீரதப் பிரயத்தனம் செய்யப்பட்டு வந்தது. நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களையும், திரு குர்ஆனையும் குறித்து தப்பான முறையில் பிரசாரஞ் செய்யப்பட்டு வந்தது. 40 வருடங்களுக்கு முன் சத்தியத் தூதர் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைக் குறித்து தூஷண முறையில் எழுதப்பட்ட கிறிஸ்துவ சரித்திர சங்க்ஷேபம் என்ற ஆங்கில நூல் நம்மிடையே இருந்துவந்தது. அவ்வாபாச நூல் தமிழிலும் மலையாளத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. இதில் வரையப் பெற்றுள்ள ஆபாச மொழிகளைக் கேள்வியுற்ற எந்த முஸ்லிமின் ஹிருதயமும் கொதிப்படையாதிருக்க முடியாது. இவைகளை அகற்றுவதர்க்கு பெரும் பாடுபட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இக்கடமையை உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கமல்லவா பொறுப்பேற்றுக்கொண்டது. உங்கள் சங்கம் இந்நூல்மீது நடவடிக்கை எடுத்ததன் பயனாக அரசாங்கத்தாரால் அவ்வாபாஸ நூல் பறிமுதல் செய்யப்பட்டுப் போயிற்று.

காதியானிக் கொள்கை சம்மந்தமாய் நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை. இதுவரை உங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம் ஏற்படாதிருக்கின் அநேக வாலிபர்கள் காதியானிக் கொள்கைக்கு இரையாகிப் போயிருப்பார்கள். அநேக இடங்களில் காதியானி வணக்கஸ்தலம் ஏற்பட்டுப்போயிருக்கும். அல்லாஹ்வின் அருளால் உங்கள் சங்கம் ஏற்பட்டதன் பயனாக இக்கொள்கைகள் யாவும் துறத்தப்பட்டுப் போயிற்று. இந்நிலைமை உண்டாவதற்கு உங்கள் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சாமான்யமானதல்லவென்பது தாங்களறிந்ததே. எத்தனை இடங்களுக்கு உலமாக்களை அனுப்பி பிரசாரம் புரியவேண்டியதாயிருந்தது. "ஹிஸ்புல்லாஹ்" கூட்டங்களைப் பலவிடங்களிலும் கூட்ட வேண்டியதாயிற்று. அநேக விஷயங்களுக்கு பல தடவை நீதிமன்றங்களில் விவகாரம் நடத்தவேண்டியதாகவுமிருந்தது. இவைகளுக்காக அளவற்ற திரவியங்கள் செலவிட நேர்ந்ததென்பது சகோதரர்களுக்குத் தெரிந்தவையே.

இவ்வரும் சேவைகளைப் புரிந்து வரும் உங்கள் சங்கம் இன்னும் அநேக காரியங்களைச் சாதிக்கவேண்டியதிருக்கிறது. தமிழ் பாஷையில் அநேக கலைகள் வெளியிட வேண்டியிருக்கிறது. காதியானிசம், நாஸ்தீகம் இவைகளை மறுத்தும் நம் சன்மார்க்கச் சித்தாந்தம், அநுஷ்டானம் இவைகளை விபரித்தும் அரிய நூல்கள் வெளியிட வேண்டியதிருக்கிறது. இன்னும் அநேக நூல்கள் அறபி உர்து பாஷையிலிருந்து மொழிபெயர்த்து வெளியிடவேண்டும். அதுபொழுதுதான் நாம் செய்துவரும் வேலை என்றென்றைக்கும் தமிழ் முஸ்லிம்களின் ஹிருதயத்தில் ஊடுருவி நிற்கும். இவைகளை அனுசரித்து சங்கத்தின் பொருளாதார நிலைமையை செம்மைப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்கு சொந்தத்தில் ஒரு பிரஸ் இருந்துவிடின் மேற்குறிப்பிட்ட காரியங்களை கஷ்டமின்றி நடத்திச் செல்ல சௌகரியமாயிருக்கும்.

இதனை உத்தேசித்து நம் சங்கத்தின் ஸ்தாபகர்களி லொருவரும், காரியதரிசியுமான மௌலானா மௌலவி அல்ஹாஜ் S. A. முகம்மது அலீசாஹிப் அவர்களும், சங்கத்தின் பிரதம பிரசங்கிகளான மௌலானா மௌலவி அபுல்பயான் முகம்மது மியான் சாஹிப் அவர்களும், மௌலானா மௌலவி அஸதுல்பயான் S. K. முகம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களும் இலங்கை விஜயஞ் செய்துள்ளார்கள். அங்குள்ள நமது அபிமானிகளும் ஏனையோரும் அவர்களுக்கு ஆதரவு காட்டி சங்கத்தின் பொருளாதாரத்தை உச்சஸ்தானத்திலாக்கி வைக்க உதவியளிக்குமாறு கோருகிறோம். இவ்வாறே நமது டெபுடேஷன் இதர தேசங்களுக்கும் செல்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய ஏற்பாடுகள் இறுதிநாள் வரை சிறந்தோங்கி நிற்க வேண்டிய அவசியம் யாவருமறிந்ததே, ஆகவே, இதற்காவன செய்ய வேண்டுமாய்க் கோருகிறோம்.

கொழும்பில் உபசரிப்பு

நம் சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க சார்பாக கொழும்பு சென்றிருக்கும் மௌலானாக்களான ஜனுப் எஸ். எ. அல்ஹாஜ் முகம்மது அலீசாஹிப், மௌலவி S. K. முகம்மது ஷர்புத்தீன் சாஹிப், மௌலவி M. முகம்மது மியான் சாஹிப் இம்மூவரும் கொழும்பின் பற்பல பாகங்களிலும் மார்க்க உபன்யாசம் செய்து வருவதன்பயனாக விசேஷ ஊக்கமும் உற்சாகமுமேற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். 1-4-38 இரவு 7 மணிக்கு ரேடியோ மூலம் அரிய உபன்னியாசம் நிகழ்த்தப்பட்டது. ஜனுப் மௌலவி முகம்மது மியான் சாஹிப் அவர்களால் "இஸ்லாம் என்பது என்ன" என்னும் பொருள் பற்றியும், மௌலவி முகம்மது ஷர்புத்தீன் சாஹிப் அவர்களால் "உலகம் சமாதானமடைய வேண்டுமாயின் இஸ்லாத்தின் சகோதரத்துவத்தைப் பின்பற்ற வேண்டும்" என்னும் பொருள்பற்றியும் சாங்கோபாங்மாய் உபன்யாசிக்கப்பட்டது. 1, 2 தேதிகளில் 3-ம் குருக்கு தெரு ஹனபி மஸ்ஜிதில் உர்துவிலும், தமிழிலும் அரிய பிரசங்கங்கள் செய்யப்பட்டது. கும்பனி தெரு முஸ்லிம் லைப்ரேரியில் கான்சாஹிப் பி. என். எம். ஷாஹுல் ஹமீது பஹதூர் அவர்கள் தலைமையின்கீழ் "புத்தகாலயத்தின் அவசியம், அதற்கு முஸ்லிம்கள் செய்த சேவை" என்னும் பொருள்பற்றி பிரசங்கம் நடைபெற்றது. 8-ம் தேதி பம்பலபட்டி மஸ்ஜிதில் ஜும்ஆத் தொழுகைக்குபின் "இஸ்லாத்தின் மகத்துவம், ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் சேவை" என்னும் பொருள்பற்றி உபன்யாசிக்கப்பட்டது. 15-4-38 ஜும்ஆவுக்குபின் கல்துறை பள்ளியிலும் சனி இரவு கடைத்தெருவு மஸ்ஜிதிலும் உபன்யாசங்கள் நடைபெற்றன.

ஆங்கு மௌலானாக்களுக்கும் மற்றும் பிரபலஸ்தர்கட்கும் கனவான்களான எ. கே. செய்யித் & Co. கார்கோபோட் கம்பெனியின், பார்ட்டனர் கலுங்குமொஹ்தீன் அவர்களாலும் பம்பலபட்டி M. M. அப்துல்காதிர் மரைக்காயர் அண்ட் பிரதர்ஸ் அவர்களாலும், கோட்டை ஷம்ஸுமுஹைதீன் அவர்களாலும், என். எம். எஸ். அபூபக்கர் அண்டு பிரதர்ஸ், அவர்களாலும், ஸைனபோர்ட் ஸி. எம். எச். எம். சாலிஹ் ஹாஜியார் அவர்களாலும் மற்றும் பல நண்பர்களாலும் முறையே சிறப்பான விருந்துகளும் டீ பார்ட்டிகளும் நடைபெற்றன. நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்க தூதுவக்கோஷ்டியை சிலோன் வாசிகள் உற்சாகமாக வரவேற்று ஊக்கமுடன் ஆதரித்து உபசரித்து வருவது போற்றத்தக்கதாகும்.

பஞ்ஜின முஸ்லிம் வாலிப சங்கத்தாரின் உபசாரம்.

19-4-38 காலை மணி 11-க்கு கொழும்பு பஞ்சின முஸ்லிம் வாலிப சங்கத்தார் நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" தூதுவ கோஷ்டி மௌலானாக்களை காரில் சங்க கட்டிடத்திற்கு அழைத்து சென்றார்கள். முன்னேற்பாட்டின்படி சங்க அங்கத்தினர்களும் மற்றும் ஹிந்து முஸ்லிம் நண்பர்களும் அங்கு விஜயம் செய்திருந்தனர். ஆரம்பத்தில் சங்கத்தின் காரியதரிசி சங்கத்தின் ஸ்தாபன கருத்துக்களையும் சேவைகளையும்மௌலானாக்களுக்கு எடுத்துரைத்து விட்டு, அடியில் குறிப்பிடும் உபசாரப் பத்திரத்தை வாசித்துக் கொடுத்து புஷ்பஹாரம் சூட்டினர்.

உபசார பத்திரம்.

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் பிரசாரர்களும், தென்னாட்டு முஸ்லிம் சமூகத் தலைவர்களும், மௌளானாக்களுமாகிய ஆலீ ஜனுப்கள், மௌலானா, மௌலவி, அல்ஹாஜ், எஸ். எ. முகம்மது அலி சாஹிப் ஹிபாஜத்துல் இஸ்லாம் காரியதரிசி கூத்தானல்லூர். மௌலானா மௌலவி முகம்மது ஷர்புத்தீன் சாஹிப், தென்னாற்காடு ஜில்லா முஸ்லிம் லீக் காரியதரிசி. மௌலவி முகம்மது மியான் சாஹிப், இஸ்லாமிய பிரசாரகர் திண்டுக்கல். ஆகிய முப்பெரும் மௌலானாக்களுக்கும்,

கொழும்பு பஞ்சின முஸ்லிம் பால்யர் சங்கத்தவர்களால் வாசித்துக் கொடுத்த வரவேற்பு உபசார பத்திரம்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா நிர்ரஹீம்.

அன்பார்ந்த மௌலானாக்களே! தலைவர்களே!! அஸ்ஸலாமு அலைக்கும். வருக வருக. தங்கள் வருகை, நல் வருகை ஆகுக.

முப்பெரும் தலைவர்களே !

இந்த ஏழை சங்கத் தவர்களின் அழைப்புக் கிணங்கி இச்சங்கத்திற்கு விஜயமளித்துள்ள இச்சந்தர்ப்பத்தை, எங்களுக்கு வாய்ந்த பெரும் பாக்கியமெனக் கருதி பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மார்க்க சேவைசெய்யும் மாபெருந்தலைவர்களே

விளக்கென்றால் வெளிச்சத்தை காண முடியா, வெளிச்சத்திற்கு தீயின் அவசியம் மிகவும் தேவை அல்லவா? தீயின் உதவியால் தீபசுடரைக் கொண்டு இருளின் தோற்றத்தில் காணமுடியாத பல தோற்றங்களைக் கண்டு நலவையும் கெடுதியையும் பகுத்தறிந்து நாம் நடந்து வருவதைப்போன்று, முஸ்லிம்களின் இருதயத்தில் பதிந்துள்ள இருளை நீக்கி, இஸ்லாத்தின் பிரகாசத்தை அளிக்கும் பிரகாசம் பொருந்திய பிரசாரத்தைக் கைகொண்டு திகழுவதுடன் அதின் உண்மையான தோற்றத்தை அடைந்து ஆனந்திக்கச் செய்தும், அதன் விரோதிகளை எதிர்த்து, வீரமுடன் போராடியும் வெற்றி மாலை சூட்டிகொண்ட தங்களின் வருகை, எங்களின் பெரும் பாக்கியம் என்றே கருதுகின்றோம்.

அகமதிகளை அடக்கிய அருமாந்த மௌலாணுக்களே !

பல ஆண்டுகளாக நம் தென்னாட்டில் தலை எடுத்து தாண்டவமாடி வந்த காதியானிகளின் தீய பிரசாரத்தை எதிர்த்து, அன்னவர்களின் குபிரியத்தான கொள்கைகளை எடுத்தோதி, மக்களின் ஈமான் மங்கிவிடாது காப்பாற்றியதுடன் அந்த விஷம் நிறைந்த நஞ்சர்களுக்கு தக்க வாயாப்பு ஈந்து, பெட்டிக்குள் பாம்பு அடங்கியது போன்று, அடக்கி ஒடிக்கிய பெருமை தங்களைச் சார்ந்து நிற்கும்போது தங்களை வரவேற்று உபசரிப்பதில் எங்களுக்குள்ள ஆர்வம் அதிகம் விம்மி எழுகின்றது.

அரசியல் வழிகாட்டும் அண்ணல்களே !

இந்தியாவில் முஸ்லிம்கள் இருப்பதா? இறப்பதா? என்ற பிரமாண்டமான நெருக்கடி ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில், ஜனாப் முகம்மதலி ஜின்னா அவர்கள் காட்டும் வழியை தாங்கள் நம் தென்னிந்திய முஸ்லிம்களுக்கு எடுத்தோதி, முஸ்லிம்கள் அரசியல் துறையில் ஈடுபட, முஸ்லிம் லீக்கின் அவசியத்தை தென்னாட்டு முஸ்லிம்களின் உள்ளத்தே புகுத்தி, புத்துணர்ச்சி அளித்த பெருமையும் தங்களைச் சார்ந்து நிற்கும்போது தங்களை வரவேற்பதில் எங்களுக்குள்ள ஆர்வத்தை விள்ளவும் முடியா ?

கண்ணியம் மிக்க புண்ணியர்களே !

எங்களுக்கேற்பட்ட சாவகாசக்குறைவாலும், தங்கள்போன்ற மௌலானாக்களை வரவேற்று உபசரிப்பது எங்கள் சங்கத்தவர்களுக்கு இதுவே முதல்தடவையாதலாலும் தங்களை வரவேற்று உபசரிப்பதில் பல குறைகள் காணலாம் என்றாலும், தாங்கள் பெருமனதோடு அவைகளை மன்னித்து எங்களது உபசாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறோம். வஸ்ஸலாம்.

இங்ஙனம்: தங்கள் அன்புள்ள,

பஞ்சின முஸ்லிம் பால்யர் சங்கம் கொழும்பு.

ஷை உபசார பத்திரத்திற்கு பதிலளிக்கும் முறையில், மௌலானா மௌலவி, அஸதுல் பயான் S. K. முஹம்மத் ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் பேசியதின் சாராம்சமாவது:—நீங்கள் எங்களை உபசரித்ததற்கு நாங்கள் வந்தன மளிக்கின்றோம். உங்களின் அன்பு மேலீட்டாலும், மார்க்க பக்தியாலும், எங்களை அளவு கடந்து புகழ்ந்திருக்கின்றீர்கள். அல்லாஹு தஆலா உங்கள் அன்பிற்கும், நன்நோக்கத்திற்கும் கூலி தரட்டும். உங்கள் சங்கம் ஏற்பட்டு சொற்பகாலமாகினும் அளவுகடந்த முன்னேற்றமடைந்திருக்கின்றீர்கள். அங்கத்தினர்கள் ஒற்றுமையாய் இருந்து வருவதுபற்றி சந்தோஷப்படுகிறோம். இவ்வொற்றுமையை வளர்த்து வருவதற்குள்ள சகல ஏற்பாட்டையும் செய்து கொள்ளுங்கள். இவ்வித ஒற்றுமை சகல முஸ்லிம்களுக்கு மத்தியிலும் ஏற்படுவதற்காகவே நாங்கள் அரும்பாடுபட்டு வருகிறோம். ஒற்றுமைதான் நமது முன்னேற்றத்திற்கு ஆணிவேராகும். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் இதைத்தான் நமக்கு விசேஷமாக உபதேசித்துள்ளார்கள். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடப்பதிலும், மார்க்கபக்தியிலும் சங்கத்தினர்களான நீங்கள் ஸ்தரப்பட்டிருப்பதில் தான் நீங்கள் முன்னேற்றமும் இகபர நன்மைகளும் அடைதல் கூடுமென, கூறி முடித்தார்கள்.

அடுத்தபடியாக மௌலானா மௌலவி அபுல் பயான் எம். முஹம்மது மியான் சாஹிப் அவர்

கள் பிரசங்க சுருக்கம்:- நீங்கள் எளிய முஸ்லிம்களென்று குறிப்பிட்டீர்கள். ஏழ்மைத்தனத்தை பெருமானார் (ஸல்) அவர்கள் போற்றி புகழ்ந்திருக்கின்றார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. இன்றைக்கு எளியவர் நாளைக்கு சீமானாய் விடுகின்றனர். முயற்சி மெய்வருந்தக் கூலி தரும், என்றபடி பிரயாசை எடுங்கள்; அதன் பலாபலனை கூடிய சீக்கிரம் அடைவீர்கள் என்று கூறி, இதற்கு ஸஹாபாக்களின் சரித்திர பிரலாபத்தை சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தார்கள். திருநபி(ஸல்.) அவர்களின் எளிய வாழ்க்கை பிரலாபத்தைப் பிரஸ்தாபித்து சங்கத்தினர்கள் நடந்துக்கொள்ள வேண்டிய கடமைகளை அழகிய முறையில் பிரசங்கித்து முடித்தார்கள். பின்னர் ஜனாப் மௌலானா மௌலவி அல்ஹாஜ் எஸ். ஏ. முஹம்மத் அலி சாஹிப் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசி அவர்கள் மௌலானாக்களின் பிரசங்கத்தை ஆதரித்துவிட்டு, சங்கத்தினர்கள் குன்றா ஊக்கத்துடன் சங்க முன்னேற்ற விஷயத்தில் ஈடுபட்டு உழைக்கவேண்டுமென்றும், இச்சங்கம் ஆரம்ப காலத்தில் எளிய முறையில் தென்பட்டாலும் விடாமுயற்சியின் பலனாக இறுதியில் மகா வெற்றியாக முடியும் என்றும், ஒவ்வொரு ஸ்தாபனங்களும் இன்று உலகில் கீர்த்தியும் பிரலாபமும் அடைந்திருப்பதின் சரித்திரத்தை நன்கு கவனிப்பீர்களாயின் அவைகள் ஆரம்பத்தில் மிகவும் பலயீனமாக இருந்ததையும், விடாமுயற்சி நன்னோக்கம் இவைகளின் பயனாக இறுதியில் மகத்தான வெற்றியடைந்திருப்பதையும் காண்பீர்கள். எனவே, நீங்கள் மார்க்கநெறி தவறாமலும் இஸ்லாத்தின்மீது அதிக பற்றுடன் ஒற்றுமையாகவும் வேலை செய்வீர்களாயின் அதிசீக்கிரத்தில் முன்னேற்றத்திற்கு மத்தியில் உங்களைக் காணுவீர்கள். நமது ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் சேவைகளையும், அது தனது நோக்கத்தில் அதிகம் வெற்றி பெற்றுள்ளதையும் போற்றியுள்ளீர்கள். உங்களின் இந்த அன்பை பாராட்டுகிறேன். உங்கள் அனைவர்களின் ஆதரவும் அன்பும் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின்பேரில் என்றும் இருக்குமென நம்புகிறேன் எனக் கூறி அமர்ந்தார்கள்.

சங்கத்தின் காரியதரிசி அவர்கள் மௌலானாக்களுக்கும் சமூகமளித்த அன்பர்களுக்கும் வந்தனமளித்தார்கள். சமூகமளித்தவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. பின் மௌலானாக்களை அழைத்துச் சென்று சங்கத்தினர்கள் தேகப்பியாஸம் பயிலும் கோதாவை காட்டியும், சிலர்களின் சரீர தேகாப்பியாஸ முறைகளை பார்வையிடவும் செய்தனர். இவைகளைப் பார்வையிட்ட மௌலானாக்கள் மிகவும் சந்தோஷமடைந்து போற்றினார்கள். சங்கத்தினர்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் மாசிகைக்கு பல சந்தாக்களைச் சேர்த்து வருவதாக வாக்களித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

நன்றி பாராட்டல்.

நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தின் டெபுடேஷன் மெம்பர்களான ஜனாப் மௌலானா மௌலவி, அல்ஹாஜ் S. A. முஹம்மத் அலி சாஹிப், ஜனாப் மௌலானா மௌலவி S.K. முஹம்மத் ஷர்புத்தீன்சாஹிப், ஜனாப் மௌலானா மௌலவி M. முஹம்மத் மியான்சாஹிப் முதலியவர்கள் கொழும்பு விஜயம் செய்திருக்கின்றார்கள் என்பது நேயர்கள் அறிந்ததே. இலங்கையில் வதியும் இலங்கை முஸ்லிம்களும், இந்திய முஸ்லிம்களும் தூதுவ கோஷ்டியை ஆதரித்தும் உபசரித்தும் அவர்களது பிரசாரத்திற்கு ஆக்கமளித்து வருவது போற்றதக்கதாகும். இம்முறையில் இங்கு சில நண்பர்களின் நாமங்களை குறிப்பிட வேண்டியது முக்கிய அவசியமாக இருக்கின்றது. கனவான்களான காயல்வாசியும், A. K. செய்யித் & Co. கார்கோபோட் கம்பெனியின் பார்ட்டனருமான கலுங்கு முஹய்யதீன்சாஹிப் அவர்களும், பிரபல வியாபாரியும் அதிராம்பட்டணம் வாசியுமான A. M. நூஹு அவர்களும், பிரபல தேயிலை ஏலக்காய் வியாபாரியான சாத்தன்குளம் வாசி N. S. M. அபூபக்கர் & பிரதர் அவர்களும், ஷியூர்வாசியும் பம்பளபிட்டி வியாபாரியுமான M. M. அப்துல் காதிர் மரைக்காயர் பிரதர்ஸ்களும், ஸ்ரீ வைகுண்டம் வாசியும் கோட்டையில் பிரபல வியாபாரியும் லெப்டன் டீ கம்பெனி ஏஜண்டுமான M. I. ஷம்ஸு மொஹைதீன் அவர்களும், கொழும்பு சைனாபோர்ட் வாசியும், பிரபல ஜுவலர் வியாபாரியுமான C. M. H. M. சாலிஹ் ஹாஜியார் அவர்களும், கல்துறை பிரபல வியாபாரி S. K. ஷாஹுல்ஹமீத் அவர்களும், A. O. M. அப்துல் ஹமீத் ஹாஜியார் அவர்களும், மற்றும் பல நண்பர்களும் மௌலானாக்களான ஹிபாஜத்துல் இஸ்லாம் தூதூ கோஷ்டியார்களுக்கும் மற்றும் பல நண்பர்

களுக்கும், சிறப்பான விருந்துகளளித்தும், தூதுவக்கோஷ்டிகளின்நோக்கத்திற்கு ஆக்கமளித்தும் வருவதை நாம் அறிந்து மிகவும் சந்தோஷமடைவதுடன் அன்னவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பாக மனமார்ந்த வந்தனத்தையும் சமர்ப்பித்துக் கொள்ளுகிறோம். மேலும் ஜாஹிரா காலேஜின் புரோபஸர் மௌலானா அல்ஹாஜ் ரவூப்பாஷாசாஹிப் B. A. அவர்களின் நன்முயற்சியும் குறிப்பிடத்தக்கது. ஜனுப்களான காயல்மாநகர் வாசிகளான P.M.K. செய்யித் உமர், P.M.K.A.L. உமர் அப்துல் காதிர், ஷெ ஜுனைத், அதிராம்பட்டணம் வாசிகளான A. M. K. ஹாஜி ஸ்டோர், A. M. K. ஆலிம் சாஹிப் கம்பனி, ஜனுப் மௌலானா மௌலவீ முஹம்மத் முஹய்யதீன் ஆலிம்சாஹிப், புரோக்கர் முஹம்மத் தம்பி, காலங்குடியிருப்பு வாசியான M. M. ஷேக் அலி முதலிய கனவான்கள் நமது நோக்கத்தில் அரும்பிரயாசையுடன் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹுதஆலா இவர்களுக்கு ஆரோக்ய திடகாத்திரத்தையும் இகபர சகல சம்பத்துகளையும் தந்தருள்வானாக. ஆமீன்.

உண்மை மத உரைக்கல்

(பெரியக்கிராம் கா. அ. அப்துல்ஹலீம் சாஹிப் வரைவது)

(சென்றமீ 72-ம் பக்கத் தொடர்)

யூதமதம்

நமது நிபந்தனைகள் யூதமதத்தில் காணப்படுகிறதாவென துருவிப்பார்ப்போம். முதலாவது நிபந்தனை—"அம்மதத்திற்குரிய கடவுள் நிகரற்றவனாய் இருத்தல் வேண்டும்" என்பதாகும். யூதர்களும் கிருஸ்தவர்களைப் போலவே இறைவனை இரண்டாக்கிக் கொண்டார்கள். உஸைர் நபியை ஆண்டவனின் புதல்வன் என்கிறார்கள். "யூதர்கள் உஸைர் நபியை அல்லாவின் புத்திரன் என்று சொன்னார்கள்" என்று நமது திருமறையும் அவர்களைப்பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறது. எனவே, இவர்களிடத்தும் ஏகத்துவம்போய் இணைவைத்தல் வந்துவிட்டது என்பது பிரத்தியக்ஷம்.

2-வது நிபந்தனை

2-வது நிபந்தனை— "அம்மதத்தின் தீர்க்கதரிசி இதரமத தீர்க்கதரிசிகளைவிட சிறந்தவராயிருத்தல் வேண்டும்" என்பதாகும். ஹஜ்ரத் மூஸா (அலை.) அவர்கள் யூதமத தீர்க்கதரிசியாவார்கள். நம்பிரான் (ஸல்.) அவர்களே ஹஜ்ரத்மூஸா (அலை.) அவர்களைவிட சகல விஷயத்திலும் மேம்பட்டு விளங்குகிறார்கள். ஹஜ்ரத் மூஸா (அலை.) அவர்கள், யூதர்களெனப்படும் இஸ்ரவேல் புத்திரர்கள்பால் நபியாய் அனுப்பப்பட்டார்கள். இவர்களும் உலகிற்கு பொது வழிகாட்டியாயில்லை. உலக நபியாம் உத்தமப் பெருமான் (ஸல்.) அவர்களே மூஸா (அலை.) அவர்களைவிட சிறந்தவர்கள் என்பது வெளிப்படை. ஓர்தினத்தில் "ஒருக்கால் மூஸா (அலை) அவர்கள் இதுபரியந்தம் உயிருடன் இருந்து நீங்கள் அவரைத் துயர்ந்து என்னை விட்டிருப்பீர்களானால் நீங்கள் வழிகெட்டவர்களாய்விடுவீர்கள்" என்றும், பிரிதோர் ஹதீதில் "ஆண்டவன் மீது பிரமாணமாக மூஸா (அலை.) அவர்கள் உயிருடன் இருந்திருப்பின் என்னைப் பின்பற்றியே தீருவார்கள்" என்றும் சர்க்காரெ மதீனா (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள் என்று 'மிஷ்காத்' என்ற கிரந்தத்தில் காணக்கிடக்கின்றது. இத்திரு வாக்கியங்களில் 'என்னைப் பின்பற்றியே தீருவார்கள்' என்ற வாக்கியமே நம் நபிகளுக்காசர் (ஸல்.) அவர்களின் உயர்வுக்கு தக்கசான்றாகும். ஏனெனில், சீடரின் பதவியைவிட குருவின் பதவி உயர்ந்ததென்பது உலகறிந்த உண்மை விஷயமாகும்.

3-வது நிபந்தனை

3-வது நிபந்தனை—"அம்மதத்தின் சட்டதிட்டங்கள் பொதுவாயிருத்தல் வேண்டும்" என்பதாகும். யூதர்களின் தீர்க்கதரிசியான ஹஜ்ரத் மூஸா (அலை.) அவர்கள் உலகப்பொது

நபியல்ல; குறிப்பிட்ட சாராருக்கே நபியாவர்கள் என்று முதலில் சொல்லி வந்திருக்கிறோம். இதிலிருந்தே அம்மதத்தின் சட்ட திட்டங்கள் பொதுவல்ல வென்பதை யூகித்துக் கொள்ளலாம். இதைப்பற்றி இறைவனும் "மூஸா (அலை.) வே! நீர் பிர்ஔன் என்பவனிடம் செல்லும். (சென்று அவனுக்கு நேர்வழிகாட்டும், ஏனெனில்) நிச்சயமாக அவன் அட்டூழியக் காரனா யிருக்கிறான்." என்று மூஸா (அலை.) அவர்களுக்கு பிறப்பித்த உத்திரவை இறுதித் தூதர் (ஸல்.) அவர்கள் பால் எடுத்துக்காட்டுகிறான். எனவே யூதமத சட்டதிட்டங்கள் பொதுவல்ல.

4-வது நிபந்தனை

4-வது நிபந்தனை—"அம்மதத்தின் போதனா முறைகள் மற்ற மதபோதனா முறைகளைப் பார்க்கிலும் உயர்ந்ததா யிருத்தல்வேண்டும்" என்பதாகும். தௌராத் என்ற பழைய ஏற்பாடான யூதர்களது வேதத்தின் போதனா முறை எக்காலத்தவரும் எந்த சமயத்திலும் அனுஷ்டிக்கத்தக்க முறையில் அமைக்கப்படவில்லை. காலம் செல்லச் செல்ல மனிதர்களில் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. முக்காலத்தவர் அதிக சக்தியும் பராக்கிரமமும் நிறைந்து இருந்தனர். வரவர ஜனங்களிடத்து சோம்பேரித்தனம் அதிகரித்துச் வருகிறது. அதனால் எக்காலத்தவரும் ஒன்றுபோல் இருக்க முடியாது. மதபோதனா முறைகள் எச்சமயத்தவரும் அனுஷ்டிக்கப் பாலதா யிருத்தல் வேண்டும். இந்த முறையில் யூதமத போதனா முறைகள் அவ்வாறு அமைக்கப்படவில்லை. உதாரணமாக, யூதர்களுக்கு 50 நேரத்தின் தொழுகை (பிரார்த்தனை) ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சொத்தில் நான்கிலொரு பாகம் ஜகாத் கொடுக்கவேண்டும். ஒரு வஸ்திரத்தில் அசுத்தம் பட்டுவிட்டால் அந்த விடத்தை அப்படியே கத்தரியால் வெட்டி எடுத்துவிடவேண்டும், என்றெல்லாம் போதிக்கப்படுகிறது. இதர்க்கெதிரில் குர்ஆனில் ஐந்து நேரத்தின் தொழுகையே போதிக்கப்படுகிறது. முழு சொத்தில் நூற்றுக்கு இரண்டரை வீதம் ஜகாத்தைப் போதிக்கிறது. புடவையில் அசுத்தம் பட்டுவிட்டால் அசுத்தம்பட்ட இடத்தை தண்ணீரால் நல்ல முறையில் கழுகிவிட்டால் போதுமென்றும், எக்காலத்தவரும் அதன்படி நடந்தொழுக இலகுவான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுவே மானிடசுபாவத்திற்கு ஏற்றதாகும். ஏனெனில், எதில் இலகுவுண்டோ அதுவே மானிட இயற்கைக்கு பிரீதியுள்ளதாக விருக்கிறது. ஆதலால், யூதமதத்தின் போதனைகள் உயர்ந்ததாயில்லை என்பதை நன்குணர்ந்து கொள்ளலாம்.

ஹிந்து மதம்

இம்மதத்தில் நமது நிபந்தனைகள் கிடைக்கிறதா வென்றாராய்வோம். முதல் நிபந்தனை—"அம்மதத்திற்குரிய கடவுள் நிகரற்றவனாய் இருத்தல் வேண்டும்" என்பதாகும். ஹிந்து மதத்தின் தெய்வங்களோ ஓர் வரையறைக் குட்பட்டதாயில்லை. ஒரு ஊரைப் பொருத்த மட்டில் எடுத்துக் கொண்டால் ஊரில் கால்பாகம் கோவில்களே மலிந்து கிடக்கின்றது. ஒவ்வொன்றிலும் பல நாமங்களையுடைய பல தெய்வங்களைக் காணலாம். அவர்கள் மனதிற்குவந்ததெல்லாம் தெய்வமாகக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, நெருப்பு, தண்ணீர், சூரியன் போன்ற வஸ்துக்களெல்லாம் தெய்வமாக ஸ்துதிக்கப்படுகின்றது. இதுவன்றி அக்காலத்திலிருந்த சில அரசர்களையும், துறவறம் பூண்ட சில ஞானிகளையும், தெய்வமாகவும் அவர்களால் எழுதப்பெற்ற நூல்களை தெய்வாரணமாகவும் மதித்து பூஜித்து வருகிறார்கள். உதாரணமாக, புத்தமதத்தின் தெய்வமான புத்தர் ஒரு துறவறம்பூண்ட ஞானியாவர். அவர் தன் காலத்தில் தன் புத்திக்கெட்டிய சில உபதேசங்களை மக்களிடை வெளியிட்டு போதித்தும் நூற்களில் எழுதிவைத்து விட்டும் போனார். இன்று புத்தமதத்தவர் அவரை ஒரு தெய்வமாக கருதுகிறார்கள். தென்னாட்டில் அரசு புரிந்த அரசர்களில் சேரன், சோழன், பாண்டியன் என்ற மூவரையும், பாண்டியனின் மகள் மீனாக்ஷி சுந்தரேசுவரி என்பவளையும் தெய்வ மென்கிறார்கள். மதுரையிலுள்ள மீனாக்ஷியம்மன் கோவிலில் அவளுடைய சிலையை, பலவிடங்களிலிருந்தும் ஜனங்கள் திரள் திரளாக வந்து ஆராதனை செய்து செல்வதை இன்றுங் காணலாம். அம்மதத்தின் வேதங்கள் (ருக், எஜுர், ஸாமம், அதர்வனம் என்ற) நான்கிலும் அவர்கள் வணங்கக்கூடிய தெய்வத்திற்கும் வேதத்திற்கும் எதுவும் சம்பந்த மிருப்பதாக சொல்ல முடியாது. இம்மதத்திற்கும் ஏகத்துவத்திற்கும் வெகு தூரம் என்பது வெளிப்படை.

2-வது நிபந்தனை.

2-வது நிபந்தனை—“அம்மதத்தின் தீர்க்க தரிசி இதரமத தீர்க்கதரிசிகளைவிட சிறந்தவரா யிருத்தல் வேண்டும்” என்பதாகும். முதலில் இம்மதமே தேவனு லனுப்பப்பட்டவையல்ல வென்பதற்கு இம் மதத்தின் வேதங்களெனப்படும் நூல்களே சாட்சியாகும். எனவே, இம்மதம் ஒரு தீர்க்க தரிசியின் வாயிலாக வந்ததென எதிர்பார்க்க முடியாது. இஃது அக்காலங்களிலிருந்த சில அறிவாளிகளால் ஏற்படுத்தப் பட்டவையாகும். ஆகையால், தீர்க்க தரிசியைப் பற்றிய விஷயத்தை விட்டு விடுவோம்.

3-வது நிபந்தனை.

3-வது நிபந்தனை—“அம் மதத்தின் சட்டத் திட்டங்கள் பொதுவா யிருத்தல் வேண்டும்” என்பதாகும். ஹிந்து மத வேதங்களில் மனிதர் நடக்கவேண்டிய ஆசாரங்கள் எக்காலத்திற்கும் ஏற்ற முறையில் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. ஸாம வேதத்தை எடுத்துக் கொண்டால் அதில் சங்கீதம், ஜோதிடம் முதலிய விஷயங்களைப் பற்றியே பெரும்பாலும் கூறப்படுகிறது. மேலும், அம் மதம் விஸால பான்மை யுடையதாயில்லாமல் மதக்கோட்டை வாயல் அடைக்கப்பட்டு பிற மதஸ்தர்கள் அதனைத் தழுவுவதை தடுத்துக் கொண்டிருக்கிறது. பிறர் என்ன? அவர்களுக் கிடையிலேயே பல பிரிவுகள். தாழ்ந்தவன், மேம்பட்டவன் என்ற வேற்றுமை தாண்டவமாடுகிறது. பறையன், பள்ளன் எனப்படும் ஆதிதிராவிட ஜாதியாரை முற்றும் ஒதுக்கி வைத்திருக்கிறதுடன், அவர்கள், மேல் ஜாதியருக்கு ஊழியம் செய்வதற்கும் அவர்களைக் கண்டவிடத்தில் கைகூப்பி சாஷ்டாங்கம் செய்வதற்குமே படைக்கப்பட்டவர்கள் என்பதை அதே மத நூற்களில் காணலாம். ஹிந்துக்களிலுள்ள பல பிரிவுகளில் நான்கு வகுப்பாரை மட்டும் எடுத்துக் கொள்வோம். அதாவது, பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு ஜாதிகளாகும். இதில் வேதம் கற்றல், கற்றுவித்தல் முதலியவைகள் பிராமணருக்கே சொந்தமாம். க்ஷத்திரியர், வைஸியர் இவ்விருவருக்கும் படிக்க உத்திர விருக்கிறது; படிப்பிக்க உத்திரவில்லை. நான்காவது ஜாதியர் திடுகூறாய் வேதவாக்கியங்களைக் காதில் கேட்டு விட்டால் அவர்களது காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றப்படல் வேண்டுமென்று அவர்கள் வேதம் கூறுகிறது. எனவே, ஹிந்து மத சட்டதிட்டங்கள் பொதுவல்லவென்பது மறுக்க முடியாத விஷயமாகும். ஹிந்து மதத்தின் குறுகிய நோக்கங்களையும் குறுகிய போதனைகளையும் பார்க்க விரும்பின், ‘துஹ்பதுல் ஹிந்து’ ‘மனுதர்ம சாஸ்திரம்’ முதலிய நூற்களிற் கண்டு களிக்கலாம்.

4-வது நிபந்தனை

4-வது நிபந்தனை—“அம்மதத்தின் போதனை முறைகள் மற்ற மத போதனை முறைகளைப் பார்க்கினும் உயர்ந்ததா யிருத்தல் வேண்டும்” என்பதாகும். மூன்றுவது நிபந்தனையிலிருந்தே ஹிந்துமத போதனை முறைகளை நம் நிபந்தனைப்படி பெற்றுக்கொள்ள முடியுமென்பதை எதிர்பார்ப்பதற்கில்லை. அதனைப்பற்றி விஸ்தரிப்பதில் பிரயோஜனமில்லையாதலால் அதனை விடுத்து நான்காவது மதமான இஸ்லாத்தின் பக்கல் நோக்குவோம்.

இஸ்லாம் மதம்

இனி எஞ்சியுள்ள மதம் இஸ்லாமாகும். இதுவே நமது நிபந்தனைகளுக்கு வாசஸ்தலமாக காணப்படுகிறது.

முதல் நிபந்தனை—அம்மதத்திற்குரிய கடவுள் நிகரற்றவனுய் இருத்தல் வேண்டும்” என்பதாகும். “வணக்கத்திற்கு பாத்திரவான் ஆண்டவனைத்தவிர வேறெவருமில்லை” என்பது இஸ்லாத்தின் அடித்தளமாகும். இந்த கருத்தையே எமது திருமறையில் இறைவன், “(ஏ நபியே!) ஆண்டவன் ஒருவனுகும்; அவன் தேவையற்றவன்; அவன் யாதொரு பிள்ளை குட்டிகளை பெறவுமில்லை; அவன் பிறரால் பெற்றெடுக்கப்படவுமில்லை; அவனுக்கு எவரும் நிகரில்லை என்று நீர் சொல்லு”மென்று எம்பெருமானுர் (ஸல்.) அவர்களுக்கு அறிவிக்கின்றான். மற்றோரிடத்தில் “உலகத்தவரை ரக்ஷித்துப் பரிபாலனம் செய்யும்படியான இறைவ(ஒருவ)னுக்கே புகழனைத்தும் உரியது” என்று திருகுர்ஆன் பறைசாற்றுகிறது. இன்னுமோரிடத்தில் “நிச்சயமாக ஆண்டவன் ஒவ்வொரு வஸ்துவையும் படைத்தான்” எனவும், இதேபோல ஏகத்துவம்பற்றி குர்ஆனின் பலவிடங்களில் வலியுறுத்திக் கூறப்படுகிறது. ஆகவே, மேல் கூறப்பெற்ற திரு வசனங்களால் கடவுள் ஒருவனே என்பதும், அவன் நிகரற்றவனென்பதும், அவனையே கடவுளாகக் கொள்ளும் படியும்

இஸ்லாம் பலமாக போதிக்கிறதென்பது எவரும் மறுக்க முடியாத விஷயமாகும்.

2-வது நிபந்தனை

2-வது நிபந்தனை—"அம்மதத்தின் தீர்க்க தரிசி இதரமத தீர்க்கதரிசிகளைவிட சிறந்தவரா யிருத்தல் வேண்டும்" என்பதாகும். முதலில் பலவிடங்களிலும் நபிகள் பிரான் (ஸல்.) அவர்களே தீர்க்கதரிசிகளில் சிறந்தவராய் இருக்கிறார்கள் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இன்னும் சில ஆதாரங்களுடன் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் சிறப்பை விளக்க விரும்புகிறேன். உலகில் மானிடனின் சிறப்பிற்கு அவனில் மறைந்துகிடக்கும் குணாதிசயங்களே காரணம் என்பது யாவராலும் ஏற்கப்படும் எதார்த்தமாகும். எனவே, நபிகள் கோன் (ஸல்.) அவர்களின் நற்குணங்களை எல்லையிட்டுக் கூற எம்மால் கூடாவிடினும் ஏதோ ஒரு சிலதையாகிலும் ஈண்டு குறிப்பிடுகிறேன்.

பொறுமை

சத்தியத் தூதர் (ஸல்) அவர்கள் ஆரம்ப காலத்தில் இஸ்லாமியப் பிரசாரம் செய்யுங் காலை எதிரிகளால் எண்ணத் தொலையாத இன்னல்கள் புரியப்பட்டும் நம்பெருமான் (ஸல்) அவர்களின் திருவாயிலிருந்து ஒரு துர் வார்த்தையும் வெளிப்படவில்லை. ஒரு தடவை ஜிப்ரயீல் (அலை.) என்னும் வானவர் வந்து எதிரிகளை அப்படியே சம்ஹாரம் செய்வதற்கு அனுமதி கோரியபோது உத்திரவளிக்க மறுத்து விட்டார்கள் என்றால், சத்திய நபி (ஸல்.) யின் சாந்தத்திற்கு ஓரளவுண்டோ? இம்மட்டோடல்ல.உஹத் யுத்தத்திலும், 'தாயிப்' என்ற நகருக்கு இஸ்லாமியப்பிரசாரத்திற்குச் சென்ற போதும் 'ஆண்டவனே இவர்களுக்கு நேர் வழிகாட்டுவாயாக! நிச்சயமாக இவர்கள் அறியாதவர்களாயிருக்கிறார்கள்." என எதிரிகளுக்கு நல்வழிகாட்ட இறைவனிடம் பிரார்த்தனை புரிந்திருக்கிறார்கள் என்றால், காருண்ய மூர்த்தி (ஸல்.) அவர்களின் பொறுமைதா னென்னே! எனவே, இதர நபிமார்களைவிட நமது நாயகம் (ஸல்.) அவர்கள் பொறுமை, தயாளம், பகைவர்களை மன்னித்தல் முதலிய அம்ஸங்களில் சிறந்து விளங்கினார்களென்பது உலகறிந்த உண்மை. ஆதலின் இரண்டாவது நிபந்தனை நம் பரிசுத்த இஸ்லாத்திலேயே காணப்படுகிறது.

3-வது நிபந்தனை.

3-வது நிபந்தனை—"அம்மதத்தின் சட்டதிட்டங்கள் பொதுவாயிருத்தல்வேண்டும்" என்பதாகும். குர்ஆனை எடுத்துப்பாருங்கள். அதன் மூன்றிலொருபாகம் சட்டதிட்டங்கள் நிறைந்து, அவைகள் உலகத்தையே சூழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு தக்க ஆதாரங்கள் மிளிர்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். "அந்த குர்ஆன் உலகத்தவருக்கோர் உபதேசமே தவிர வேறல்ல." என்று திருமறையின் வசனங்களிலொன்றில் நம்மவர் பால் எடுத்துக்காட்டப்படுகிறது. ஆடவர், பெண்டீர், வாலிபர், வயோதிகர் யாவருக்குமே இக்குர்ஆன் வழிகாட்டியாயும், உபதேசியாயுமிருக்கிறது என்பது பொருளாகும். மற்றோரிடத்தில், "(ஏ நபியே!) உம்மை மனிதர்கள் அனைவருக்குமே தூதராகவே ஒழிய அனுப்பவில்லை?" என்று நமதிறைவன் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை நோக்கிக் கூறுகின்றான். இத்திரு வசனமும் குர்ஆனின் சட்டதிட்டங்கள் உலக மக்கள் யாவருக்குமே பொதுவென்பதைக் கூறிக்கொண்டிருக்கிறது. இதேபோல் குர்ஆனின் பலவிடங்களில் காணலாம். ஆகவே, இஸ்லாத்தின் சட்ட திட்டங்கள் பொதுவானதாகும் என்பது உண்மை விரும்பும் எவர்களிடத்தும் மறைந்ததல்ல.

4-வது நிபந்தனை.

4-வது நிபந்தனை—"அம்மதத்தின் போதனா முறைகள் மற்ற மத போதனா முறைகளைப் பார்க்கினும் உயர்ந்ததா யிருத்தல் வேண்டும்." என்பதாகும். குர்ஆன் மனித வர்க்கத்தவருக்குதேவையான சத்தொழுக்கங்கள் எதையும் போதிக்காமல் விட்டுவிடவில்லை. உதாரணமாக, பெற்றோர் பிள்ளைகளுக் கிடை ஒருவர்மீதொருவருக்குள்ள கடமையையும், பெரியவர் சிறுவர்க்கிடையேயுள்ள சம்பந்தங்களைப் பற்றியும்,சதிபதிகள் தங்களுக்கிடையே நடந்துகொள்ளும் முறையையும் சுருங்கச் சொல்லின், உண்ணல், உடுத்தல் போன்ற சகல விஷயங்களைப் பற்றியும் திருமறை போதித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மேற் கூறியவைகளி லிருந்தே முன் வரைந்த நான்கு நிபந்தனைகளும் பரிசுத்த இஸ்லாம் மதத்திலேயே காணப்படுகின்றதால் அம்மதம் ஏனைய மார்க்கத்தைவிட சிறந்ததாயும் சகலமக்களும் பின்பற்றத் தக்கதாயும் இருக்கிறதென்பதை நன்குணர்ந்து கொள்ளலாம்.

நமது தொழுகை

நிச்சயமாக தொழுகையாகிறது கெடுதிகள், (சன்மார்க்கத்தில்) விலக்கப்பட்ட காரியங்கள் புரியாது தடுத்துக்கொள்கிறது.

மேலே கூறப்பட்டுள்ள அரும் மொழிகள் அல்லாஹ்ு தஆலாவின் திரு வாக்கியங்களாகும். அதாவது எவர் தொழுகையை நிறைவேற்றி வைக்கின்றாரோ அவர் கெடுதியான காரியங்கள் புரியாமலும், அல்லாஹு தஆலாவினால் விலக்கப்பட்ட காரியங்களி லீடுபடாமலும் இருப்பர் என்பது இதன் கருத்தாகும். ஆனால் அநேக தொழுகையாளிகள் பாவமான காரியங்கள் புரிவதிலும், அல்லாஹ் தஆலாவால் விலக்கப்பட்ட காரியங்களை நிறைவேற்றுவதிலும் ஈடுபட்டிருப்பதை நாம் காணுகின்றோம. இதன் குறை தொழுகை மீதேற்படாது, தொழுகை நிறைவேற்றுபவரையே சார்ந்திருக்கிறது.

நாம் தொழுகையை எந்த முறையோடு நிறைவேற்ற வேண்டுமோ அவ்வாறு செய்யாது தொழுகைக்காக நிய்யத்துச் செய்து தக்பீர் கட்டிக்கொண்டவுடன் நம்முடைய எண்ணங்கள் பல பல இடங்களுக்கும் செல்கின்றன. ரகூஉ, ஸுஜூது, நிலை, இருப்பு முதலியவைகள் சரியான முறையில் நடைபெறுகிறதில்லை. அதிலுள்ள விஷயங்களை நன்கு அறிந்து தொழுவது ஒருபுறமிருக்கட்டும், தொழுகை நிறைவேற்றியாகிவிட்டது. இப்பொழுது என்ன செய்தோம்? யார் முன் நிற்கின்றோம் என்பன போன்ற விஷயங்களைக் கூட சற்றும் கவனித்தோமில்லை. சாதாரண ஓர் அதிகாரி முன் போய் நிற்போமாகில் அவ்வதிகாரிக்கு எவ்வளவு தூரம் பயந்து மரியாதையைப் பேணி நடக்கின்றோம். இவ்வதிகாரிகளுக்கெல்லாம் எஜமானாகிய அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் சன்னிதானத்தில் நிற்கும் சமயம் எவ்வளவு அலக்ஷியமாக தீபரத்தோடு நிமிர்ந்து குனிந்து உட்கார்ந்து நின்றுவிட்டு சலாம் கொடுத்து கடைமை நிறைவேறிவிட்டதாகக் கருதுகின்றோம். இவ்வாறான தொழுகை மக்களின் ஹிருதயங்களில் ஏதாவது பிரயோசனமளிக்குமா? இவ்வாறு நிறைவேற்றப்படும் தொழுகைகள், இன்னது செய்கிறோமென்று தெரிந்து அச்சப்பாடுடன் நிறைவேற்றப்படும் தொழுகைக்குமுன் எந்த ஸ்தானத்தை அடைந்திருக்கும் என்பதை நாம் நன்குணர்ந்து பார்ப்போமாக.

எதுபொழுது முஸ்லிமாகிய மனிதன் தொழுகையை அழகிய முறையோடும் அச்சப்பாட்டுடனும் நிறைவேற்றுகின்றானோ அதுபொழுது அத்தொழுகை "யா அல்லாஹ்! இவன் என்னிடம் தக்க முறையான பேணுதலுடன் நடந்துகொண்டான், நீ அவனைப் பேணிக் காப்பாற்றிக் கொள்வாயாக" என பிரார்த்தனை புரியுமென்றும், அவன் ருகூஉ ஸுஜூது, முதலிய தொழுகையின் கடமைகளை தக்க முறையில் நிறைவேற்றாது அசட்டை செய்வானாகில் அதுபொழுது அந்த தொழுகை அம்மனிதன் விஷயமாக, "நீ என்னை அலக்ஷியம் செய்ததுபோல் அல்லாஹ் தஆலா உன்னை அலக்ஷியம் செய்வானாக'' வெனவும் கூறுவதாய் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்கள். இவ்வாறான தொழுகையால் மக்களுக்கு எவ்வித பிரயோசனமு மேற்படமாட்டாது. மேலும் தொழுகையி லேற்பட்டுள்ள ருகூஉ, ஸுஜூது முதலியவைகளை தக்க முறையில் நிறைவேற்றாதவனை திருடனென்றும் நபிகள் திலகம்(ஸல்.)அவர்கள் கூறி யிருக்கிறார்கள். தொழுகை ஓர் அளவுகோல் போலிருப்பதால் அதனைத் தக்க முறையில் நிறைவேற்றாது அதில் குறைவு செய்பவன் திருடனைப் போலிருக்கிறான் என்பது நன்கு தெரியவரும்.

கெடுதியான காரியங்கள் புரிவது எந்த சந்தர்ப்பத்திலும் பாவமாக இருந்தபோதிலும் தொழுகையாளி புரியும் பாவம் மிகக் கெடுதியானதாயும், அதிக தெண்டனை கொடுக்கப்படுவதற்குத் தகுதியானதாகவு மிருக்கிறது. ஏனெனில், இவன் புரியும் செய்கை, தொழுகை கேவலமாக மதிக்கப்படுவதற்குக் காரணமாய் விடுகிறது. மேலும், இவன் தன்னுடைய இச்செய்கையைக் கொண்டு, 'தொழுகையானது கெடுதிகளை விட்டு விலக்கி விடுகிறது.' என்னும்

அல்லாஹ்வின் திரு வசனத்தை பொய்யாக்கி வைப்பவனாய் விடுகின்றான்.

தொழுகையைப் பேணுதலுடன் நிறை வேற்றுவதென்பது கஷ்டத்தைக் கொடுப்பதும், மிகுத நேரத்தைப் போக்குவதுமான காரியமாக இருக்கவில்லை. நம்மீது கடமையாக வுள்ள ஐந்து நேரத் தொழுகைளையும் தக்க முறையில் நிறைவேற்றுவதற்குக் கூடுதலாக ஒரு மணி நேரம் போதியதாக இருக்கிறது. இந்த ஒரு மணியும் ஐந்து பாகமாய்ப் பிரிந்து விடுகிறது. எத்தனையோ பிரயோசன மற்ற காரியங்களில் நாம் அளவற்ற மணி நேரங்களை துயர்படியாய் செலவிட்டு விடுகிறோம். ஆனால், தொழுகைக்காக 10, 15 நிமிடங்களை செலவிட முற்படுகிறோமில்லை. இதனை நம்முடைய துர் அதிர்ஷ்டமென்று கூறுவது வேறென்ன வென்று தான் கூறமுடியும்? தொழுகையை பேணுதலுடன் நிறைவேற்றுவ தென்பது சில நிமிடங்களின் செய்கையாகும். அடியான் தனது எஜமானுக்குத் தொண்டு புரிவதில் சில நிமிஷங்களேனும் பய பக்திபூண்டு கலங்கமற்ற மனதோடு ஈடுபடா திருப்பானாகில் அந்த எஜமான் இவ்வடியானை எவ்வாறு கருதுவான். இவ்வடியான்மீது அவ் வெஜமானுக்குப் பிரீதியுண்டாகுமா? இவ்வடியான் செய்யும் தொண்டை அந்த எஜமான் ஏற்றுக்கொள்வானா? அந்த எஜமானின் அருட்கொடை இவன்மீது சொரியுமா?

சில வாக்கியங்களை மட்டும் மடக்கி மடக்கிக் கூறிக் கொண்டிருப்பதற்கு மட்டும் தொழுகையெனக் கூறப்படுவதில்லை. தொழுகையை ஒழுக்கம் அச்சம் முதலியவைகளைக் கொண்டு மனோ ஓர்மையுடன் நிறைவேற்றுவது கொண்டு மனதில் ஓர் வகையான நிலைமை ஏற்பட்டு, அல்லாஹ் தஆலாவின் ஞாபகம் அதிகரிப்பதுடன் அல்லாஹ்வின்மீது இவனது மனதில் பயமேற்பட்டு விடுகிறது. இவ்வாறு நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தொழுகையும் அவனது மனதில் புதிது புதிதான நிலைமையை உண்டுபண்ணி வைத்து விடுகிறது. இதன் பயனாக அவனது அகம் தூய்மையில் முன்னேற்ற மடைந்து கொண்டே போகிறது. மனிதன் பாவமான காரியத்திலீடுபடாது அவனைத் தடைசெய்து கொள்வது அவன் அல்லாஹ் தஆலாவை அதிகம் பயப்படுவதாகுமே யன்றி அவன் பயபக்தி யில்லாது தொழுவது மட்டும் அல்லாஹ் தஆலாவை பயப்படுவதாகமாட்டாதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

எனவே, மனிதன் தொழுகையில் பயபக்தியை அதிகப்படுத்திக்கொண்டே செல்வதுடன், அடுத்தவேளையும் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் போய் நிற்கவேண்டுமே என்னும் ஞாபகமும் அவனுக்கேற்படவேண்டும். "உன்னையே வணங்குவோம்" என்னும் அடிமைத்தனத்தை வெளியாக்கும் மொழியைக் கூறிவிட்டு எவ்வாறு அவனுக்கு மாற்றஞ் செய்வது? இந்நிலைமையில் எந்த முகத்தைக்கொண்டு அல்லாஹ்வின் திரு சமுகத்தில் மறுமுறையும் போய் நிற்பது? இந்த எண்ணங்களெல்லாம் அவன் மனதிலேற்பட்டவுடன் அவன் ஒழுங்கான முறையில் பாபத்தை விட்டுத் தப்பித்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றான். அவனுக்கு அல்லாஹ்வின் மீது ஏற்படும் பயம் அவனை கெட்டவழியிற் அடியெடுத்து வைக்காது தடுத்து விடுகிறது. அவன் இவ்வாறு கெடுதிகளை விட்டுத் தப்பித்துக்கொள்வதான பழக்கத்தை உண்டுபண்ணிக் கொள்கிறான்.

"யான் எந்த நாவைக்கொண்டு அல்லாஹ்த ஆலாவின் திருநாமத்தை உச்சரிக்கின்றேனோ அதே நாவை துற்குணங்களென்னும் கெடுதிகளில் எவ்வாறு பிரயோகப்படுத்துவது; அல்லாஹ்வின் சன்னிதானத்திற்கு நடந்துசெல்லும் காலால் கெட்ட காரியம் செய்வதளவில் எவ்வாறு நடந்து செல்வது" என்பன போன்ற எண்ணங்கள் அவனுடைய மனதிலேற்பட்டவுடன் அல்லாஹ்வின்மீது ஏற்படும் பயனம் அவன் மனதிற் பதிந்துவிடுகிறது. அத்துடன் மனதில் தயாளம் கிருபை தாழ்மை முதலிய தூய குணங்கள் மிகைத்து விடுகிறது. இந்நிலைமையில் அவன் பாவஞ்செய்வதற்கு முற்படுவானாகில் அல்லாஹ்வினின்றும் வெட்கமடைகின்றான். இவ்வாறு பயபக்தியோடு நிறைவேற்றப்படும் தொழுகைகள் மெள்ள மெள்ள இவனைப் பாவத்திலீடுபடாது செய்து விடுகிறது. எனவே, மனிதன் நாளொன்றுக்கு ஐந்துமுறை மனோ ஓர்மை, உள்ளச்சம், அகசுத்தி முதலியவைகளோடு தொழுகையை நிறைவேற்றுவானாகில் அவன் நிலைமையே மாறி உச்சஸ்தானத்தை அடைவதற்குத் தகுதியுடையவனாகி விடுகிறான். இவ்வாறான தொழுகைதான் அறபியர்களிலுள்ள வம்பர்களான கொடியவர்களை மலக்குகளைவிட மேலானவர்களாய்ச் செய்துவிட்டது; கெடுதியான காரியங்கள் புரிவது, சன்மார்க்கத்தில் விலக்கப்பட்ட காரியாதிகளிலீடுபடுவது முத

லியதிய செய்கைகளைவிட்டு அப்புறப்படுத்தி விட்டது. இத்தொழுகைதான் மனிதன் கெடுதியிலும் பாவமான காரியங்களிலும் ஈடுபடாது விலக்கக்கூடியதென்பதை நாம் தக்க முறையில் உணர்ந்து அம்முறையைப் பின்பற்ற முற்படுவோமாக.

முற்காலத்துப் பெரியார்கள்

ஹஜ்றத் ஹன்லலா (றலி.) அவர்கள் கூறுவதாவது :—

"நாங்கள் ஒருநாள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சமூகத்தில் ஒன்று கூடினோம். நாயகம் (ஸல்.) அவர்கள் எங்களுக்கு உபதேசம் புரிந்தார்கள். அதனால் எங்கள் மனம் உருகி விட்டது. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடிற்று. எங்களது நப்ஸுகளை நாங்கள் அறிந்து கொண்டோம். பிறகு, நான் எனது வீட்டிற்கு வந்து, வீட்டிலுள்ளவர்களுடன் சம்பாஷித்தேன். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு முன்னிலையில் இருந்த எனது மனநிலை வீட்டிற்கு வந்தபின் இருக்கவில்லை. அப்பொழுது நான் எனது மனத்திற்குள்ளாகவே "நான் முனாபிக்காக ஆகிவிட்டேன்; இதனால் தான் எனது மனநிலை மாறிவிட்டது" என்று எண்ணிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி வந்து "ஹன்லலா முனாபிக்காகி விட்டார்" என்பதாகச் சப்தமிட்டுக் கூறினேன். இதற்குள்ளாக ஹஜ்றத் அபூபக்கர் ஸித்திக் (றலி.) அவர்கள் வந்து சேர்ந்தார்கள். என்னை நோக்கி "ஹன்லலா முனாபிக்காகவில்லை" என்று கூறித் தேற்றினார்கள். பிறகு, நான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சமூகத்திற்குச் சென்று "ஹன்லலா முனாபிக்காகி விட்டார்" என்று கூறினேன். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் "ஹன்லலா முனாபிக்காகவில்லை" என்று கூறினார்கள். அதற்கு நான் "யா றஸூலல்லாஹ், தங்கள் சமூகத்தில் நாங்களிருந்தபோது தாங்கள் எங்களுக்கு உபதேசம் கூறினீர்கள். அதனால் எங்களது மனம் உருகி விட்டது. கண்களில் நீர்வடிந்தது. எங்களை நாங்களுணர வாரம்பித்தோம். ஆனால், நான் எனதில்லஞ் சென்ற பிறகு உலகாதாய சம்பந்தமான காரியங்களில் ஈடுபட்டேன், எனது மனநிலையும் மாறிவிட்டது." என்று கூறினேன். அதற்கு நாயகம் (ஸல்.) அவர்கள் என்னை நோக்கி "ஹன்லலாவே! உமக்கு எப்பொழுதும் அதே நிலை இருக்குமாயின் உம்முடன் மலக்குகள் நீர் நடக்கும் வழிகளிலும், படுக்கு மிடங்களிலும் முஸாபஹாச் செய்வார்கள்; ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு நேரமுண்டு" என்று கூறினார்கள்.

மாலிக்குப்னுலைகம் (றஹ்) அவர்கள் கூறும் விபரம் வருமாறு :—

"இமாம் முஸப்பீ (றஹ்.) அவர்கள் எனது தந்தையைத் தேடிக்கொண்டு அஸருக்குப் பிறகு வந்தார். எனது தந்தை தூங்குவதாக நாங்கள் அவருக்குத் தகவல் கொடுத்தோம். அதற்கவர் "இந்த நேரத்தில் தூங்குகிறாரா? இது தூக்கத்திற்குரிய வேளையா?" என்று கூறிவிட்டுச் சென்றார். அப்புறம் "தாங்கள் இஷ்டப்பட்டால் அவரை எழுப்பி விடுகிறோம்" என்று கேட்பதற்காக அவரிடம் ஒரு ஆளை அனுப்பினோம். நாங்கள் அனுப்பிய ஆள் எங்களிடம் வந்து "இமாம் அவர்களுக்கு நான் கூறுவதைச் செவியேற்கவோ விளங்கிக்கொள்ளவோ சக்தி இல்லை, அவரது நிலைமை வேறு விதமாக இருக்கிறது, அவர் கபறஸ்தானுக்குச் சென்று தன்னைத்தானே நொந்து கொண்டிருக்கிறார். 'இது தூங்குவதற்குரிய நேரமா? என்று நீ என் கூறினை? இவ்வாறு சொல்வது உனது கடமையா? மனிதன் இஷ்டப்பட்ட போது தூங்குவான்? அதனைப்பற்றிக்கூற நீயார்? இது தூங்குகிற நேரமில்லை என்பதாக நீ அறிந்து கொண்டிருக்கின்றனையோ? உனக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றி நீ கூறலாகாது, நீ செய்த இக்குற்றத்திற்காக இனி ஒருவருஷத்திற்கு நான் பூமியில் படுத்து நித்திரை செய்வதில்லை, ஆனால், எனக்கு நோயும் புத்தியிற் றடுமாற்றமும் ஏற்படலாகாது

என்று ஆண்டவனிடத்தில் பிரார்த்தனை செய்து கொள்கிறேன். மானங்கெட்டவனே, உன்னிடமுள்ள குறையை நிவர்த்திக்க முயலாமல் பிறர் மீது குற்றங்கூற முன்வந்துவிட்டனையல்லவா? என்று கூறிக்கொண்டிருக்கிறார்" என்பதாக அந்த ஆள் தகவல் தெரிவித்தார்.

நமது முன்னோர்களது நிலைமை இவ்வாறிருந்தது. தங்கள்மீதுள்ள குறையை நினைத்து தங்களுக்குத் தாங்களே தண்டனை அளித்துக் கொள்பவர்களாக இருந்தார்கள். ஆனால், இக்காலத்தில் நம்மவர் பிறர் மீது குறைகாண்பதையே முக்கிய தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

மௌலானா ரூமியின் உபதேசம்

ஒருமுறை மௌலானா ரூமி (றஹ்.) அவர்களது வீட்டுவேலைக்காரி மௌலானா அவர்களிடம் வந்து "பணம் இல்லை, செல்வமில்லை" என்பதைக் குறித்து முறையிட்டாள். அதற்கு மௌலானா அவர்கள், "உன்னிடத்தில் எவரேனும் இரண்டாயிரம் பவுன்களைக் கொடுத்து உனது கை, கால், மூக்கு, காது இவைகளில் ஏதேனும் ஒன்றை வெட்டிக் கொள்ளும்படிக் கூறினால், அதற்கு நீ சம்மதப்படுகுவையா?" என்று வினவினார்கள். அதற்கு அவ்வேலைக்காரி, இல்லை ஒரு போதும் சம்மதப்படேன்; எனக்கு எனது அவயவங்கள்தான் மிக அருமை" என்றனள். அப்பொழுது மௌலானா அவர்கள் அவளை நோக்கி "மிகவும் விலை அதிகமுள்ள பொருள்கள் உனது உடம்பிலேயே இருக்கும் போது தரித்திரத்தைக் குறித்து நீ என் முறையிடுகின்றனை? உனக்கு இறைவனளித்துள்ள பாக்கியத்திற்கு நன்றி செலுத்து. உன்னிடத்திலில்லாதவைகளுக்காக நீ முயற்சி செய். அதற்காக கைகால்களை அசைத்து உழை. அதற்கப்புறமும் கிடைக்காவிடில் நீ பொறுமையாயிரு" என்று கூறினார்கள்.

ஒரு முறை மௌலானா அவர்களது புதல்வியான 'மலிக்கா காத்தூன்' தனது கணவர் உலோபத்தனஞ் செய்கிறார் என்பதைக் குறித்து முறையிட்டார். அதற்கு மௌலானா அவர்கள் ஒரு கதையைக்கூறினார்கள். அதாவது ஒருவன் பெரும் பணக்காரனாக இருந்தான், ஆனால் உலோபி. அவன் ஒருநாள் இஷாத் தொழுகைக்காக மஸ்ஜிதுக்குச்சென்றான். விளக்கை இறக்கி வைக்காமல் வந்துவிட்டோம் என்பது வழியில் ஞாபகத்திற்கு வந்தது. உடனே, அவன் திரும்ப ஓடிவந்தான். வெளியில் நின்றுகொண்டே வேலைக்காரியை அழைத்து "கதவைத்திறக்க வேண்டாம், விளக்கை இறக்கிவை" என்று கூறினான். அதற்கவள் "கதவைத்திறக்க வேண்டாம் என்று ஏன் கூறுகிறீர்கள்" என்று வினவினாள். அதற்கு அவன் "அடிக்கடி தாழ் போட்டுக்கொண்டிருந்தால் அது தேய்ந்துபோகும்" என்பதற்காகத் தான் என்று கூறினான். அதற்கவள் "கதவிலுள்ள தாழ் தேய்ந்து போகும் என்று ஞாபகம் வந்தது, மஸ்ஜிதிலிருந்து திரும்ப வந்ததால் காலில் போட்டிருக்கிற செருப்பு தேய்ந்து போகாதா" என்று வினவினாள். அதற்கவன் "அதனைப்பற்றிக் கவலைப்படாதே. நான் பாதரக்ஷையை அணிந்துகொண்டு வரவில்லை, அவைகள் எனது கம்முகட்டில்தானிருக்கின்றன" என்று கூறினான் என்பதாகக் கூறினார்கள். இக்கதையைக் கேட்டவுடன் மலிக்கா காத்தூனுக்கு சிரிப்பு வந்துவிட்டது; தன் கணவனின் உலோபத்தனத்தைப்பற்றிய வருத்தமும் நீங்கிவிட்டது.

ஒரு வயோதிகன் மௌலானா அவர்களிடம் அழுகையும் கண்ணீருமாக வந்து தனது 7 வயதுப் பையன் தவறிப்போனதாகவும், பலநாட்களாகக் காணவில்லை என்றும், தேடிப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கூறினான். அதற்கு மௌலானா அவர்கள் "அந்தோ! மனிதர்களது புத்தி எவ்வாறு கெட்டுப்போய் விட்டது. தங்கள் மனைவி மக்களைக் காணவில்லை என்பதற்காகத் தேடி அலைகின்றனர். ஆனால், அல்லாஹுதஆலாவை எவரும் தேடுவதில்லை" என்று கூறிவிட்டு பிரிந்திருக்கிறவர்களை ஒன்று சேர்க்கிறவனாகிய சர்வ வல்லமையுள்ள அல்லாஹுதஆலாவை நீ தேடு. அவன் ஒன்று சேர்த்துவைப்பான். அவன் அதிகக் கருணையுள்ளவன். நீ ஏன் பைத்தியக்காரனாகுகின்றனை" என்று கூறினார்கள். அவ் வயோதிகன் அந்த க்ஷணமே தௌபாச் செய்து வீட்டிற்கு வந்தான். வீட்டில் தனது புதல்வனிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தான்.

நல்ல காலத்துச் செய்தி

ஹஜ்றத் அபுல்ஹஸன் பூஷங்கீ (றஹ்.) அவர்கள் ஒருநாள் ஸ்நானம் செய்துகொண்

டிருக்கும்போது ஒரு தர்வேஷ் வந்து பிச்சை கேட்டார். ஹஜ்ரத் அவர்கள் ஸ்நான அறையில் இருந்துகொண்டே "சட்டையைக் கொடுத்து விடும்படியாகச் சப்தமிட்டுக் கூறினார்கள். பிறகு, ஸ்நானம் செய்து விட்டு வந்தபோது அவருடைய சிநேகிதர்களில் ஒருவர் ஹஜ்ரத், குளித்துக்கொண்டிருக்கும் போதே சட்டையைக் கொடுத்து விடும்படி சப்தங் கொடுத்தீர்களல்லவா? இவ்வளவு அவசரம் எதற்காக?" என்று வினவியதற்கு "ஸ்நானம் செய்துவிட்டு வெளியில் வந்தபிறகு எனது மனநிலை மாறிவிடக்கூடும். அப்படி மாறினால் நல்ல காரியம் தவறிப்போகும். ஆதலால் உடனே அதனைச் செய்து விடும்படிக் கூறினேன்" என்றார்கள்.

நல்ல காரியத்தைச் செய்யும் விஷயத்தில் நமது முன்னோர்கள் எவ்வளவு தீவிரமாக இருந்தார்கள் என்பது இதிலிருந்து விளங்குகிறது. ஆனால், நம்மவர் இக்காலத்தில் மகாநாடுகளைக்கூட்டி மிக அழகாகத்தீர்மானங்களைச் செய்துவிடுகிறார்கள். அப்புறம் அதனை அமல் நடத்துவதில்லை.

தலைவர் தன்மை

ஹஜ்ரத் அபூ இஸ்ஹாக் (றஹ்.) அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். வழியில் ஒரு தர்வேஷ் வந்து "நானும் தங்களுடன் வருகிறேன்" என்றார். அதற்கவர் "நல்லது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது சுன்னத்திற்கேற்ப, நம்மில் ஒருவர் தலைவராக இருந்துகொள்ள வேண்டும்" என்றார்கள். அதற்கந்த தர்வேஷ் சம்மதித்து "தங்களைப் பார்க்கினும் சிறந்த தலைவர் வேறு இல்லை" என்றார். அதற்கு அபூ இஸ்ஹாக் (றஹ்.) அவர்கள் "மிகவும் நல்லது. நான் தலைவன், நீர் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பதை மறந்துவிடலாகாது" என்று கூறினார்கள்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு இருவரும் ஓரிடத்தில் தங்கினர். ஹஜ்ரத் அபூ இஸ்ஹாக் (றஹ்.) அவர்கள் தமது துணைவரை நோக்கி "நீர் இவ்விடத்திலேயே இருந்து கொள்ளவேண்டும் என்று கட்டளையிடுகிறேன்" என்று கூறிவிட்டு வெளியிற்சென்று ஜலம், விறகு, நெருப்பு முதலியவைகளைக் கொண்டுவந்து சமையல் செய்து அவருக்கு உண்ணக்கொடுத்தார்கள். திருமக்கா போய்ச் சேரும்வரை இதேமாதிரி சகல வேலைகளையும் ஹஜ்ரத் அபூ இஸ்ஹாக் (றஹ்.) அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், இடையில் அந்ததர்வேஷ் குறுக்கிட்டு தாமும் அந்த வேலையைப் பார்ப்பதாகக் கூறினால் "நீர் சும்மா இருக்கவேண்டும், நான் தலைவன், உமக்குக் கட்டளையிடுகிறேன், எனது கட்டளைக்கு மாறுசெய்யக்கூடாது" என்று கூறிவிடுவது வழக்கம். வழியில் ஒருநாள் பலத்த மழை பெய்தது. ஹஜ்றத் அபூ இஸ்ஹாக் (றஹ்.) அவர்கள் தமது துணியை அந்த தர்வேஷுக்குக் கொடுத்துவிட்டு நனைந்து கொண்டிருந்தார்கள். ஹஜ்றத் அவர்கள் செய்யும் இவ்வித ஊழியத்தைப் பார்த்து அந்த தர்வேஷ் வெட்கித்துக்கொண்டே இருந்தார். திரு மக்காவிற்குச் சென்றவுடன் சமயம் பார்த்து அந்த தர்வேஷ் நழுவிவிட்டார். ஒருநாள் மினாவில் இருவரும் சந்தித்தனர். தர்வேஷைப் பார்த்தவுடன் ஹஜ்றத் அவர்கள் அவரை அழைத்து "மகனே முஸ்லிம்கள் இவ்விதமாகத்தான் ஒருவருக்கொருவர் நேசமாக இருக்கவேண்டும்" என்று கூறினார்கள்.

முற்காலத்தில் தலைமைப் பதவியை வகிப்பவர்கள் வருகிற கஷ்டங்களையும் சிரமங்களையும் சகித்துக்கொண்டு ஜன ஊழியம் செய்தனர். இக்காலத்தில் தலைவர்களாக வருபவரில் அநேகர் எவ்விதச் சிரமத்தையும் எடுத்துக்கொள்ளாமல் அதிகாரத்தை மட்டிலும் செலுத்த முன்வருகிறார்கள்.

ஒருமுறை இரண்டுபேர் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டனர். அவர்களில் ஒருவர் மற்றொருவரைப் பார்த்து "இனி நீர் ஒன்று கூறினால் அதற்குப் பதிலாக ஆயிரம் வரும்" என்று கூறினர். அதுசமயம் மௌலானா றூமி (றஹ்.) அவர்கள் தற்செயலாக அங்கு வந்தார்கள். அவர்களுக்கு இவ்வாக்கியம் காதில் விழுந்து விட்டது. அவ்விருவரையும் மௌலானா அவர்கள் நோக்கி "சண்டை போட்டுக்கொள்வது நல்லதல்ல. திட்டவேண்டும் என்று பிரியமிருந்தால் என்னை ஆயிரம் முறை திட்டிக்கொள். நான் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளமாட்டேன்" என்று கூறினார்கள். இதனைக் கேட்டதும் அவர்கள் சண்டையை விட்டுவிட்டு சமாதானமாகி விட்டார்கள்.

ஒருவர்:—நான் நாவினால் இறைவனை ஜபித்துக்கொண்டிருக்கிறேன். ஆனால், எனது மனம் திரும்புகிறதில்லை.

ஹஜ்றத் உதுமான்கைரி (றஹ்.) அவர்கள்:— உன்னுடைய உடம்பிலுள்ள ஒரு அவயவம் உனக்குக் கீழ்ப்படிந்துவிட்டதைக் குறித்து நீ இறைவனுக்கு நன்றி செலுத்து. இன்ஷா அல்லாஹ் இனி ஒருகாலத்தில் மற்ற அவயவமும் உனக்குக் கீழ்ப்படிந்துவிடும்.

சீன முஸ்லிம்களது வீரம்

கல்கத்தாவில் பிரசுரமாகும் "ஸ்டார் ஆப் இந்தியா" என்ற பத்திரிகையின் லண்லன் நிருபர் பின்வருமாறு அப்பத்திரிகையில் எழுதியுள்ளார் :—

உலக சரித்திரத்தை நீதியுடனும் நேர்மையுடனும் ஆழ்ந்து பரிசோதித்ததிலிருந்து, முஸ்லிம்கள் எண்ணிக்கையில் எவ்வளவு குறைவாக இருந்தாலும் அவர்களது இஸ்லாமிய ஊக்கமும் வீரமும் துணிவும் எண்ணிக்கையில் மிக அதிகமாகவுள்ள கூட்டத்தினரையும் புறமுதுகு காட்டி ஓடும்படியே செய்திருக்கின்றது. அவர்களுடைய பகைவர்கள் போர்க்களத்தில் புறங்காட்டுவதற்காகவே வந்தனரோ என்ற எண்ணம் உண்டாகக்கூடிய அளவிற்கு முஸ்லிம்கள் வீரத்தைக் காண்பித்திருக்கின்றனர் என்ற விஷயம் உறுதிப்படுகிறது. முஸ்லிம்கள் வாளேந்திக்கொண்டு யுத்த மைதானத்திற்கு வந்தபோதெல்லாம் பகைவர்கள் அவர்களது தாக்குதலைச் சகிக்க முடியாமல் அலங்கோலமாக ஓடியிருக்கின்றனர் என்பதைப் பற்றிய சம்பவங்கள் இஸ்லாமிய சரித்திரத்தில் நிறைந்திருக்கின்றன. இதற்குக் காரணமென்னவெனில், முஸ்லிம்கள் ஒன்றுகூடி ஒருமனப்பட்டு இணையற்ற ஏக றப்பல் ஆலமீனாகிய ஆண்டவனுக்குத் தங்களது வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய முன் வரும் போதெல்லாம் அவர்களுள்ளத்தில் அந்த மகினை வாழ் நாயகரது வலிமை ஏற்பட்டு விடுகிறது. ஆதலால், பகைவர்களது வாளாயுதத்திற்கு சக்தி குன்றி விடுகிறது.

உதாரணத்திற்காக, இப்பொழுது யுத்தம் புரிந்துவருகிற சீனா தேசத்தை எடுத்துக்கொள்வோம். ஜப்பானியர் புயலைப்போல் மா வேகமாக சீனாவிற்குள் பிரவேசித்திருக்கின்றனர். சீனாவில் பணக்கார குபேரர்களுமிருக்கின்றனர். ஜனத்தொகையிலும் சீனர் நாற்பது கோடி. நவீன யுத்த கருவிகளுக்கும் அவர்களிடம் பஞ்சமில்லை. ஜனக் கூட்டமும் பணப் பெருக்கமும் ஆயுத பலமும் இருந்துங்கூட ஜப்பானியர் பிரவாகம்போல் திரண்டு வருவதை அச்சீனரால் தடுக்க முடியவில்லை. அதுமட்டுமா? இந்த ஜப்பானியரைவிட்டு தங்களைக் காப்பாற்றும்படியாக ஆங்கிலேயர், அமெரிக்கர், ருஷியர் ஆகியவர்களிடம் முழந்தாளிட்டுக் கெஞ்சவேண்டிய நிலைமைக்கும் வந்து விட்டனர். சர்வதேச சங்கத்திற்கு முறையிட்டும் பார்த்தனர். என்ன செய்தும் பயன் ஒன்றுமில்லை. குரூரம் நிறைந்துள்ள ஜப்பானியர் வெற்றியின் வெறியால் முடிவு என்னவாகும் என்பதைக்கூட யோசிக்காமல் மிக வேகமாக வடக்கிலிருந்து தெற்குமுகமாக தங்கள் வீட்டிற்குள் செல்வதுபோல் வேகமாக முன்னேறி வந்துகொண்டிருந்தனர்.

ஆனால், ஆண்டவனின் நாட்டம் வேறாக இருந்தது. தெற்கு நோக்கி வந்த ஜப்பானியர் மேற்கு முகமாகத் திரும்பினர். சீனா தேசத்தின் மேற்கு மாகாணங்களில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கின்றனர். இங்கு வசிக்கும் முஸ்லிம்கள் உயிரைத் திரணமாக மதிக்கும் வீரதாத்தாரியரும், அவர்களுக்கும் சீனருக்கும் பிறந்த கலப்பு முஸ்லிம்களுமாகும். சீனாவில் 5 கோடி முஸ்லிம்களிருக்கின்றனர். (10 கோடிக்கு அதிகமிருப்பதாக வேறு சிலர் கூறிஇருக்கின்றனர். (ப-ர்.) இவர்கள் யாவரும் ஏகதெய்வக் கொள்கையாளர்கள். ஹஜ்றத் முஹம்மது (ஸல்.) அவர்களது உம்மத்தினர். தினசரி ஐந்து வேளையும் ஏக தெய்வக் கொள்கைக்குரிய கலிமாவைக்கேட்டு மஸ்ஜிதுகளில் ஒன்றுகூடி கிப்லாவை முன்னோக்கி இறைவனை வணங்குகின்றனர். குர்ஆன் ஓதுகின்றனர், அதிற் கூறப்பட்டுள்ள கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றனர். ஜக்காத்துக் கொடுக்

கின்றனர். அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதற்காகச் சம்பாதிக்கின்றனர். இதனை யல்லாமல் வானளாவிய மலைகளையும் சிகரங் களையும் தாண்டி தங்களது சகோதரர்களைச் சந்திப்பதற்காக திரு மக்காவிற்கும் செல்கின்ற னர். இவர்களது நரம்புகளில் இப்பொழுதும் அந்தப்பழைய காலத்து தாத்தாரிய உதிரம் ஓடிக்கொண்டிருக்கிறது.

சீனமுஸ்லிம்கள் இதற்குமுன் பல முறை களிலும் தங்கள் வாள்பலத்தைக் காண்பித் திருக்கிறார்கள். சீன போர்க்களங்களிலுள்ள அணுக்கள் இப்பொழுதுங்கூட அவர்கள் ஓட்டு வித்த உதிரங்களை அறிந்து கொள்கின்றன. சீனமுஸ்லிம்கள் எண்ணிக்கையில் ஒன்பதி லொரு பங்கிருந்தாலும், அவர்கள் ஜப்பானி யரின் படையெடுப்பு என்ற பிரவாகத்தை ஆரம்பத்திலிருந்து கூர்மையாகக் கவனித்துக் கொண்டே இருந்தனர். தங்களது பரம்பரை வீரப்பிரதாபத்திற்குரிய பரிசைஷக்கு ஆயுத்த மாகிக் கொண்டு, தங்களிடம் ஜப்பானியர் திரண்டு வருவதை வழிபார்த்திருந்தனர்.

தாத்தாரிய உதிரம் கொதிப்படைந்தது. அல்லாஹு அக்பர் என்ற தக்பீரின் வீரமுழக் கம் ஜனங்களது செவிகளுக்கு எட்டின. காலி துப்னுவலீத் (றலி.), அபூஉபைதா (றலி) ஆகிய வர்களது யுத்தங்களின் காட்சிகள் அவர்களுக்கு முன் தோன்ற வாரம்பித்தன. நீங்கள் சீனர் களாக மட்டுமில்லை, மலையைத் துளைத்துக் கொண்டு கி. பி. 755-ல் சீனாவிற் பிரவேசித்து ஏக தெய்வத்தின் கட்டளையை உங்களுக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தவர்களின் சந்த திகளாயிருக்கிறீர்கள். நீங்கள் உங்களது அறி யாமையினால் அவர்களைப் பரதேசிகளென நினைத்துச் சண்டை போட்டீர்கள். ஆனால் அவர்களிடம் எவ்வளவு பலமிருந்த தென் பதைச் சென்ற காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் அறிவித்துவிட்டன.

சீனமுஸ்லிம்கள் தங்கள் திருகலிமாவை ஓதி னர். தாங்கள் எண்ணிக்கையில் மிகச் சொற்ப மாக இருக்கிறோம், தங்களிடம் ஆயுதமில்லை என்பதை முற்றிலும் மறந்து இரும்புச் சுவர் போல் உறுதியாக நின்று அல்லாஹுத ஆலா வின்மீது பொறுப்புச்சாட்டி உக்கிரமாக எதிர்த்தனர். மூன்று நான்கு போர்க்களத்தில் ஜப்பானியருக்கு பாடங்கற்றுக் கொடுத்து விட் டனர். புத்த மதத்தைச் சேர்ந்த சீனர்களுக் கும் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த சீனர்களுக் கும் வித்தியாசமுண்டு. அவர்களது இரும்புச் சுவற்றில் மோதுவது சுலபமல்ல வென்பதை ஜப்பானியர் உணர்ந்தனர்.

ஜப்பானியருக் கேற்பட்ட மூன்று தோல்வி களுக்கும் காரண மென்னவெனில், அபின் தின் னும் சீனர்களை அடக்கியபின் வீர முஸ்லிம் களை எதிர்க்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட் டது. சீன முஸ்லிம்கள் தக்க தருணத்தில் ஜப்பானியரை இவ்விதமாகத் தடுத்திருக்க வில்லையானால் இதற்குள் ஆங்கிலேயர்கள் இந்தி யாவைக்காப்பாற்றுவதற்காகவும் விஷவாயுவை விட்டுத் தப்பித்துக் கொள்வதற்காகவும் முக மூடிகளைத் தயார் செய்திருப்பர்.

சீனாவின் வீரரான ஜெனரல் சாங்கே ஷேக் கின் வலக்கரமாக இருப்பவர் சங்சஹீ என்பவ ராகுமென சமீப காலமாக தகவல் கிடைத்துக் கொண் டிருக்கின்றது. இவர் முஸ்லிம் வீரர். குவான்ஸி முஸ்லிம் சேனையின் தளகர்த்தர். அநேக யுத்தங்களில் அபூர்வமான காரியங்க ளைச் செய்து சீனாவிற்கு நன்றி செய்திருக்கி றார். இவர்களை யல்லாமல் காஸு மாகாணத்தி லுள்ள எல்லா முஸ்லிம்களும் தங்களது யுத் தத் திறமையில் கியாதி பெற்றவர்கள். கினியா என்ற மாகாணத்தில் இவர்களது கமா ண்டர் ஜெனரல் மாஹங்கியூ என்பவர். இவ ரும் முஸ்லிம்தான். ஜெனரல் மாலங் என்பவர் ஷாங்கையில் இஸ்லாம் மதத்தைத் தழுவினர். ஜெனரல் சூஷாவ் மியாங் என்பவரும் முஸ்லிம் தான். சீன முஸ்லிம்கள் தங்களது வீரத்திற் கும் யுத்த திறமைக்கும் பெயர் பெற்றவர்கள். இனி எப்பக்கமாக முன்னேற வேண்டும் என்ற ஆலோசனையில் இப்பொழுது ஜப்பான் ஆழ்ந் திருக்கிறது.

சீனாவில் முஸ்லிம்களது பெயருடன் "மா" என்ற வார்த்தையும் சேர்த்துக் கூறப்படுகிறது. வேகமாக ஓடுங் குதிரை என்பது இப்பதத்தின் பொருள். சீன முஸ்லிம்கள் வீரர்களாக இருப்பதால் இப்பதத்தை அவர்களது பெயர்க ளுடன் சிறப்புப் பெயராகச் சேர்த்துக் கூறப் படுகிறது. ஜப்பானியர் இஸ்லாமிய மாகாணங் களைத் தனி அரசாங்க மென்றெண்ணி இருந்த னர். என்றாலும், ஜப்பானியர் அக்கிரமித்துப் பலம் பெறுவது பிற்காலத்தில் தங்களுக்கும் அபாயம் என்பதை உத்தேசித்து சீன முஸ் லிம்கள் சீனருக்கு உதவி புரிவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்தனர்.

சீனுவில் முஸ்லிம்கள் தனியே பிரிந்திருப்பது அவர்களது சமூக நிலையை உத்தேசித்தேயாகும். சீனத்துக் காபிர்களுக்கு உதவி செய்ய முஸ்லிம்கள் எந்நேரமும் தயாராக இருக்கிறார்கள். என்றாலும், தங்களது சமூக அந்தஸ்தை எப்பொழுதும் பிரித்தே வைத்திருக்கின்றனர். முஸ்லிமல்லாத சீனர்களும் அவர்களது மதக் காரியங்களில் எப்பொழுதும் தலையிட விரும்புவதில்லை.

செய்தித்திரள்

தீண்டப்படாதவருக்கு இஸ்லாம்தான் க்திமோக்ஷம்

ஐக்கிய மாகாணத்திலுள்ள தீண்டப்படாத வகுப்பினர் முஸ்லிம் லீக்குடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர் என்ற விபரத்தைக் கேள்விப்பட்டவுடன் சுயநலமும் வகுப்புவாதமும் கொண்ட ஒரு பத்திரிகையின் பிரதிநிதி டாக்டர் அம்பேத்காரிடம் சென்று, இவ்வுடன்படிக்கையைப்பற்றிய அவரது அபிப்பிராயம் என்னவென்று வினவினர். அதற்கு டாக்டர் அம்பேத்கார் கூறிய பதில் வருமாறு:—

“பத்திரிகையின் மூலமாக இச்செய்தியைப் படித்ததல்லாமல் வேறுவிதமாக எனக்கு இவ்வுடன்படிக்கையைப்பற்றிய தகவலொன்றும் கிடைக்கவில்லை. ஆனல், நிலைமையை கவனிக்குமிடத்து தீண்டப்படாதவர்கள் நடந்துகொண்ட இம்முறையானது ஆக்ஷேபிக்கத் தக்கதல்ல. இவ்விஷயத்தை நன்கு ஆழ்ந்து கவனிக்கப்போனுல் ஹிந்துக்கள் எங்கள் மனிதர்களாக இதுவரை ஆகவுமில்லை, இனிமேல் ஆகப்போவதுமில்லை என்ற உண்மைதான் அம்பலத்திற்கு வரும். தீண்டப்படாதவர்களுக்கு இஸ்லாம் மதத்தில் தான் தஞ்சம் கிடைக்கமுடியும். ஏனெனில், மனித சமத்துவம், பரோபகாரம் ஆகியவைகளின் ஜண்டாவை உயர்த்திக்கொண்டிருப்பது இஸ்லாம் மதம்தான். இதனுல்தான் நான் வட்டமேஜை மகாநாட்டின் போழ்து ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுவது முடியாத காரியம் என்பதையுணர்ந்து சிறுபான்மை வகுப்பினரின் உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறினேன். என்னுடைய இவ்வாலோசனைக்கு முஸ்லிம் தலைவர்களும் முக்கியமாக ஸர். முஹம்மது ஷாபியும், ஸர். ஆகாகானும் இணங்கினர்கள். ஆதலால், அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனல், இன்னமும் இவ்வாலோசனை கிரியாம்சையில் நடைபெறுமல் இருப்பது வருந்தத்தக்கதாகும்.

துருக்கியில் வயோதிகர்கள்.

துருக்கியில் நூற்றைம்பது வயதிற்கு அதிகமாக வுள்ளவர்கள் தற்போது 130 பேர்களிருக்கின்றனர், என்ற விபரம் இப்பொழுது புதிதாக எடுக்கப்பட்ட ஜனசங்கியை ரிப்போர்ட்டிலிருந்து தெரிய வருகிறது. இவ்வயோதிகர்கள் பெரும்பாலும் துருக்கியின் கிழக்கு மாகாணங்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் சாமான்ய உணவையே அருந்துகின்றனர். பாலையும் குடிக்கின்றனர். இவர்களெல்லோரிலும் அலீ என்பவர் அதிக வயது முதிர்ந்தவர். இவர் பட்டாளத்தில் ராணுவ சேவை செய்தவர். இவர் கிழக்கு அனதோலியாவிலுள்ள அல்பரீக் என்ற நகரில் வசிக்கிறார். இவரைப்பார்க்கினும் முதிர்ந்த வயதுடையவர் இவ்வுலகில் இப்பொழுது வேறு யாரு மிருக்க முடியாது. இவரது சிறியதந்தையின் புதல்வி ஒருவள் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் வசித்து வருகிறாள். அவளுக்கு தற்போது வயது 137. இவள்தான் துருக்கியிலுள்ள வயது முதிர்ந்த ஸ்திரீ. ராணுவ சேவைசெய்த இந்த வயோதிக அலிக்கு வெகுநேரம்வரை சம்பாஷணைசெய்ய இயலுவதில்லை. இவரது காதிலும் இப்பொழுது செவிட்டுத்தன்மை உண்டாகி இருக்கிறது. இதனைத்தவிர அவருடைய உடல் நிலை மிக நன்றாக இருக்கிறது. இவர் இராக்காலங்களில் 4 மணி நேரம் தான் நித்திரை செய்கிறார். இப்பொழுது அவருக்குப் புதிதாகப்பல்முளைத்துக் கொஞ்ச காலம் ஆகிறது. இவர் 1829-ல் நடந்தயுத்தத்தில் கிரேக்கரை எதிர்த்து யுத்தம் செய்தார். அதுபோழ்து இவருக்கு “கார்போல்” பதவிவரை உத்தியோக உயர்வு கிடைத்தது. அப்புறம் இவர் 1878-ல் நடைபெற்ற கிரிமியன் யுத்தத்திலும் துருக்கிக்கு ராணுவ சேவை செய்தார். சர்வியர்கள் முதலாவது முறையில் செய்த கலகத்தை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட பட்டாளத்தில் இவர் சேர்ந்து நல்ல வேலை செய்தார். அப்பொழுது இவருக்கு நூறு வயது பூர்த்தியாகி இருந்தது.

இவர்களை அல்லாமல் நூறு வயதிற்கு மேம்பட்டவர்கள் துருக்கியில் 6241 பேர்களிருக்கின்றனர். இவர்களில் 3685 பேர் ஆடவர், மற்றவர்கள் ஸ்திரீகள்.

சிந்து முஸ்லிம் லீக்

அகில இந்திய கிலாபத் கமிட்டியின் மாஜி தலைவரான ஷெய்கு அப்துல் மஜீத் என்பவர் சிந்து மாகாணத்தில் முஸ்லிம் லீக் சபைகளை ஏற்படுத்தி முஸ்லிம்களின் பிரதிநிதி உண்மை யான முஸ்லிமாக இருக்கவேண்டும் என்பதற் காக ஒரு திட்டம் தயார் செய்திருக்கிறார். அத் திட்டத்தின் சாரம் வருமாறு:—

சிந்து மாகாணம் முழுவதிலும் குறைந்த பக்ஷம் 400 கிளைச்சபைகளை ஏற்படுத்தி 50,000 அங்கத்தினர்களைச் சேர்க்கவேண்டும். தொண் டர்படை ஸ்தாபன மொன்றை ஏற்படுத்த வேண்டும். இத்தொண்டர் படையினருக்குத் தனி உடையையும் ஏற்படுத்த வேண்டும். லீகின் எல்லா கிளைச்சங்கங்களின் காரியாலயங் களிலும் இஸ்லாமியக் கொடியை யேற்ற வேண் டும். பிறகு சிந்து மாகாணத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஊரிலும் மகாநாடுகளைக்கூட்டி முஸ் லிம் பொது ஜனங்கள் சார்பாக சிந்து அசெம் பிளியிலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்களை முஸ் லிம் லீக் பிரமாணப்பத்திரத்தில் கையொப்ப மிடும்படி கேட்கவேண்டும். அதற்கு இணங் காதவர்களை சட்டசபை மெம்பர் பதவியை ராஜிநாமாச் செய்யும்படியாக வற்புறுத்த வேண்டும்.

ஷெய்கு அப்துல் மஜீத் அவர்கள் வெகு கால மாக தேசிய ஊழியம் புரிபவர். காங்கிரஸ், கிலா பத், தப்லீக், லீக் ஆகிய சபைகளுக்கு அநேக அரும்பெரும் ஊழியம்செய்தவர். இவர் மௌன மாக வேலைசெய்யும் பழக்கமுள்ளவர். ஆதலால், இவர், ஏற்படுத்திய இத்திட்டத்தை உறுதி யுடன் நிறைவேற்றுவார். இத்திட்டம் கைகூடி அமலுக்கு வந்துவிடுமாயின், சிந்து மாகாணத் திற்கு நல்ல காலம் என்றே கூறவேண்டும்.

சிந்து மாகாணம் மிகச் சிறிய மாகாணமாக இருந்தபோதிலும் முஸ்லிம்களை பெரும்பான் மையாகக் கொண்ட மாகாணமாகும். தற்போது அங்கு முஸ்லிமை பிரதம மந்திரியாகக் கொண்ட மந்திரி சபை இருந்தபோதிலும் இம்மந்திரி சபையினுல் முஸ்லிம்களுக்கு எவ்வித நன்மையு மேற்படப் போவதில்லை. ஏனெனில், சிந்து அசம்பிளியிலுள்ள முஸ்லிம்கள் ஒற்றுமை யில்லாமல் பிளவுபட்டிருப்பதால் தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முஸ்லிம் அல்லாதாரின் தயவை எதிர்பார்த்திருக்க வேண்டியதிருக்கிறது. முஸ்லிம்கள் கட்டுப் பாடும் ஒற்றுமையுமுள்ள ஒரு கக்ஷியாக இருந் தால் முஸ்லிம்களுடன் ஒற்றுமையாக இருக்கக் கூடிய வேறு ஒரு முஸ்லிம் அல்லாத கக்ஷியு டன் சேர்ந்து மந்திரிச் சபையை அமைக்க முடியும். அவ்வாறு அமைத்தால்தான் முஸ் லிம்களுக்கு அதிக நன்மை செய்யாவிட்டாலும் குறைந்தபக்ஷம் தீமையேனும் வாராமற்றடுக்க முடியும். தற்போது கான்பகதூர் அல்லாபக்ஷ் என்பவர் சிந்து மாகாணத்திற்கு முதல் மந்திரி யாக இருக்கிறார். இவருக்கு முஸ்லிம்களிடம் அதிகச் செல்வாக்குமில்லை, முஸ்லிம்களின் ஆதரவும் போதுமான அளவிற்கு இல்லை. இவர் தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்வ தற்காக காங்கிரஸ்காரர்களின் உதவியை நாட வேண்டியதிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் முஸ் லிம்களை நசுக்க விரும்புவதால் காங்கிரஸின் தயவை எதிர்பார்த்து நிற்கும் மந்திரி சபையின் மீது முஸ்லிம்களுக்கு நம்பிக்கையுமில்லை, அம் மந்திரி சபை முஸ்லிம்களுக்கு உருவான உதவி யைச்செய்யப்போவதுமில்லை. ஆகவே, ஷெய்கு அப்துல் மஜீத் சிந்தி அவர்கள் சிந்து மாகா ணத்திற்கு ஏற்படுத்தியுள்ள திட்டம் வெற்றி கரமாக நிறைவேறி, முஸ்லிம்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் குறைந்தபக்ஷம் தீமையே னும் செய்யாமலிருக்கிற மந்திரி சபையுண்டாக எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானுக. ஆமீன்.

அல்லாமா ஸர். இக்பால் மர்ஹூம்

அல்லாமா டாக்டர் ஸர் முஹம்மது இக் பால் அவர்கள் சென்ற 21உ தாருல் பனாவை விட்டு தாருல் பக்கா அளவிற் சேர்ந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜி ஊன்). மர்ஹூம் அவர்கள் இந்தியாவின் செல் வப்புதல்வர்களில் ஒருவர். அறிவாளி. ஆங்கி லம், அறபி, பார்ஸீ, உருது ஆகிய நான்கு பாஷைகளிலும் தக்க பாண்டித்துவமுள்ளவர். சட்டப் பரிக்ஷையில் பாரிஸ்டர் பட்டம் பெற்ற வர். ஜெர்மனியிலுள்ள மியூனிச் சர்வகலாசாலை யில் தத்துவ சாஸ்திரி என்பதற்குரிய பி. எச். டி. பட்டம் பெற்றவர். இன்னும் பல பட்டங்களைப் பெற்றிருக்கிறார். ஆங்கிலம், உர்தூ, பார்ஸி ஆகிய பாஷைகளில் செய்யுள் களை எழுதுவதில் வல்லவர். இவ்வுலகில் கியாதிபெற்ற புலவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால், தத்துவார்த்தங்களைப் புகுத்திச் செய் யுள்களை எழுதும் ஆற்றலுள்ளவர்கள் மிக அருமை. ஸஅதி ஷீராஜீ, ஹாபீஜ் ஷீராஜீ,

மௌலானா ரூமி முதலிய பெரியார்களது செய்யுள்களுக்கு உலகமெங்கும் ஏற்பட்டுள்ள ஆதரவிற்கு முக்கிய காரணம் அவர்களெழுதியுள்ள செய்யுள்களில் தத்துவார்த்தங்களும் நிறைந்திருப்பதேயாகும். நமது இந்திய புலவர் ரத்தினம் டாக்டர் ஸர் இக்பால் மர்ஹூம் அவர்களது செய்யுள்கள் இந்த இனத்தைச் சேர்ந்தனவாகும். ஆதலால், இவரது செய்யுள்களுக்கு உலகில் பெரும் ஆதரவும் மதிப்பும் இருந்து வருகிறது. மர்ஹூம் அவர்கள் புலவத் தன்மையில் பெருங் கீர்த்தியடைந்தது மட்டுமில்லாமல் ராஜீய வியவகாரங்களில் சம்பந்தப்பட்டு அகில இந்திய முஸ்லிம் லீகிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தையும் அடைந்தார். இறுதியாக, பைத்துல் முகத்தஸில் நடைபெற்ற அகில உலக முஸ்லிம் மகா நாட்டில் உப தலைவராகவும் தெரிந் தெடுக்கப்பட்டார். நமது இந்தியாவில் முஸ்லிம் வர்க்கத்தின் பீடையாகத் தோன்றிய காதியானி இயக்கத்தை எதிர்த்து பஞ்சாபிலுள்ள அஹ்ரார் சபையினர் பிரசாரம் செய்து வந்தபோது நமது நாட்டில் ஆங்கிலம் படித்த முஸ்லிம்களுக்கு பெரும் கலக்கமேற்பட்டு இருந்த சமயத்தில், டாக்டர் இக்பால் மர்ஹூம் அவர்கள் காதியானிக் கொள்கைகள் இஸ்லாம் மதத்திற்கு எவ்விதத்தில் விரோதமானவை என்பதைக் குறித்து எழுதிய ஆங்கில வியாசங்கள் ஆங்கிலம் படித்த முஸ்லிம்களை விழிக்கச் செய்தன. காதியானிகள் ஆங்கிலங் கற்றவர்களை ஏமாற்றி வழி கெடுத்து வந்ததை டாக்டர் இக்பால் மர்ஹூம் அவர்களது வியாசங்கள் தடுத்துக் காப்பாற்றிற்று. இம்முறையில் அவர் மார்க்கத்திற்குப் பெருத்த சேவை செய்துள்ளார். முஸ்லிம்களது ராஜிய பிரசினைகள் மிகச் சிக்கலாக இருக்கிற இச் சமயத்தில், அறிவும் செல்வாக்கும் மதிப்புமுள்ள பெரியார் டாக்டர் ஸர் இக்பால் போன்றவர்கள் மறிப்பது முஸ்லிம்களுக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த நஷ்டமாகும். எல்லாம் வல்ல இறைவன் மர்ஹூம் அவர்களுக்கு மகு பிறத்துச் செய்வதுடன் அவரது பந்துக்களுக்கு ஸப்ரே ஜமீலத் தந்தருளுவானாக. ஆமீன்.

Cable :-" ANWER." Phone : 1022.

M. I. SHAMS MOHIDEEN

Agents for Messrs. LIPTON Ltd.

HIGH-CLASS CIGAR MANUFACTURERS, GROCERS, CIGARETTES DISTRIBUTORS, CEYLON CURIOS EXPORTERS.

FOREIGN MONEY CHANGERS

No. 65, Bristol Building, Fort

Cigar-Works at :
No. 17, Baillie Street, Fort

COLOMBO

நண்பர் ஜனாப் M. I. ஷம்ஸு முகைதீன் சாஹிப் அவர்கள் நமது மாசிகையின் ஹானரரி ஏஜண்டாக இருந்து உதவி புரிய ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் கொழும்பிலும், சிலோனின் இதர இடங்களிலுமுள்ள கனவான்கள் சந்தா தொகையை செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுமாறு கோருகிறோம்.

மானேஜர்.

இந்திய முஸ்லிம்களின் தேசியமுறை

இந்தியாவின் ஆறு மாகாணங்களில் ஹிந்துக்கள் மெஜார்ட்டியாகவும், ஐந்து மாகாணங்களில் முஸ்லிம்கள் மெஜார்ட்டியாகவும் இருந்த போதிலும் ஒவ்வொருமாகாணத்திலும் கூட்டு மந்திரிசபை அமைக்கவேண்டியது அவசியமாகும். இதுவன்றி ஹிந்துக்கள் மெஜார்ட்டியாயுள்ள மாகாணங்களிலுள்ள மந்திரிகள் யாவரும் ஹிந்துக்களாகவும், முஸ்லிம்கள் மெஜார்ட்டியாகவுள்ள மாகாணங்களிலுள்ள மந்திரிகள் அடங்கலும் முஸ்லிம்களாகவும் இருக்கமுடியாதென்பது பிரத்தியக்ஷம். அறிவாளிகளும் தந்திரசாலிகளாகவுமுள்ள ஹிந்துக்கள் காங்கிரஸ் கொடியின் கீழ் ஒன்றுகூடி, ஹிந்துக்கள் மெஜார்ட்டியாகவுள்ள ஆறு மாகாணங்களிலும் தக்க ஒழுங்குமுறையோடுகூடிய ஓர் திட்டத்தை உண்டு பண்ணி வைத்திருக்கின்றனர். இத்திட்டத்தை ஏற்படுத்துவதற்கு மூன்றுபடிகளை கடந்து சென்றிருக்கின்றனர். 1. ஹிந்துகள் ஒற்றுமையாக தங்கள் ஓட்டுகளை காங்கிரஸ் அபேக்ஷகர்களுக்கே அளித்து, அவர்களை அபரிமித மெஜார்ட்டியால் ஜெயம் பெறச்செய்திருக்கின்றனர். 2.காங்கிரஸ் இம்மாகாணங்களிலெல்லாம் காங்கிரஸ் மந்திரி சபைகளையே ஏற்படுத்திக் கொண்டதுடன் முஸ்லிம்களில் நிபந்தனையன்றி ஒற்றுழைப்பதாக வாக்களித்து, காங்கிரஸில் கையெழுத்திட்டு, அதன் சார்பில் அபேக்ஷகராக நின்று வெற்றி பெற்றவர்களையே தங்களுடன் மந்திரிகளாகச் சேர்த்துக் கொண்டிருக்கின்றது. 3. காங்கிரஸானது இரண்டு ஹிந்துக்களையும் ஒரு முஸ்லிமையும் கவர்னர்களாகநியமித்து, எல்லா மாகாணங்களையும் கவனித்து, அங்கு நடைபெற வேண்டியவைகள் காங்கிரஸ் திட்டத்திற்கு நேராய், அதன் ஒழுங்கு முறையோடு நடைபெற வேண்டியதற்கான திட்டங்களை ஏற்படுத்தும்படியும் செய்திருக்கிறது.

இதுபொழுது, காங்கிரஸ், எல்லா மாகாணங்களிலும் நடைபெறும் மந்திரி சபைகளின் சூக்ஷுமக் கயிற்றை தன் கையினுள் வைத்திருப்பதென்ற முடிவுக்கே வந்திருக்கிறது. இதனால் காங்கிரஸ் ஆக்ஷியின் கீழுள்ள மாகாணம் வேறு, இதரர்களின் ஆக்ஷியிலுள்ள மாகாணம் வேறு என்பதாக பாகுபாடின்றி கவனிக்கப்பட்டு வருகிறது. இன்று ஒவ்வொரு மாகாண கவர்னரும் ஏதாகிலுமொரு மாகாணத்தின் மந்திரி சபையில் பிரவேசித்துவிட்டால் காங்கிரஸின் நிர்வாகத்திலுள்ள மாகாணங்கள் முழுதிலும் பரபரப்பேற்பட்டு விடுகிறதென்பதையும், ஆறு மாகாண மந்திரி சபைகளிலும் பெரும் விபரீதமேற்பட்டு விடுமென்பதையும் நன்குணர்ந்திருக்கின்றனர்.

முஸ்லிம்கள் மெஜார்ட்டியாகவுள்ள மாகாணங்கள்

முஸ்லிம்கள் மெஜார்ட்டியாகவுள்ள மாகாணங்களில் அவர்கள் ஓர் ஐக்கியத்திற்குக் கீழ் ஒன்றுபடவேண்டும். இம்மாகாணங்களிளெல்லாம் தங்கள் பிரதிநிதியை அபேக்ஷகராக நிறுத்த வேண்டும். ஓட்டர்களும் ஒருமுகமாக இவர்களால் நியமுகம் செய்யப்பட்ட அபேக்ஷகர்களுக்கே தங்கள் ஓட்டுகளை அளித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும். பின்னர் காங்கிரஸ் கையாண்டுவரும் முறையைப்பின்பற்றி இவ்வைந்து மாகாணங்களிலும் நிபந்தனைக்குட்பட்டு முஸ்லிம் அல்லாதாரையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். கடைசியாக இரு முஸ்லிம்களையும் ஒரு முஸ்லிம் அல்லாதாரையுங்கொண்ட நிருவாக போர்டு ஒன்று அமைக்கவேண்டும். இந்த போர்டு முஸ்லிம்கள் மெஜாரிட்டியாகவுள்ள ஐந்து மாகாணங்களின் நிருவாகங்களையும் தன் கையில் வைத்துக் கொள்ளும்.

ஹிந்துக்கள் அதிகமாயுள்ள மாகாணங்களில் முஸ்லிம்கள் என்ன செய்யவேண்டும்?

சென்ற 150 வருடங்களின் சரித்திரங்களை நாம் நன்கு நோட்டமிட்டுப் பார்ப்பதுகொண்டு, முஸ்லிம்கள் பெரும் தவறு செய்திருக்கின்றார்களென்ற முடிவுக்கே நாம் வரவேண்டியதாகவிருக்கிறது. அதாவது காங்கிரஸின் சார்பாக சட்ட சபைக்கு அபேக்ஷகராக நிற்காது லீக்

சார்பிலோ, சொந்த ஹோதாவிலோ நின்றவர்கள் தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் பிரமாணப் பத்திரத்தில் கையெழுத்துச் செய்து விட்டு காங்கிரஸ் மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஹிந்துக்கள் மெஜாரட்டியாகவுள்ள மாகாணங்களில் முஸ்லிம்கள் காங்கிரஸ் பிரமாண பத்திரங்களில் கையெழுத்திடாது ஒதுங்கி, இவர்களெல்லோரும் ஏக ஐக்கியமாகி ஒன்றுபட்டு, நாங்கள் தனியான சிறு பான்மை சமூகத்தினர் என்ற ஹோதாவில் எங்களுக்கு மந்திரி சபையில் ஸ்தான மளியுங்களென்று காங்கிரஸ் மந்திரி சபையினிடம் வேண்டிக் கொள்ள வேண்டியது முஸ்லிம்களுக்குப் பிரயோசனமளிக்கும் முறையாக விருந்தது. காங்கிரஸ் இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளுமாயின் சகல மாகாணங்களின் நிருவாகங்களும் ஒழுங்கு முறையோடு நடப்பதுடன் முஸ்லிம்களும் தேசிய சேவையில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும். துர் அதிர்ஷ்டவசமாக இவ்வேண்டுகோளை காங்கிரஸ் மறுத்துவிடுமாயின் அங்குள்ள முஸ்லிம் மெம்பர்கள் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்து சபையினின்று வெளியில் வந்து, தங்களைத் தெரிந்தெடுத்த மக்களிடம் சென்று ஒட்டர்களுக்கு விஷயங்களை அறிவித்து அவர்களைத் தயார் செய்வதி லீடுபட வேண்டும். அதுபொழுது காங்கிரஸ் மந்திரி சபை ஒரு பக்கமும், மற்றொரு பக்கம் முஸ்லிம்களுமிருப்பார்கள். இந்நிலைமையில் காங்கிரஸ் மந்திரிகளின் கட்டளைக்கேற்ப முஸ்லிம்கள் தொந்திரவுக்குள்ளாகவும் கஷ்டமடையவும் நேரிடும். ஆனால் முடிவாக அன்னோர் முஸ்லிம் களுக்கு கீழ்ப்படிந்தேயாகவேண்டிய நிலைமை ஏற்பட்டே தீரும். இப்போராட்டத்தில் முஸ்லிம்களுக்கு அவசியம் நஷ்டங்களும் தொந்திரவுகளும் ஏற்படுமென்பது திண்ணம். ஆனல், சமூகம் விழித்து உயிர்ப்பித்தெழுந்துவிடும். இவ்வாறன தியாகத்திற்குப்பின் முஸ்லிம்கள் சமூகத்தின் பாத்தியதைகளுக்காகவும், தாங்கள் தனித்திருப்பதற்காகவும் எவரிடமும் முறையிட்டுக்கொள்ளவோ, வேண்டுதல் புரியவோ தேவையில்லை. முஸ்லிம்கள் எப்பொழுதும் தங்கள் பலத்தைக்கொண்டே காரியாதிகளை நடத்திச் செல்ல முடியும்.

இதுபோழுது செய்யவேண்டியதென்ன?

ஹிந்துக்கள் மெஜாரட்டியாகவுள்ள மாகாணங்களில் முஸ்லிம்கள் பெரும் தியாகஞ்செய்ய முற்பட்டு, முஸ்லிம் மந்திரிகள் காங்கிரஸ் மந்திரி சபைகளிலிருந்து பிரிந்து வெளியில் வந்துவிடவேண்டும். அதன்பின் ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள முஸ்லிம்கள் ஒன்றுபட்டு தாங்கள் சிறுபான்மையான தனித் தொகுதியினர் என்ற முறையில் தேசிய மந்திரி சபையில் தங்களுக்கு ஸ்தானம் கொடுக்கப்படவேண்டுமென கோரிக்கொள்ளவேண்டும். காங்கிரஸ் சிறுபான்மையோரின் கோரிக்கையை யேற்றுக்கொள்ளுமாயின் நாம் அதனை முழுமனதோடும் திருப்தியோடும் அங்கீகரித்துக்கொள்வோம். காங்கிரஸ் நமது கோரிக்கையை மறுத்து விடுமாயின் சட்ட நிரூபண சபையில் அங்கம் பெற்றுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் அச்சபையினின்று வெளியில்வந்து தங்கள் சமூகத்தினரை, காங்கிரஸ் ஆட்சியுடன் போர் தொடுப்பதற்கு ஆயுத்தமாகும்படி தயார் செய்யவேண்டும். இப்போழை, காங்கிரஸ் ஆட்சி முஸ்லிம்களின் சிறுபான்மை பாத்தியதைகளை அங்கீகரித்துக்கொள்ளும்வரை நடத்திக்கொண்டே செல்லவேண்டும்.

ஓர் முக்கிய விஷயம்

காங்கிரஸ் எங்களுடைய கோரிக்கையை அங்கீகரித்து எங்களின் பாத்தியதைகளை அளிக்க வேண்டுமென்பது இந்திய முஸ்லிம்களின் வெகு நாளைய வேண்டுதலாக இருந்து வருகிறது. முஸ்லிம்களின் இக்கோரிக்கை சம்பந்தமாய், எந்த பாத்யதைகளை பங்கிட்டுக் கொடுப்பது? பாத்தியதைகள் எங்கிருக்கின்றன? பங்கிட்டுக் கொடுப்பதற்கு காங்கிரஸினிடம் என்ன விருக்கின்றது? எனக் காங்கிரஸ் பெரியார்கள் கூறி வருகின்றனர். ஆனல் காங்கிரஸ் பெரியார்களின் இச்சமாதான வார்த்தைகள் சற்றும் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாகவில்லை என்பது யாவருக்கும் தெரிந்தவையே. ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டுப் போயிருக்கின்றன. சிறுபான்மை சமூகத்தவரின் பாத்தியதைகளைக் கவனிக்க வேண்டியதும், அவர்களைத் திருப்தி செய்யவேண்டியதும், சிறுபான்மையினரின் மார்க்கம், கலை இவைகளைப் பேணி நடப்பதுடன் உத்தியோகங்களிலும் டிஸ்டிரிக்ட் போர்டு முனிஸிபாலிட்டி முதலியவைகளிலும் முஸ்லிம்களின் வீதாசாரப்படி உத்தியோகங்கள் கொடுத்து, இவைகள்தான் உங்கள் பாத்தியதைகளென

ஸ்பஷ்டமாய் அறிவித்துவிட வேண்டியதும் பிரதானமாகவிருக்க, காங்கிரஸ் பெரியார்களின் மேற்கண்ட கூற்று பிரயோசன மற்றதென்பதும், கவைக்குதவாததென்பதும் இனிது புலனாகும். இவ்வாறு காங்கிரஸ் தேசீய ராஜியசம்பந்தமான அதிகாரம் வகித்திருக்கும் போது முஸ்லிம்களுக்குள்ள பாத்தியதைகளை அவர்களுக்களிக்க காங்கிரஸிடம் என்ன அதிகாரமிருக்கிறதென்று யாரும் கூற முடியுமா? நாம் காங்கிரஸினிடம் முழு சுயராஜியத்தையும் கேழ்க்கவில்லை. ஆனாலும், ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் எங்களுக்கு அதிகாரங்களும் பாத்தியதைகளும் கிடைத்து விடுமாயின், முஸ்லிம்கள் கிரமமாக பெறவேண்டிய பாத்தியதைகளை அளித்தே தீருவோம் எனக்கூறிக்கொண்டிருந்தனரா, இல்லையாவென்பதைத்தான் இதுபொழுது கேட்கின்றோம். இதுபொழுது காங்கிரஸுக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறதோ அதினின்றும் முஸ்லிம்களுக்குத் தனியாக சிறுபான்மையினர் என்ற முறையில் ஞாயமாக கிடைக்கவேண்டிய பாத்தியதைகளை அளிக்கவேண்டுமென்பதுதான் முஸ்லிம்களின் கோரிக்கையாகும் என்பதாகக் கூறுகின்றோம். இதுபொழுது காங்கிரஸ் எத்தோரணையில் முஸ்லிம்களை காங்கிரஸ் மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டிருக்கிறதோ அந்த மார்க்கம் சிறுபான்மையினரின் நோக்கத்திற்கு முரண்பட்டதாக விருக்கிறது. காங்கிரஸ் எந்த முஸ்லிம்களுக்கு மந்திரி ஸ்தான மளித்திருக்கின்றதோ அத்தோரணை காங்கிரஸ் சார்பினின்று முள்ளதாக விருக்கிறது. முஸ்லிம்கள் என்னும் தோரணையில் அந்த ஸ்தானங்கள் அளிக்கப்பட்டதாகவில்லை. காங்கிரஸ் தாஸர்களான இம்மந்திரிகள்மீது முஸ்லிம்களுக்கு சற்றேனும் நம்பிக்கையுங்கிடையாது. அவர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக விருப்பினும் உத்தியோகத்தோரணையில் ஜனப்பிரதிநிதியாக மதிக்கப்படுகிறார்களில்லை. ஆகவே, முஸ்லிம் பெரியார்களும் தலைவர்களும் நாம் மேலேகூறிய ஆலோசனையை கவனத்துடன் சிந்தித்து ஆவனசெய்ய முற்படுவார்களாக.

ஓர் அரிய சம்பாஷணை

(ஹாபிஸ் E. M. A. R. தேன்காசி, வரைவது)

யான் எனது காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு, நேரத்தை போக்குவதற்காக சில பத்திரிகைகள் சகிதம் எனது அறைக்குச் சென்று அவைகளை மிக ஸ்வாரஸ்யத்துடன் நோக்கிக்கொண்டு இருந்தேன். மணி எட்டு இருக்கும், எனது நண்பன் கலாசாலைத் தோழன் ரஷீது என்பவன், என் அறைக்குள் நுழைந்து முகமன் கூறி, நின்று கொண்டிருந்தான். என்னை அப்பத்திரிகைகள் மயக்கி விட்டிருந்ததினால், எனக்கு அவனையும், அவனது ஸலாத்தையும் கவனிக்க முடியாமற்போய்விட்டது. பிறகு, 'க்ளுக்' என்று ஒரு சத்தம் கேட்டது. திரும்பிப் பார்க்க, எனது நண்பன் புன்னகை மலர்ந்த முகத்துடன், ஏது அப்பத்திரிகைகளில் என்ன அப்படி விசேஷமிருக்கின்றது; நான் வந்ததையோ, சலாம் கூறினதையோ கவனிக்காமல் செய்துவிட்டது, என்று கிண்டலாக மொழிந்தான். நான் பிரமித்துப் போய், "இல்லை நண்பா! நான் நீ வந்ததையோ, சலாம் கூறினதையோ கவனிக்கவில்லை. அதற்காக என்னை க்ஷமித்துக்கொள்" என்று கூறி அங்கிருந்த ஓர் ஆசனத்தில் அமரச் செய்தேன். நேயர்களுக்கு முதன் முதலில் ஓர் விஷயத்தைக் கூறிவிடுகின்றேன். எனது நண்பனும் என்னைப்போல் பத்திரிகை உலகில் எவ்வளவு மேம்பாடைந்திருந்தும், அவன் ஒரு காங்கிரஸ்வாதி என்று கூறுவதற்கொப்ப, அவனிடம் கொஞ்சம் காங்கிரஸின் அபிமானம் இருந்துகொண்டு வந்தது. எந்தப் பேச்சை எடுத்தாலும் காங்கிரஸுக்கே புகழைக்கொடுத்து, அதுவே சிறந்ததென்ற கொள்கைக்கு வந்துவிடுவான். ஆனால் இன்று அவனது கொள்கைகளுக்கு இடம் கிடைக்காமல் முற்றுப்புள்ளி போடும் நிலைமை வந்து

விட்டது. அதற்குக் காரணம் பின்வரும் சம்பாஷணைகளேயாகும்.

வழமைபோல் அன்றும் பல விஷயங்களைப் பற்றிப்பேசி முடிவில் காங்கிரஸ், முஸ்லிம் லீக், இவைகளை ஆராய்வதில் போய் முடிந்தது. எனது நண்பன், அன்ப! இன்றைய காங்கிரஸ் உலகைப் பார்க்கின், மெஜாரிட்டி பலமுள்ளதாகவிருப்பதையும், தேச விடுதலைப் போராட்டத்தில் முன்னேறிக்கொண்டு வருவதையும், காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்றதிலிருந்து மக்களுக்கு பலவித நன்மைகள், சவுகரியங்கள் செய்து வருவதையும் பார்த்தால், அரசியல் ஸ்தாபனத்தில் அதுவே உண்மையான கட்சி யென்பது புலப்படுகிறதன்றோ? ஆதலால், முஸ்லிம்களாகிய நாமும் அதில் சேர்ந்து அதை என் பலப்படுத்தக்கூடாது? இதுவிஷயத்தில் உன் அபிப்பிராயம் எப்படியோ.

நான், நண்ப! ஒரு கட்சி மெஜாரிட்டி பலமுள்ளதாக இருப்பதைப்பார்த்து நாம் ஏமாந்து விடலாமா? அது மற்றையவனைய சமூகங்களுக்கு அதாவது மைனரிட்டி சமூகங்களுக்கு என்ன நன்மைகள் செய்திருக்கிறது என்பதை கவனிக்கவேண்டாமா? அப்படியே மெஜாரிட்டி பலமுள்ள காங்கிரஸ் கட்சி, மைனரிட்டி சமூகங்களுக்கு இதுவரை என்ன சலுகைகாட்டி இருக்கின்றது? நம் முஸ்லிம் சமூகம் கோரும் விஷயங்களை என்ன பூர்த்தி செய்து கொடுத்திருக்கின்றது? அதுதான் முடியாவிட்டாலும், முஸ்லிம்களது மத விஷயத்திலும் குறுக்கிட்டுக்கொண்டு, அவர்களது அசல் மார்க்கச் சட்டங்களிலே கைவைக்க ஆரம்பித்து விட்டதே. அதே காங்கிரஸ் மந்திரிகளில் ஒருவர், இஸ்லாமிய அனுஷ்டான முறையான 'பர்தா' சிஸ்டத்தை "முட்டாள்தன"மென்று கூறினார். மற்றொருவர், குர்பானி முறையை அஹிம்சைக்கு மாற்றமென்றும், அதைச் செய்வோரை சரியானபடி தண்டிக்க வேண்டுமென்றும் சட்டசபையில் ஓர் மசோதா கொண்டு வந்திருக்கிறார். மற்றொருவரோ வெனின், ஆண்டவன் ஒருவனையே வணங்கவேண்டும் என்றும், அவனுக்கே அடிபணிய வேண்டுமென்றும் அசல் கட்டளை இருக்கும்போது, காளியையும், துர்க்கையையும் வணங்கும் பாடலான வந்தே மாதரக் கீதத்தை பாடவேண்டுமென்றும், அது பாடப்படும்பொழுது அதற்காக எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமென்றும் சொன்னதுமல்லாமல் செய்கையிலும் காட்டி வந்தார். இன்னும் இவைபோன்று முஸ்லிம்கள் மனதை புண்படுத்தும் விஷயங்கள் எத்தனையோ நடந்து வருகின்றன. இவைகளெல்லா மிருந்தும் முஸ்லிம்கள் காங்கிரஸுடன் சேர்ந்து ஒத்துழைப்பதா? மதத்தையெல்லாம் ஒரு மூலையில் கட்டிவைத்துவிட்டு இவர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்கள் சொல்வது, செய்வது, நல்லதோ, கெட்டதோ வென பாராது ஆமோதித்துக் கொண்டிருப்பதா?. இதற்காகத்தான் முஸ்லிம்கள் நிபந்தனையின்றி காங்கிரஸுடன் சம்பந்தம் வைப்பது தகாது என்று நம் தலைவர்கள் கூறி வருகின்றனர்.

இதுபோக, காங்கிரஸ் மற்றைய சிறுபான்மையோராகிய ஆதித்திராவிட சமூகத்தினருக்கு என்ன தான் நன்மைகள் செய்துவிட்டது? மற்றவர்களைப்போல மதம், கலை, தொழில், கோவில்களுக்குச் செல்ல உரிமை ஆகியவைகளில் அவர்களுக்கும் ஒரு சுதந்திரமும் இதுவரை கிடைத்ததாக தெரியவில்லையே. அதற்கு மாறாக அவர்கள் தப்பித்தவறி கோவில்களுக்கோ, அல்லது போஜன சாலைகளுக்கோ சென்றுவிட்டால், அதற்குப் பதிலாக சவுக்கடிப் பிரயோகமும், வசைப்புராணமும்தான் கிடைக்கிறது. இதுதான் அவர்களுக்குக் கிடைத்த சுதந்திரம். ஆலயப்பிரவேச விஷயமாகப் பேசினால், "இது விஷயத்தில் சனாதனிகள் இறங்கிவரும் வரைக்கும் என்னால் ஒன்றும் செய்ய இயலாது" என்று கூறுகிறார் நம் மாகாண பிரதம மந்திரியார். ஒரு மாகாணத்தின் சகல பொறுப்பும், சட்டதிட்டங்களேற்படுத்தும் அதிகாரமும் பெற்ற ஒரு மந்திரிக்கும், பிரஜையான சனாதனிகள் இறங்கி வருவதற்கும் என்னதான் சம்பந்தமிருக்கிறதோ தெரியவில்லை! இவர் நினைத்தால் ஏன் அந்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவர முடியாது? சனாதனிகள் மிரட்டலுக்குப் பயந்துதான் ஆட்சி நடத்துகிறார் போலும். அதே சனாதனிகள் எந்த மசோதா கொண்டு வந்தாலும் அதைத் தலைமேல் வைத்து சட்டமாக்கிவிடுவார் போலும்! இவ்வாறான ஒரு தலை பக்ஷமுள்ள மனிதரிடத்தில் பொது ஜன சேவையை எங்ஙனம் எதிர்பார்க்கமுடியும்?

நண்பன், அன்ப! ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டாய் போலிருக்கிறது. நீ சொல்வது வாஸ்தவமென்றாலும், இவ்வித கொள்கைகள் ஏதோ ஒரு சிலரிடமிருக்கிறதென்றால் இத

னுல் காங்கிரஸ் கொள்கையே கெட்டதென்று கூறிவிடுவதா என்ன? எத்தனையோ காங்கிரஸ் தலைவர்களெல்லாம் இவைகளையும் கண்டித்துத் தானே இருக்கிறார்கள். நாம் பத்திரிகை வாயிலாக அவைகளைப் பார்த்துக்கொண்டுதானே வருகின்றோம். அவைகளை நீ அறியவில்லையா?

நான், நண்பா! அப்படியானல், இவ்வித கொள்கையுடையவர்களை ஏன் காங்கிரஸை விட்டு அற்புறப்படுத்தக் கூடாது? மேலும், மேலும் இவர்களையே தலைவர்களாகவும், மந்திரிகளாகவும் ஏன் ஏற்படுத்த வேண்டும்? எப்பொழுது இவர்களது நடத்தை கெட்டதென்று புலப்பட்டதோ அப்பொழுதே வேறோடு கிள்ளி எறிந்திருக்கலாமே. அதுதானே நீ கூறும் தலைவர்களிடம் காண்பதற்கில்லை!

நண்பன், அன்பா! அது போகட்டும். நீ பிரமாதமாய்க்கூறும் முஸ்லிம் லீக்குதான் இதுவரை என்ன அப்படி சாதித்துவிட்டது? ஏதோ "முஸ்லிம் லீக்கைப் பலப்படுத்துங்கள்" என்று கூறுகிறார்களே தவிர, அது கிரியாம்சையில் ஒன்றும் செய்து காட்டினதாய்க்காணோமே.

நான், நண்பா! நீ கேட்பது சரிதான். ஆனல் கிரியாம்சையில் ஒன்றும் காட்டவில்லை என்பது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. ஏனெனில், இன்றைய காங்கிரஸ் இவ்வளவு உன்னத ஸ்தானம் அடைந்திருப்பதற்குக் காரணம், சென்ற ஒற்றுழையாமை காலத்தில் காங்கிரஸுடன் முஸ்லிம் லீக்கும் ஒத்துழைத்ததேயாகும். அதுவும் தவிர, முஸ்லிம்களுக்கு சட்டசபைகள், அரசியல் ஸ்தாபனம், உத்தியோகம் முதலியவைகளில் சிற்சில ஸ்தானங்களை வாங்கிக் கொடுத்தும் முஸ்லிம் லீக்கே. காங்கிரஸ் முஸ்லிம்களின் மதவிஷயங்களில் தலையிடாது காத்துக்கொண்டு வருவதும் முஸ்லிம் லீக்கே. இந்தியாவில் முஸ்லிம்கள் மெஜாரிட்டியாகவுள்ள மாகாணங்களை இதரர்கள் எவ்விதத்திலும் கலைத்து விடாமல், சட்ட பூர்வமான முறையில் முயற்சி செய்து வெற்றிபெற்றதும், மத்திய சட்டசபையில் மூன்றில் ஒரு பாகம் முஸ்லிம் மெம்பர்களாகவிருக்கவேண்டுமென்று வற்புறுத்துவதும் முஸ்லிம் லீக்கே. இன்னும் இதுபோன்ற எத்தனையோ விஷயங்கள் செய்திருக்கும்போது முஸ்லிம் லீக் என்னதான் செய்துவிட்டது என்று கேட்பது அர்த்தமில்லாத வார்த்தையேயாகும். இதுபோக, எத்தனையோ விஷயங்கள் செய்ய காத்துக்கொண்டுதானிருக்கிறது. அதற்காகவே ஒவ்வொரு இடங்களிலும் முஸ்லிம்லீக் ஸ்தாபிதம் செய்து, அதைப் பலப்படுத்த வேண்டுமென்று கூறப்படுகிறது. ஆனல் சென்ற இடமெல்லாம் இதுவரை முஸ்லிம் லீக்குக்கு ஜெயம் கிடைத்துக்கொண்டுதான் வருகிறது. இப்படியாக முஸ்லிம் லீக் பலப்பட்டுக்கொண்டு வருவதையும், மக்கள் விழித்துக்கொண்டதையும் கண்ட காங்கிரஸார், எங்கு தங்களது கட்சிக்கு ஆபத்து வந்துவிடுமோவென அஞ்சி இன்னும் முஸ்லிம்களை படுகுழியிலாழ்த்தி தம் தொப்பைகளை நிறப்பலாமென சமாதானம் பேச முன்வந்தார்கள். வந்தவர்கள் எந்த முறையில் சமாதானம் பேசவேண்டுமோ அதை விட்டுவிட்டு வெறும் பத்திரிகைகள் மூல்யமாக சமாதானத்தை முடிக்கப் பார்த்தார்கள். அதனல் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை யென்பதைக் கண்ட நம் தலைவர்கள் அதற்கு சில நிபந்தனை விட்டார்கள். நண்பா நீ பத்திரிகை மூல்யமாக பார்த்திருக்கலாம், அந் நிபந்தனைகள் அவர்களுக்குப் பிடிக்கவில்லை போலும்! இதுவரை யாதொரு பதிலையும் காணோம்.

(இதன்பின் சமாதானத்திற்கான சிலவேலைத் திட்டங்கள் நடைபெறுவது தெரிந்து சந்தோஷமடைகிறோம். ப-ர்.)

மேலும், அவர்கள், முஸ்லிம்கள் என்னதான் கேட்கிறார்களென்பது தெரியவில்லை என்று கூறுகிறார்கள். "இத்தனை நாட்களாக எமக்கு இதுவேண்டும், எங்கள் கோறிக்கைகள் இன்னவை, அவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்" என்று ஓலமிட்டதெல்லாம் அவர்களின் காதுகளில் ஏறவில்லைபோலும். முஸ்லிம் லீக் பலப்பட்டு வருவதைக் கண்டு எங்கு தங்களது ஆட்சிக்கு ஆபத்துவந்து விடுமோவென அஞ்சி சமாதானம் பேசமுற்பட்டு ஏமாற்றப்பார்த்தார்கள். இதையெல்லாம் உணர்ந்த நம் தலைவர்கள், அதற்குத் தக்க பதிலுறைத்தார்கள். அவர்கள் சொல்வதை யெல்லாம் அப்படியே ஒப்புக்கொண்டுவிட நம் தலைவர்கள் அவ்வளவு அறிவிலிகளல்ல. அன்னுரை விட எத்தனையோ மடங்கு அறிவுபடைத்தவர்கள் தான். ஆதலால், அவர்களது செய்கையின் கருத்தை விளங்கிக் கொண்டு சரியான சூடு கொடுத்தார்கள். இவ்வித்மான சுத்தப்பொய்யும், ஹம்பக்கும் நிறைந்த பிரசாரத்தின் கபட சூழ்ச்சிகளை எடுத்துறைத்து மக்களை நேரான வழிக்குக் கொண்டுவந்து அவரவர்களது உரிமைகளை அளிக்கவே முஸ்லிம் லீக் வேலை

செய்துகொண்டு வருகிறது. இன்னும் இதற்கு சரியான பலமளித்து வருவோமானால் கூடிய சீக்கிரத்தில் ஒற்றுமை ஏற்பட்டு விடுதலை பெறலாம்.

நண்பன், அன்பா! நமக்கு உண்மையாக பாடு படக்கூடியது முஸ்லிம் லீக் ஒன்றுதான் என்பதை உன் பிரசங்க வாயிலாகத்தெரிந்து கொண்டேன். இம்முஸ்லிம் லீக்கைப் பலப்படுத்துவதற்கு என்னால் என்னசெய்யவேண்டுமோ அந்தத் தொண்டைச் செய்வதற்கு ஒருபோதும் பின்வாங்கேன். இன்றையிலிருந்து நான் ஒரு இஸ்லாமிய ஊழியன், முஸ்லிம்லீக் தொண்டன், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், என்று பெரும் ஆவேசத்துடன் கூறினான். அத்துடன் எங்களது பேச்சு முற்றுப்பெற்றது. நண்பனும் விடைபெற்றுச் சென்றான்.

இஸ்லாமிய ஒற்றுமை ஓங்குக! முஸ்லிம் லீக் ஜெயம் பெருக!! அல்லாஹு அக்பர்!!!

நமது சுகாதார நிலை

நமது இந்தியாவிற்குத் தென் கிழக்கேயுள்ள ஆஸ்டிரேலியாவில் வாழும் மக்களது மரண விகிதத்தை பார்க்கையில் அங்குள்ளோரின் சராசரி வயது 61 என்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நமது இந்தியாவில் வதியும் மக்களது மரண விகிதத்தைப் பரிசீலனை செய்து பார்த்ததில் இந்தியர்களது சராசரி வயது 21 என்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தவிரவும், உலகிலுள்ள பல்வேறு தேசங்களில் வசிக்கிற ஜனங்களது சராசரி வயதினைச் சீர் தூக்கிப் பார்க்கும்போது இந்தியர்களது வயதுதான் எல்லாருக்கும் கடைசித் தரமாக இருக்கிறது என்று வெளியாகிறது. ஜீவிக்கச் செய்வதும் மரிக்கச் செய்வதும் இறைவன் தான், அவனுக்குத் தான் இதில் பூரண அதிகார மிருக்கிறது என்பது நமது இஸ்லாம் மதத்தின் கொள்கையாக இருந்தாலும் இதுகாரண உலகமாக இருப்பதால் இவ்வுலகில் நிகழும் சகல காரியங்களுக்கும் காரணங்க ளில்லாமற் போகவில்லை. ஆகவே, அக் காரணங்களைக் கண்டுபிடித்துத் திருத்திக் கொள்ள வேண்டியதும் நமது கடமையாகும். நமது இந்தியர்களுக்கு மட்டிலும் இவ்வளவு சொற்ப வயதிருப்பதற்குப் பல காரணங்க ளில்லாமற் போகவில்லை. அவைகளைக் கவனித்துத் திருத்திக் கொள்வதுதான் அறிவுடைமையாகும்.

முதலாவது நம்முடைய பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இரண்டாவது நமது சுகாதாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக செய்யப்பட்டிருக்கும் முறைகள் சரியானவைகளல்ல. மூன்றாவது பால்ய விவாகம். இதனால் மிக இள வயதிலேயே நமதுஸ்திரீகள் தாய்மார்களாகி உலக அனுபவக் குறைவால் குழந்தைகளைச் சரிவரக் கவனிக்கத் தெரியாதவர்களாயிருக்கின்றனர். இதனால், சிசு மரணம் அதிகமாக இருக்கிறது. நான்காவதாக மனிதரின் வயது 60 தான் என்பதாக நம்மவர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இத்தியாதி காரணங்களால் நம்மவரது நடுத்தர வயது குறைந்து விட்டது.

மனிதன் தன்னுடைய கடைசி வயது வரை ஜீவித்திருப்பதற்கும், தனது வயதில் அடைய வேண்டியவைகளைப் பூரணமாக அடைவதற்கும் தடையாக இருப்பவைகளில் உணவுக்குறைவும் சுகாதாரத்திற் கேற்ற வசதியின்மையும் முக்கியமானவைகளாகும். இவை சம்மந்தமாகப் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளில் ஓரளவு காரியமும் நிகழ்ந்திருக்கிறது. ஆனால், மனிதர் தங்களது ஜீவியத்தைப் பூரணமாக அடைவதற்குச் செய்யும் முயற்சியில் தப்பெண்ண முள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். நாற்பது வயதை அடைந்தவுடன் தனக்கு வயோதிகம் வந்துவிட்டதாகவும், மரணத்துக்கு நெருங்கிவிட்டதாகவும் கருதுகின்றனர்.

இத் தவறான எண்ணத்தைத் திருத்துவதற்கு இதுவரை முயற்சி செய்யப்படவில்லை. இதனைச் சீர்திருத்துவது அவசியமாகும். மனிதனது நடுத்தர வயது 125 என்று எண்ணும்படியாகப் போதிக்க வேண்டும். இவ்விதமான எண்ணம் உண்டாகிவிட்டால் மனிதரது முயற்

சியில் பெரிய மாறுதல் களுண்டாகி விடுவதுடன் நமது பிற்காலத்தைய சந்ததியினரில் 125 முதல் 200 வயது வரை ஜீவித்திருப்பவர்கள் அநேகருண்டாகி விடுவர்.

இவ்வாறு ஜீவித்திருப்பது முடியாத காரியமல்ல. நமது முன்னோர்களி லநேகர் 125 முதல் 200 வயது வரை ஜீவித்திருந்திருக்கிறார்கள். அவர்களும் நம்மைப் போலவே மனிதர்களாக இருந்தனர். சாமான்ய வாழ்க்கையையே நடத்தி வந்தனர். ஆனால், 60 வயதிற்குமேல் ஜீவித்திருக்க முடியாது என்றும், இதுதான் மனிதனது கடைசி வயது என்றும் அவர்கள் எண்ணி இருக்கவில்லை.

இந்த ஜனங்களைப் பற்றி அமெரிக்காவிலும், பிரான்சிலும் அநேக புத்தகங்கள் விபரமாக எழுதி இருப்பது நமது அதிஷ்டமாகும். இப் புத்தகங்களை வாங்கிப் படிப்பது மிகவும் நல்லது என்பதாக சுகாதார விஷயங்களில் அக்கரை யுள்ளவர்களுக்கு ஆலோசனை சொல்ல விரும்புகிறோம். இப் புத்தகங்கள் நமது நாட்டிலுள்ள புத்தகாலயங்களில் (லைப்ரேரிகளில்) கிடைக்கும்.

இஸ்லாம் மதம் சுகாதார விஷயத்தில் அதிகக் கவனஞ் செலுத்தி இருக்கிறது. இது சம்மந்தமாக கிரியாம்சையில் செய்யக் கூடிய அநேக சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதர தேசங்களிலுள்ள முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்தி இருக்கின்றனர். அங்கு நூற்றுக்கு மேல் ஜீவித்திருப்பவர்கள் ஆயிரக்கணக்கிலிருக்கிறார்கள். துருக்கியில் 100 வயதிற்கு மேற்பட்டவர்கள் 6 ஆயிரம் பேர்கள்வரை இருக்கின்றனர். இதனைப்பற்றிய விவரம் இப்பத்திரிகையின் "செய்தித் திரள்" என்ற தலைப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்கானிஸ்தானிலும் 170—200 வயதுவரை ஜீவித்திருப்பவர்களின் ஜாப்தாவும் அவர்களது வரலாறுகளைப் பற்றிய விவரமும் சிறிது காலத்திற்குமுன் நம் நாட்டுப் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கின்றன. இவ்விஷயங்களில் நாம் கவனம் செலுத்துவதில்லை. அதிலும், நமது ஸ்திரீகளது தேக சௌக்கியத்தை விருத்தி செய்வதற்கு நாம் எவ்வித ஏற்பாட்டையும் செய்வதில்லை. ஸ்திரீகளது சுகாதர நிலையைப்பற்றி கவனம் செலுத்துவது பிற்காலத்தைய நமது சந்ததியின் தேக நிலையைச் சீர்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாததாகும். இவ்விஷயத்தில் முஸ்லிம்கள் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

நிற்க, இக்காலத்திலுள்ள நம்மவருக்கு மருந்துகளின்மீது அதிக நம்பிக்கை இருந்து வருகிறது. இந்த நம்பிக்கை இவ்வளவு அதிகமாக ஏற்பட்டது நமது துர்அதிர்ஷ்டமாகும். மருந்துகளை நாம் நம்பிக்கொண்டிருப்பதைப் பார்க்கினும், நமது உடல் நிலை பாதிக்கப்பட்டு நாம் நோய்வாய்ப்படுவதற்கு இடங்கொடாமல் தக்க தேகாப்பியாசங்களைச் செய்யவேண்டும் என்ற விஷயத்தில் நாம் அதிகமாக அக்கரை செலுத்தி இருக்க வேண்டும். நமது சுகாதார நிலைமையைப்பற்றிப் புதிதாக எழுதப்பட்டுள்ள புத்தகங்களை நாம் படிப்பது நமக்கு அதிகப் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறோம். நம்மிலுள்ள டாக்டர்கள் நமக்கு நோய்களுண்டான பிறகு நமக்குக் கொடுக்கப்பட வேண்டிய மருந்து வகைகளைத்தான் நமக்கு அறிவிக்கின்றார்களே யன்றி, நாம் நோயாளிகளாக ஆகாமவிருப்பதற்குரிய சுகாதார முறைகளை நமக்குக் கூறுகிறார்கள் இல்லை என்பதாக இக்காலத்து டாக்டர்களைப்பற்றி இங்கிலாந்திலுள்ள பிரபல டாக்டரான ஸர் ஆர்புத்நாத் என்பவர் கூறியுள்ளார். ஆகவே, நாம் நமது சுகாதார நிலையைக் காப்பாற்றிக்கொள்வதற்கு இக்காலத்து டாக்டர்களை மட்டிலும் நம்பிக்கொண்டிருக்காமல் சுகாதாரத்தைப்பற்றி பிரபல ஆசிரியர்கள் தங்களது அருமையான காலத்தை இவ்வாராய்ச்சியில் கழித்து பிரயாசையுடன் எழுதியுள்ள நூல்களையும் வாங்கிப் படிக்க வேண்டும். எனவே, இவர்கள் தங்களனுபவத்தினால் கூறியுள்ளவைகளையும் நாம் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே, நமது வாலிப சகோதரர்கள் சுகாதாரங்களைப்பற்றிப் பிரசாரம் செய்வதற்குத் தக்க ஏற்பாடு செய்யும்படியாகவும், சுகாதாரத்தைக் கவனிக்கும்படியாகவும், தங்களது ஸ்தூல சுகத்தைப் பெருக்கிக்கொள்ளும்படியாகவும், கேட்டுக்கொள்கிறோம்.

சுகம் இறைவனாலளிக்கப்பட்ட பெரும் கொடையாகும். இறைவனாலளிக்கப்பட்ட இப் பெரும் அருட்கொடையினால் நாம் பூரணமாகப் பிரயோஜனம் பெறுவதற்கும், இதுசீர்கேடடையாமலிருப்பதற்கும் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், இதில் நாம் கவனஞ்செலுத்துவது கொண்டு நமது பின்னைய சந்ததியினருக்கு அருமையான பொக்கிஷத்தை அனந்தமாகக் கொடுத்தவர்களாகிறோம்.

207435

சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்து அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அநேகர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளையே அனுப்பிக் கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவதினால் வீண் செலவேற்படுகிறது. ஆதலால், அன்பர்கள் தங்கள் பாக்கிகளையும் புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் உடனே அனுப்பி வைக்குமாறு கோறுகிறோம்.

சிலோன் சந்தா நேயர்கள் :—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானால் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய சிலோன் பகுதிகளிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை அவ்விடம் வந்திருக்கும் நம் சங்க பிரதிநிதிகளிடமாவது, அல்லது நமது சிலோன் ஏஜண்ட் மெஸ்ஸர்ஸ் **A.M.K.** ஹாஜி ஸ்டோர் (220, 2-ம் குறுக்கு தெரு, கொழும்பு) இடம் கொடுத்தாவது ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபால் கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதார்களுக்கும் தனித் தனியே தபால் எழுதுவதுகொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் நடைபெற்ற இவ்வருடத்திற்குரிய சந்தா பாக்கியை உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினாங், சிங்கப்பூர், மலாயா :—இவ்விடங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள், நடைபெற்ற ஆண்டுக்குரிய சந்தா பாக்கிகளையும், புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பிக்கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரித்து அபிவிர்த்திக்குக் கொண்டுவருவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

மானேஜர்.

யவ்முந் நபி விழா.

சோதரீர் !

எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களது சிறப்புவாய்ந்த முன் மாதிரியை சகல மானிடர்களுக்கிடையே பிரசாரஞ் செய்வதும், அவர்களைப் பின் பற்றி நடக்கவேண்டும் என்னும் தூதை யாவருக்கும் அறிவித்துவிட வேண்டுமென் பதும்தான் இவ்வியக்கத்தின் பிரதான நோக்கமாகும். இவ்வியக்கம் ஆரம்பமாகி இற்றைக்கு பத்து ஆண்டுகளே செல்படியாயிருக்கின்றனவாயினும், இதனாலேற் பட்ட நற்பயன்கள் அளவிடற்பாலதன்று.

ரபீஉல் அவ்வல்மீ 12-ந் திகதி உலகசிரேஷ்டர் உத்தமத்தூதர் (ஸல்.) அவர்கள் இப்பூவுலகின்கண் ஜனனமான திருநாளாகும். இவ்வாண்டு அந்த நாள் 13-5-38 வெள்ளிக்கிழமை வருகிறது. ஆதலின், அன்று ஒவ்வொரு ஊரின் முஸ் லிம் மக்களும் நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பிரசாரஞ் செய்வதில் கண்ணுங்கருத்துமாயிருந்து, மாலையில் மகாநாடுகள் கூட்டி நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் ஜீவிய சரித்திர வரலாறுகளையும், சம்பவ நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு எடுத்துக்காட்டி, தக்க சொற்பெருக்காற்றுவதுடன் இவ்வாண்டின் விழாவிற்கென்றே தயாரிக்கப்பெற்றிருக்கும் "உதாரண புருஷர் முஹம்மது நபி" என்றும் ஸீரத் நூலை யாவருக்கும் வாசித்துக் காட்டவேண்டும்.

அன்றையதினம் ஒரே பிரசங்கம் உலகம் முழுவதிலும் படிக்கப்படவேண்டு மென்பதே அகில உலக ஸீரத் கமிட்டியாரின் நோக்கமாகும். அதுபோல இவ் வாண்டுக்கென்றே அகில உலக ஸீரத் கமிட்டியார் சிறந்த பேரறிஞர்களைக் கொண்டு எழுதுவித்துப் பிரசுரம் செய்துள்ள உருது நூலை வழமைபோல் நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கம் தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டிருக்கிறது.

ஆகவே, அன்று பிரசங்கிப்பதற்கும் வினியோகிப்பதற்காகவு மென்றே தயாரிக்கப்பட்டுள்ள இந்நூலை ஏராளமாய் வாங்கி வினியோகிப்பீர்களென்று எதிர் பார்க்கிறோம்.

"உதாரண புருஷர் முஹம்மது நபி" (ஸல்.)

1000 பிரதி ரூபா 25; 500 பிரதி ரூபா 13; 250 பிரதி ரூபா 7. 100 பிரதி ரூபா 3. தபால் சார்ஜ் வேறு.

100 பிரதிகளுக்குக் குறையாது ஆர்டர் செய்பவர்களின் பெயர்கள் அப் புத்தகத்தின்மீது அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

N. B.—தபால் செலவு அதிகமாக ஏற்படுமாதலால் நண்பர்கள் கிரயத்தை முன்பணமாக அனுப்பிவைத்து, சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன் பெயரைத் தெரியப்படுத்தினல் அனுப்பிவைப்பதற்கு சௌகரியமாயிருக்கும்.

சிலோன் பகுதியிலுள்ளோர் 100 பிரதிகளுக்கு ரூ. 2 தபால் செலவுக்கு சேர்த்து அனுப்பவேண்டும். ரயில் பார்சல் வசம் அனுப்பமுடியாது.

குறியகாலத்தில் நண்பர்கள் பிரதிகளுக்கு ஆர்டர் செய்வதால் அவர்களுக்கு பிரதிகள் போய்ச் சேர்வதற்கு வசதி கிடைப்பதில்லையாகையால் நண்பர்கள் முன்ன தாகவே தங்களுக்கு இத்தனை பிரதிகள் தேவை என்பதை தெரிவித்து விட்டால் அனுப்புவதற்கு சௌகரியமாயிருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம், காரியதரிசிகள்,

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

43, போஸ்டாபீஸ் தெருவு, சென்னை

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madra[s]
Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-I[slam]
43, Post Office St., G. T. Madras.